கல்கி

KALKI 10.10.2004 ரூ.6.00

ஜெயலட்சுமி
வழக்குரைஞர்
பேட்டி








பாபா பாதையில்... கஜேந்திரா?

கல்கி

10.10.2004



32



காவல்துறை மீது முதல்வருக்கு அதிருப்தியா?

88

அம்மாவின் ஆலய விசிட்! –22

கண்ணே, சந்திரமுகி! – 96



சமீபத்தில் சாருநிவேதிதா மலையாளப் பத்திரிகை ஒன்றில் அளித்த பேட்டியின் தமிழாக்கம், கவிதா சரணில் வெளிவந்துள்ளது. வழக்கம் போல தமிழ் எழுத்தாளர்கள் மீது பல தாக்குதல்களைத் தொடுத்து ஓய்ந்த பின், அதிரடியாக சுந்தர ராமசாமியை, மலையாள நடிகை ஷகிலாவுடன் ஒப்பிட்டுப் பேசியுள்ளார்.

''சுந்தரராமசாமியின் ஜாதகமும், ஷகிலாவின் ஜாதகத்தையே ஒத்திருக்க



• பாரதிபாலன்



• மனுஷ்யபுத்திரன்

வேண்டும். அதனால்தான் அவரும் கேரளாவில் cult figure ஆக முடிந்திருக்கிறது'' என்றிருக்கிறார். இந்த விமர்சனத்தை இலக்கிய உலகம் எப்படி எடுத்து கொண்டிருக்கிறது? மூத்த எழுத்தாளர்கள் பலர், இது குறித்து கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்கள். இது விவாதிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமே அல்ல என்பதே பலரது அபிப்பிராயம். விளம்பரத்திற்காக, கிளப்பப்படும் இது போன்ற சர்ச்சைகள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்றும் பலர் கேட்டுக் கொண்டார்கள். நம்மிடம் பேசிய பாரதிபாலன், மனுஷ்யபுத்திரன் இருவரும் தங்களது எதிர்ப்பை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள்.

''இது அவமானப்படுத்தும் முயற்சி!''

பாரதிபாலன் :

சுந்தரராமசாமி ஒரு பெரிய எழுத்தாளர். அவருக்கென்று இலக்கியத்தில் ஒரு தனி இடம் இருக்கிறது. எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிடக்கூடிய எழுத்தாளர் அல்ல அவர். அப்படியிருக்க, சாருநிவேதிதா அவரைச் சிறிதும் சம்பந்தமில்லாத ஒரு நடிகையுடன் ஒப்பிட்டுப் பேசியுள்ளது வேதனையான விஷயம்.

சாருநிவேதிதாவுக்கு இது ஒன்றும் புதிதல்ல. ஓர் எழுத்தாளன் தனது எழுத்துகள் மூலம் வாசகர்களை ஈர்க்க வேண்டும். ஆனால் இவரோ, தனது அதிரடிப் பேச்சுக்கள் மூலம் எல்லோரது கவனத்தையும் தன் பக்கம் ஈர்க்க முயற்சி செய்து வருகிறார். எல்லா எழுத்தாளர்களைப் பற்றியும் அவர் ஒரு அபிப்பிராயத்தை வைத்திருக்கிறார்.


யாரும் எழுதாததை எழுதுகிறேன் என்ற சொல்லிக்கொண்டு, யார் யாரோ எழுதியதைத் தொகுத்து, கட்டுரைகள் எனும் பெயரில் எழுதி வருபவர் இவர். இவர் சொல்லிக்கொள்வது போல் இவரது படைப்புகளில் எந்தப் புதுமையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நமது கலாசாரத்திற்குப் பொருந்தும் கருத்துகள் எவையெவை, இவற்றால் எந்தவிதமான மாற்றங்கள் ஏற்படும் என்றெல்லாம் சிந்திக்காமல் இயங்குபவர் இவர். சாருநிவேதிதாவின் இந்த ஒப்பீட்டை நாம் புறக்கணிப்பதுதான் சரி.''


மனுஷ்யபுத்திரன் :

ஒரு தமிழ் எழுத்தாளர் மலையாளம்



• சாருநிவேதிதா


ஷகீலாவின் ஜாதக அதிர்ஷ்டம் என்றுதான் முடிவு
வேண்டியிருக்கது. இல்லாவிட்டால் ஷகீலா கேரள
அந்தப் போடு போட்டதற்கு என்னால் எந்த தர்க்க
காண முடியவில்லை.
சுந்தர ராமசாமியின் ஜாதகமும் ஷகீலாவின் ஜாத
ஒத்திருக்க வேண்டும். அதனால்தான் அவரும்
cult figure ஆக முடிந்திருக்கிறது.
கூறவேண்டும்!
• மலையாள இலக்கியம் பற்றி உங்கள் க



• சுந்தரராமசாமி

போன்ற ஒரு சக மொழியில் அறியப் படுவதற்கு, அவரது தகுதியோடு தனிப் பட்ட தொடர்பு களுக்கும், பூகோ ளத்துக்கும் கூட முக்கியப் பங்கு இருக்கிறது. சுந்தர ராமசாமி மலை யாளத்தில் அறியப் படுவதற்கு எந்த அளவு தகுதியான வரோ, அதே அளவுக்கு புதுமைப்பித்தனும், மௌனியும், லா.ச. ரா.வும், அசோகமித்திரனும், கு.அழகிரிசாமியும், தி.ஜானகிராமனும், ஆதவனும் கி.ராஜநாராயணனும் அறியப்பட தகுதியானவர்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக அப்படி நடக்கவில்லை. மலையாள வாசகர் களுக்கோ, எழுத்தாளர்களுக்கோ, பெரும்பாலும் இவர்கள் பெயர்கூடத் தெரியாது. ஆனால் சாருநிவேதிதா முன் வைக்கக்கூடிய இதுபோன்ற தடாலடியான வாக்கியங்கள் செல்லுபடியாகாது. சாருநிவேதிதா தமிழ் இலக்கியம் குறித்தும், பல்வேறு எழுத்தாளர்கள் குறித்தும் இதுபோன்ற ஒற்றை வாக்கியங்களை அவ்வப்போது சொல்லி வந்திருக்கிறார். ஆனால் அவர் தமிழ் இலக் கியம் சார்ந்த எந்தப் பிரச்னையிலாவது, தன் னுடைய பார்வைகளை, கோட்பாடு ரீதியாக விரிவாக முன் வைத்ததில்லை. இத்தகைய அணுகு முறை, தமிழ் இலக் கியப் பரப்பில் ஒரு புழுதி மண்டலத்தை ஏற்படுத்தவே பயன்படும். சுந்தர ராமசாமியின் எழுத்து கள் எவ்வாறு உடலை மறுக்கின்றன என் பதை முன் வைத்து, சாரு ஒரு கட்டுரை எழுதினால், அது பொருட்படுத் திப் பேசத்தக்கது. ஷகிலாவுடன் ஒப்பிடுவது, அவமானப்படுத்தும் ஒரு முயற்சி.



• அந்தக் கட்டுரை

- வண்ணத்துப்பூச்சி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு



ஒரே தமிழ் நூல்!

மாவீரன் நெப்போலியன் ஒரு நூல் நிலையம் வைத்திருந்தான். இலட்சக்கணக்கான நூல்கள் இடம் பெற்றிருந்த அந்த நூல் நிலையத்தில், ஒரேயொரு தமிழ் நூலும் இடம் பெற்றிருந்தது. அது கம்பராமாயணம்!

- ஆர். பிரசன்னா, கரூர்

கிறிஸ்துமஸ்...!

எத்தியோப்பிய நாட்டுக் காலண்டரின்படி, ஆண்டொன்றிற்கு 13 மாதங்களாகும். மாதம் ஒன்றுக்கு 30 நாள்கள் என 12 மாதங்களும், எஞ்சிய 5 தினங்களை 13வது மாதமாகவும் கணக்கிடுகிறார்கள். (லீப் வருடத்தில் மட்டும் 6 நாள்கள் அமையும்) மற்றுமொரு சிறப்பு, உலகெங்கும் கிறிஸ்துமஸ் பண்டிகை டிசம்பர் 25ல் கொண்டாடப்பட, எத்தியோப்பாவில் மட்டும் ஜனவரி ஏழாம் தேதியன்று கொண்டாடப்படுகின்றது.

– ச.ஆ. கேசவன்,
இனாம் மணியாச்சி





நான்ஸ்டாப் நான்சென்ஸ்!

சமீபத்தில் நாகப்பட்டினம் கடற்கரைக்குச் செல்ல நேரிட்டது. ஆர்ப்பரிக்கும் அலைகளில் நனைந்து, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீலம் பாரித்துக் கிடக்கும் உப்பு நீரை சிறு துளி ரசித்து, ருசித்துத் திரும்பிய நான் அதிர்ந்தேன். காரணம், சற்று தள்ளி கடற்கரை ஓரத்திலேயே ஏழு, எட்டு வயது இருக்கும் சிறுமி ஒருத்தி மலம் கழித்துக் கொண்டிருந்த காட்சி தான்!

இப்படிப் பொது இடங்களை இன்னும் எத்தனை நாள்தான் அசிங்கப் படுத்திக் கொண்டிருக்கப் போகிறோம்?


- ஆர். அமுதப்ரியன்,
மகுடஞ்சாவடி

உனக்கெதற்கு உபதேசம்?

மரணப் படுக்கையில் அமைதியாகப் படுத்திருந்த ஜென் குருவிடம் சென்று வணங்கிவிட்டு அருகில் நின்றார் ஞானி லாவோட்சே. "எனக்கு ஏதாவது சொல்லுங்கள் குருவே" என வேண்டினார். குரு தன் வாயை அகலத் திறந்து காட்டி, "உள்ளே என்ன இருக்கிறது?" என்றார். "நாக்கு இருக்கிறது" என்றார் லாவோட்சே. "பற்கள்?" என்று குரு கேட்கவே "இல்லை அய்யனே" என்றார். "ஏன்?" "மென்மையான நாக்கு நிலை பெற்றது. கடினமான பற்கள் விழுந்து விட்டன" என்றார் சீடர்.

"நீ எல்லாம் தெரிந்து கொண்டாய், உனக்கெதற்கு இனி உபதேசம்!" என்று சொல்லிவிட்டு குரு கண் மூடினார்.

- குவளை எழில், சென்னை



4,5 விஷயம்!



தேவையா தேர்தல்?

கல்லூரி ஒன்றின் பக்கமாய் சமீபத்தில் செல்ல நேர்ந்தது. கல்லூரி மாணவர் சங்கத் தேர்தலையொட்டி, நூற்றுக்கணக்கான சுவரொட்டிகள் காம்பவுண்ட் முழுக்க ஒட்டப்பட்டிருந்தன. ஏறக்குறைய அரசியல் கட்சியினர் நடத்தும் சுவரொட்டி யுத்தத்திற்கு இணையாக, ஒருவரையொருவர் தாக்கி விளம்பரம் செய்திருந்தார்கள்.

இந்தச் சுவரொட்டிகளை அச்சடிக்க செலவழிக்கப்பட்ட பணம், மாணவர்களின் பெற்றோர் கடுமையாக உழைத்துச் சம்பாதித்த பணமாகத்தான் இருக்க வேண்டும் என்பதை நினைக்கும்போது, வேதனையாக இருந்தது.

மாணவர்கள் பணம் செலவழித்து கல்லூரித் தேர்தலில் வெற்றி பெற்ற போதிலும், அதனால் குறிப்பிடத்தக்க பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை. மாறாக, மாணவர்களிடையே கோஷ்டி மனப்பான்மையும், பொறாமையுணர்வுமே மிஞ்சும்.

கல்லூரிகளுக்குள் மாணவர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தாம் வேண்டுமென்பதல்ல.

பெற்றோர் - ஆசிரியர் சங்கங்களை கல்லூரிகளில் நிறுவி, மாணவர்களின் பிரச்னைகளை அவ்வப்போது விவாதிக்கலாம். மாணவர்களின் நலனில் பெற்றோர்களைவிட வேறு யாருக்கு அதிக அக்கறை இருக்க முடியும்?

எனவே கல்லூரிகளில் தேர்தல்கள் நடைபெறுவதை, அரசு மறுபரிசீலனை செய்வது நல்லது.

- இரா. சாந்தகுமார், சென்னை



இனி இல்லை இன்ஃப்ளூயன்ஸா!

• ரூபன்



இன்ஃப்ளூயன்ஸா... உலக அளவில் ஆண்டுதோறும் சுமார் நூற்றி ஐம்பது கோடி மக்கள் இந்நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். வைரஸ் கிருமியால் உண்டாகும் இது ஒரு தொற்று நோய். பெரும்பாலும் குழந்தைகளையும், முதியவர்களையுமே இன்ஃப்ளூயன்ஸா கிருமிகள் தாக்குகின்றன என்றால், அதற்குக் காரணம், அவர்களிடம் நோய் தடுப்புச் சக்தி மிகக் குறைவு என்பதுதான்.

தடுப்பூசி மருந்துகளைத் தயாரிப்பதில் தனிக் கவனம் செலுத்தி வரும் அவென்டிஸ் நிறுவனம் (இதுவரை இருபது நோய்களுக்கான தடுப்பு மருந்துகளைக் கண்டுபிடித்திருக்கிறது), இன்ஃப்ளூயன்ஸா நோய்க்கெதிரான தடுப்பூசியையும் கண்டுபிடித்திருக்கிறது. இந்த நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவின் இயக்குனராக விளங்கும் டாக்டர் ஃபிரடெரிக் ரூபன், சென்னைக்கு வந்திருந்தார். அவரிடம் மூன்று கேள்விகளை முன் வைத்தோம்.

நாற்பது வருடங்களுக்கு முன்பே இன்ஃப்ளூயன்ஸாவுக்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுவிட்டாலும், இந்தியாவுக்கு ஏன் அது இவ்வளவு தாமதமாக வரவேண்டும்?

"பிற நாடுகளைப் போல ஒரே சமயத்தில் பலர் கொத்துக் கொத்தாக இந்த நோயினால் இறந்து போகாததால், இந்தியாவில் இதன் கேடுகள் மக்கள் மனத்தில் பதியவில்லை. இப்போது பொதுவாகவே தென் கிழக்கு ஆசிய நாடுகளில், இன்ஃப்ளூயன்ஸா தடுப்பூசியின் அவசியத்தை அதிகமாக உணரத் தொடங்கியிருக்கிறார்கள். ஹாங்காங், சீனா, தைவான், தென் கொரியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் எங்கள் தடுப்பூசிக்கு டிமாண்ட் இருக்கிறது. ஜப்பானில் குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசியை அளித்த காரணத்தினாலேயே, ஆண்டுக்கு நாற்பதாயிரம் பேரின் இறப்பு தடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, நிமோனியா வராமல் தடுப்பதிலும் இந்த தடுப்பூசி பெரும் பங்கு வகிக்கிறது."

உங்கள் தடுப்பூசிக்கு நூறு சதவிகித ஆற்றல் உண்டா?

"இதைச் செலுத்திக் கொள்பவர்களுக்கு இன்ஃப்ளூயன்ஸா நோய் பெரும்பாலும் வராது. அப்படியே வந்தாலும், மருத்துவமனைக்குச் செல்லும் அளவுக்கு அது தீவிரம் அடையாது. உடனே இந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொண்டால், ஜலதோஷமும் நம்மை அண்டாது என்று ஆசைப்படக்கூடாது. இந்தத் தடுப்பூசி இன்ஃப்ளூயன்ஸா நோய்க்கான தடுப்பு மட்டும்தான். அதுவும் வருடத்துக்கு ஒரு முறை போட்டுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், இந்தக் கிருமிகள் கிட்டத்தட்ட வருடத்துக்கு ஒரு முறை புதிய வடிவம் எடுத்துக் கொண்டிருக்கின்றன."

இந்தத் தடுப்பூசிக்கு ஆகும் செலவு எவ்வளவு?

"வருடத்துக்கு, அதாவது ஒரு முறைக்கு 550 ரூபாய். ஒவ்வொரு நிமிடமும் உலகில் நூறாயிரம் பேர் ஏதாவது நோய்க்கான தடுப்பூசி போட்டுக் கொள்கிறார்கள்" என்று கூடுதல் தகவலொன்றையும் கூறி முடித்தார் டாக்டர் ரூபன்.

- ஜி.எஸ்.எஸ்.





SOFA SETS
More than 50 Models
DINING SETS
More than 50 Models
COTS
More than 50 Models
SOFA-cum-BEDS
More than 25 Models
WOODEN WARDROBES
More than 25 Models
Grihapravesam Collections
Take Sathya Furniture to your New Homes. Take Prosperity.
Sathya
Furniture World
Since 1968
Specialist in Custom Made Furniture
One of India's Biggest Furniture Showroom
H.O : Mylapore
(20,000 sq.ft)
139, R H Road,
Next to Sanskrit College,
Ch-4. Ph : 24982930 / 31
Anna Nagar (West)
DABC Bldg.,
6, M T H Road, Padi,
Opp. TVS, Padi, Ch-50.
Ph : 52155929
Velachery
Paramount Park,
358, Velachery-Tambaram
Main Rd, Ch-42
Ph : 52144929
Coimbatore
266, Mettupalayam Road,
Near Saibaba Temple
Bus Stop, Cbe - 43.
Ph : 2452929 / 30
STEEL CUPBOARDS
More than 100 Models
COMPUTER TABLES
More than 25 Models
ENTERTAINMENT SETS
More than 10 Models
Also Available
Office Furniture
Recliner Chairs
Diwans
Kitchen Cabinets
Computer Tables
Office & Industrial Furniture
We also undertake all kinds of Interior Works
Exchange Option available for Old Furniture
Major Credit Cards accepted
BEDROOM FURNITURE
More than 50 Models

இன்றைய தேதியில் ஜெயலட்சுமிக்கு அடுத்தபடியாக தமிழக மக்களின் ஆர்வத்துக்கு ஆளாகியிருப்பவர், அவரது வழக்குரைஞர் அழகர்சாமி. ஜெயலட்சுமிக்காக அவர் வழக்காடுவது, பல்வேறுபட்ட கருத்துகளை ஏற்படுத்தியுள்ள சூழலில், மீடியாவின் ஒட்டுமொத்த கவனமும் ஜெயலட்சுமியிடமே குவிந்திருக்க, ஒரு மாறுதலுக்கு நாம் அழகர்சாமியைச் சந்தித்தோம்.

ஜெயலட்சுமி உங்களுக்கு அறிமுகமானது எப்படி? அவர் உங்கள் உறவினரா?

"தனிப்பட்ட முறையில் ஜெயலட்சுமி எனக்கு அறிமுகம் கிடையாது. நானும் அவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவங்க. இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவங்க. மற்றபடி நான் அவர் உறவினர் எல்லாம் இல்லை."



• ஜெயலட்சுமி

பிறகெப்படி அவருக்காக வாதாட முன் வந்தீர்கள்?

"எங்க ஊர்ப் பெண்ணான ஜெயலட்சுமியைப் பற்றித் தப்புத் தப்பா பத்திரிகைகள்ல செய்தி வந்ததைப் பார்த்து, ஊர்க்காரங்க எல்லோரும் அப்செட் ஆயிட்டாங்க. 'நம்ம ஊர்ப் பொண்ணு இப்படிக் கஷ்டப்படு'தேன்னு எல்லோரும் கூடிப் பேசி, என்கிட்ட வந்து, 'நீ அந்தப் பொண்ணுக்காக வாதாடுய்யா. நம்மள விட்டா அவளுக்கு வேற யாரிருக்கா?'ன்னு கேட்டுக்கிட்டாங்க. நானும் சரின்னு அவங்க வேண்டுகோளை ஏத்துக்கிட்டு வேலையை ஆரம்பிச்சேன்."

நீங்கள் வழக்காட வந்ததும் ஜெயலட்சுமியின் ரியாக்ஷன் என்ன?

"தனக்கு ஆதரவா யாருமே இல்லைன்னு அவங்க நொந்து போயிருந்த ஒரு சூழல்லதான் நான் போனேன். என்னைப் பார்த்ததும் அவங்களால பேசவே முடியலே. அழுதுட்டாங்க."

ஜெயலட்சுமிக்காக வாதாடுகிறீர்கள்... இப்படிப்பட்டவருக்கு உதவுவதற்காக உங்களை யாரும் திட்டவில்லையா? குறிப்பாக உங்கள் குடும்பம்...?

"என் குடும்பம் ஒரு ஸ்போர்ட்டிவ்வான குடும்பம். யாருமே என்னைத் திட்டலை. எங்கம்மா 'உனக்கு இது தொழில். கண்டிப்பா நீ அந்தப் பொண்ணுக்கு நியாயம் வாங்கித் தரணும்டா'ன்னு என்கிட்ட கேட்டுக்கிட்டாங்க. ஆனா வெளிவட்டாரங்கள்ல என்னை நல்லா தெரிஞ்ச நண்பர்கள் உட்பட, பலரும் 'இது உனக்குத் தேவைதானா? ஏன் இந்த மாதிரி ஆளுக்கெல்லாம் வாதாடுறே'ன்னு கோபிச்சுக்கிட்டாங்க. ஆனா வழக்கு ஆரம்பிச்ச பிறகு, எல்லாரும் என்னைப் பாராட்டுறாங்க.

போலீஸை எதிர்த்து வழக்காடுகிறீர்கள்.. பெரிய இடத்தோடு மோதுகிறோம் என்ற அச்சம் இல்லையா?

"என்னைக்கு நான் வக்கீல் தொழிலுக்கு வந்தேனோ, அன்னைக்கே எனக்கு போலீஸைப் பத்தின பயம்

"ஜெயலட்சுமிக்கு நான்தான் செலவழிக்கிறேன்!"



–வழக்குரைஞர் அழகர்சாமி

போயிடுச்சு. அதனால உயிர்ப் பயமெல்லாம் எனக்கில்லை. இந்த ஜெயலட்சுமி வழக்கைப் பொறுத்தவரைக்கும், அஃபிடவிட் ஃபைல் பண்ற வரைக்கும் நிறைய மிரட்டல்கள் வந்தது. மறைமுகமாக சில மிரட்டல்கள் வரும். அதாவது, என்கிட்ட நேரடியா சொல்லாம, மூணாவது, நாலாவது நபர் மூலமா 'எதுக்கு இந்த வேலை'ன்ற மாதிரி பேசுவாங்க. டைரக்டாவும் டெலிபோன்ல மிரட்டல்கள் வந்தது. 'அப்பியரா கிறியே.. நீயெல்லாம் உயிரோட இருப்பியா... வெடிகுண்டு வெச்சு கொல்லுவோம்; வெட்டுவோம்'னெல்லாம் மிரட்டல் வந்துச்சு. எல்லாத்தையும் தாண்டித்தான் இந்த வழக்குல

ஈடுபட வேண்டியிருக்கு."

ஜெயலட்சுமியிடமிருந்து எவ்வளவு ஃபீஸ் வாங்குகிறீர்கள்?

"அவங்ககிட்டருந்து இதுவரைக்கும் ஃபீஸ்னு எதுவும் வாங்கலை. ஃப்ரீயாத்தான் வாதாடுறேன். மாறாக, நான்தான் இதுவரைக்கும் ஒரு ரெண்டாயிரம் ரூபா சாப்பாடு, மத்த செலவுக்குன்னு அவங்களுக்கு செலவழிச்சிருக்கேன்!"

தொடர்ந்து அவருடைய செலவுகளை ஏற்பதாக உத்தேசம் உள்ளதா?

"நம்மளால தொடர்ந்து செய்ய முடியாது. வழக்கு இருக்குறவரைக்கும் இன்னும் ஒரு ஆயிரமோ, ரெண்டாயிரமோ என்னால தர முடியும். அதுக்கு மேல ஜெயலட்சுமி பாடு, ஆண்டவன் பாடு. நம்மால எதுவும் செய்ய முடியாது."



தொடர்ந்து இந்த கேஸை நடத்துவதால் உங்களுக்கு என்ன பலன்? பரபரப்பாகச் செய்தியில் அடிபடலாம் என்பதால், இந்த வழக்கைக் கையாள்கிறீர்களா? இல்லை வேறெதாவதா?

"புகழுக்கோ, இல்லை வேறெதுவுக்கோ ஆசைப்பட்டு நான் இந்த கேஸை நடத்தலை. சின்ன வயசுலேர்ந்து எனக்குப் பொதுநலத்துல ரொம்ப ஈடுபாடு. இதுக்கு முன்னாடி நிறைய கேஸ்களை பணம் வாங்காம நடத்தியிருக்கேன். அது மாதிரிதான் இதுவும். மனித நேய அடிப்படையிலதான் ஜெயலட்சுமி வழக்கை நடத்தறேன். அதே நேரத்துல ஜெயலட்சுமி ஃபீஸ் கொடுத்தா வேணாம்னும் சொல்ல மாட்டேன்."

போலீஸ்காரர்களுடன் உங்களுக்கு ஏதேனும் முன் விரோதம் உள்ளதா? அதனால்தான் ஜெயலட்சுமி வழக்கில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுகிறீர்களா?

"இதுவரை எனக்கோ, என் குடும்பத்துக்கோ எந்தவொரு போலீஸ்காரர் கூடவும் முன்விரோதமோ, பகையோ கிடையவே கிடையாது."

ஜெயலட்சுமியின் துயர வாழ்க்கையை படமாக எடுக்கப் போவதாகச் செய்திகள் வருகின்றன... அவரின் வழக்குரைஞராக இதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

"நிச்சயமா கிடையாது. அப்படிப்பட்ட எந்த முயற்சியையும் நாங்க ஊக்குவிக்க மாட்டோம். அப்படிப் படமாக்கப்பட முயற்சித்தா, நாங்க விடமாட்டோம். கோர்ட்ல ஸ்டே வாங்குவோம். சட்டப்படி நடவடிக்கை எடுப்போம்."

முன்பு மலேஷியப் பெண் கரீஷ்மா வழக்கில் ஆஜராகி பரபரப்பாகப் பேசப்பட்டீர்கள்... தற்போது ஜெயலட்சுமி வழக்கு... தொடர்ந்து இப்படி பிரபலமான வழக்கில் வாதாடுவது, முன்கூட்டியே திட்டமிட்டுச் செய்வதா? அல்லது இயல்பாக அமைந்துவிடுவதா?

"இதுல எப்படி பிளான் பண்ணிச் செயல்பட முடியும்? அந்தந்த நேரத்துல, அது அது தானா அமையுறதுதானே ஒழிய, எந்தவிதமான முன் திட்டமிடலும் இதுல இல்லை!"

நீங்கள் இன்னும் திருமணமாகாதவர். நாளை நீங்கள் பெண் கேட்டுப் போகும் போது, இத்தகைய வழக்குகளில் ஆஜர் ஆனவர் என்பதால் பெண் தர மறுத்தால்...?

"அப்படியெல்லாம் நடக்காதுன்னுதான் நினைக்கிறேன். சொல்லப்போனா, எங்க ஊர்ப் பக்கம் இப்ப எனக்கு பெண் தர சிலர் தயாராவே இருக்காங்க!"

- மு.மாறன், ச.ந.கண்ணன்

படங்கள் : **எழில்**



குரு சுக்ர விநாயகர்!

சென்னை, வடக்கு சைதாப்பேட்டை, அரங்கநாதன் சுரங்கப் பாதை அருகில் உள்ள ஸ்ரீ குரு சுக்ர விக்னேஸ்வரர் ஆலயத்தின் தனிச் சிறப்பே, குருவும் சுக்ரனும் பிள்ளையாருடன் சேர்ந்திருப்பதுதான்!

குரு சுக்ர விக்னேஸ்வரர் வட மேற்குத் திசையில் அமர்ந்து, சுக்ர பகவானுடைய திசையாகிய தென் கிழக்கில் பிரவேசித்து, குரு பகவான் திசையாகிய வடகிழக்கில் தீப ஆராதனையை ஏற்றுக் கொள்கிறார். இந்தக் கோயிலில் சுக்லபட்ச வெள்ளிக்கிழமை, ஐந்து வாரங்கள் தொடர்ந்து வழிபட்டால், நவக்கிரக தோஷம் எவ்வளவு கடுமையாக இருந்தாலும் நீங்கும். அருகம்புல் மாலை சார்த்தி வணங்கினால், சகல காரியங்களும் வெற்றியாகும். லிங்க ஸ்வரூபமான மானசரோவர் மூர்த்திக் கற்கள் இங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது விசேஷமான அம்சம்.


'ஓம் ஸ்ரீ குரு சுக்ர விக்னேஸ்வராய நமஹ' என்பது சக்திமிக்க மந்திரம். தேவி உபாசகர் பிரம்மஸ்ரீ மூக்கனூர் பி.எஸ். ஐயரின் இதயக் கமலத்திலிருந்து அருளப்பட்ட இந்த மந்திரத்தை, தினமும் இருபத்தியொரு முறை பக்தியோடு உச்சரித்தால், வாழ்வில் அனைத்து நலன்களும் வந்து சேரும்.

- ஜெயஸ்ரீ



'எங்க ஊர் பிள்ளையார்'

எனத் தலைப்பிட்டு, வாசகர்களும் விநாயகர் மகிமைகளை, செய்திகளை தகுந்த படங்களுடன் எழுதி அனுப்பலாம். பிள்ளையாரின் அருளுடன் அன்பளிப்பும் உண்டு. மிகச்சிறந்த படைப்புகளுக்கு சிறப்புப் பரிசு காத்திருக்கிறது!



மன்மோகன் சிங் எடுத்து வைத்த முதல் அடி!

"பொடாவை வாபஸ் பெற்றதால் பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டுப் போயிற்று" என்கிறார் ஜெயலலிதா. தமது கருத்துக்கு, அனைத்து மாநில காவல் துறை அதிகாரிகளின் ஆதரவையும் திரட்ட, தலைமைச் செயலகத்திலேயே ஒரு தேசிய செயல்பட்டறை கூட்டி பலரையும் பேசச் செய்தார். இந்தப் பட்டறையில் இரண்டாம் நாள் பேசிய தமிழக ஆளுனர், ஜெயலலிதாவின் கருத்துகளுக்கு முழு ஆதரவு அளித்ததுடன், 'உளவுத்துறை சரியாகச் செயல்பட்டால் தான் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியும்' என்ற அபிப்பிராயத்தையும் அழுத்தமாக வெளியிட்டுள்ளார்.

பொடாவை அறிமுகப்படுத்திய பா.ஜ.க.வோ, தான் ஆளும் மாநிலங்களில், மாநில அரசுகள் தனியொரு பயங்கரவாத தடைச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறது.

முன்பிருந்த தடா சட்டத்தை காவல்துறை மிகுதியாக துஷ்பிரயோகம் செய்தது; மனித உரிமை மீறல்கள் ஏராளமாய் நடந்தன. சாதாரண வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்கள் கூட, 'குற்றத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால் தடா வழக்கு போடப்படும்' என்று மிரட்டப்பட்டனர். இந்த அவலங்கள் சுட்டிக் காட்டப்பட்டதன் பேரில்தான் தடா நீக்கப்பட்டது. ஆனால், பயங்கரவாதம் தொடர்ந்து நிகழ்ந்ததால், தடாவின் இடத்தில்




கல்கி



2004 அக்டோபர் 10
தாரண புரட்டாசி 24
மலர் : 63
இதழ் : 11

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



'பொடா' இயற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்தப் புதிய சட்டமோ, காவல் துறை துஷ்பிரயோகத்துக்கு மட்டுமின்றி, அரசியல் துஷ்பிரயோகத்துக்கும் உள்ளாயிற்று. அதனால்தான் அதையும் நீக்க வேண்டும் என்று குரல் எழுப்பப்பட்டது.

அரசியலும், உளவுத்துறையும், காவல்துறையும் மோசமாக இருப்பதால், பயங்கரவாதத்தை நம்மால் முடக்க முடியாமல் போகிறது என்பதுதான் இன்றைய யதார்த்தம்.


இந்தச் சூழ்நிலையில், பிரிட்டன் - அமெரிக்கா நாடுகளுக்குச் சென்ற பிரதமர், அந்நாட்டுத் தலைவர்களிடம், பயங்கரவாதத்தை ஒழிப்பது குறித்து, மிக விவரமாகவும், தீவிரமாகவும் பேசியிருக்கிறார்.

நீண்ட நெடுங்காலமாக, பயங்கரவாதத்தின் கொடூரத்தை காஷ்மீரில் அனுபவித்து வருகிறது நம் நாடு. கடந்த சில ஆண்டுகளில், இலங்கை விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்துக்கும் நம் நாட்டு உயிர்கள் அநியாயமாய் பலியாகியிருக்கின்றன.

ஆனால், மிகச் சமீபத்தில்தான் (செப்டம்பர் 11, 2001) அமெரிக்கா, பயங்கரவாதத்தின் தாக்கத்தை உணர்ந்துள்ளது. தீர்வுக்காக இல்லாவிட்டாலும், சுய கௌரவத்துக்காகத் திருப்பித் தாக்குவது அமெரிக்காவுக்கு அவசியமாகத் தோன்ற, ஆஃப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் தாக்குதல் நடத்தி, பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் கண்டிருக்கிறது.

'பயங்கரவாத அமைப்புகளின் கண்மூடித்தனத்தால், குற்றமற்ற பொது மக்கள் கொல்லப்படுகிறார்கள் ; தற்கொலைப் படைகளும், கண்ணிவெடிகளும் ஒரு பாவமும் அறியாத குழந்தைகளைக் கூட விட்டு வைப்பதில்லை' என்றெல்லாம் சுட்டிக்காட்டி விட்டு, அதே குற்றத்தை அமெரிக்காவும், அதற்குத் துணை நின்ற பிரிட்டன் முதலான நாடுகளும் செய்தன.

ஆஃப்கானிஸ்தானில் குண்டு மழை பொழிந்து, கொலை வெறியுடன் தாக்கியதுதான்



மிச்சம்; ஒஸாமா பின் லேடனைக் கைப்பற்றவோ, கொல்லவோ முடியவில்லை. "பின் லேடன் உயிரோடுதானிருக்கிறார்" என்று முஷாரஃப் உறுதியாகவே சொல்கிறார்.

ஈராக் அதிபரைப் பிடித்து, விசாரணைக்கு உட்படுத்துகிறது அமெரிக்கா. ஆனால், கூண்டோடு அழிக்கும் கொடூர ஆயுதங்களை அவர் உற்பத்தி செய்தார் அல்லது சேகரித்து வைத்திருந்தார் என்கிற குற்றச்சாட்டை, அமெரிக்காவால் நிரூபிக்கவே முடியவில்லை. பிரிட்டிஷ் பிரதமரோ, ஈராக்கில் அப்படிப்பட்ட ஆயுதங்கள் இல்லை என்றே ஒப்புக் கொண்டுவிட்டார். உளவுத்துறை தவறான தகவல் தந்ததாகவும் ஒப்புக் கொள்ளத் தயாராகிவிட்டார்.

ஆகக்கூடி, உளவுத்துறையை நம்பினாலும் சரி, நேரடித் தாக்குதலில் ஈடுபட்டாலும் சரி, பயங்கரவாதத்தை ஒடுக்கவோ ஒழிக்கவோ இயலவில்லை.

இந்நிலையில் மன்மோகன் சிங், பிரிட்டன், அமெரிக்காவின் துணையுடன் இப்பிரச்னையை தீர்க்க முடியும் என்று எவ்வாறு நம்புகிறார்?

பயங்கரவாதம் என்பது அதிருப்தியின் அதீத விளைவு என்பதை ஒப்புக்கொண்டு, அதிருப்தியை நீக்கி, அரசியல் ரீதியான தீர்வு காண முற்படுவதே அறிவுடைமை.

இந்த யதார்த்தத்துக்கு மதிப்பு கொடுத்து, மன்மோகன் சிங் அரசு முதலடி எடுத்து வைத்திருக்கிறது. காஷ்மீரில் மட்டுமின்றி, வடகிழக்கு மாநிலங்களில் உள்ள தீவிரவாதிகள், ஆந்திராவில் நக்ஸலைட்டுகள் ஆகியோரிடம் அணுகுமுறையை இந்திய அரசு மாற்றிக் கொண்டிருக்கிறது. அம்மாதிரியே அமெரிக்காவும் பிரிட்டனும்கூட மாற வேண்டும் என்று வற்புறுத்துவதும், பேச்சுவார்த்தை மூலம் பயங்கரவாதத்துக்குத் தீர்வுகாண அந்த நாடுகளிடம் வலியுறுத்துவதும், இனி இந்தியாவின் செயல்திட்டமாக இருக்க வேண்டும். அதற்கு முன்னுதாரணமாக இந்தியாவே செயல்பட்டு வெற்றி காணட்டும்.

தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் நடத்துவது சுலபம். சமரசமான அமைதித் தீர்வுக்குப் பாடுபடுவதுதான் கஷ்டம். கஷ்டமான காரியத்தில் வெற்றி பெறுவதுதான், நாட்டின் தலைமைக்குப் பெருமை. ●





குளு குளு ஊட்டியில், கொட்டும் மழைக்கிடையில் நடந்து கொண்டிருந்தது 'அறிவுமணி' படத்தின் படப்பிடிப்பு. ஆனால் படத்தின் நாயகி மீரா வாசுதேவன் மட்டும் ஆப்சென்ட்.

மீராய நமஹ!

வெறுத்துப் போன ஹீரோ முரளியும், இயக்குனர் எம்.ஏ. கென்னடியும், மீரா தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு விரைந்து கதவைத் தட்டியிருக்கிறார்கள். உள்ளேயிருந்து 'சிக்ஸர்!' என்று கத்தியபடியே கதவைத் திறந்தாராம் நாயகி. டி.வி.யில் மினி வேர்ல்டு கப் கிரிக்கெட் ஃபைனல் மேட்ச். "கப் இங்கிலாந்துக்கா, வெஸ்ட் இண்டீஸுக்கான்னு தெரியாம, ஒரு அடிகூட வெளியே எடுத்து வைக்க மாட்டேன்'' என்று அடம்பிடிக்க, வேறு வழியில்லாமல் அவர்களும் இறுதிப் போட்டியை அவருடனிருந்து ரசித்திருக்கிறார்கள்.

உலகக் கோப்பையின்போது 'கிரிக்கெட்டாய நமஹ!' என்று விளம்பரத்தில் கிரிக்கெட் கோலம் போட்ட மீரா வாசுதேவன், கண்ணன் பக்தை மட்டுமல்ல, கிரிக்கெட் பக்தையும்தான். "'உன்னைச் சரணைடைந்தேன்' படத்தில் எனது நடிப்புத் திறமையைக் காட்டினேன். வாய்ப்புகளே வரவில்லை. 'அறிவுமணி'யில் நடிப்புத் திறமையோடு கிளாமரிலும் கலக்கியிருக்கிறேன். தமிழ் ரசிகர்கள் அத்தனை பேரும் விக்கெட்டுகள்'' என்று சவால் விடுகிறார் இந்த மீராய நமஹ! - ஜெ

ஹலோ, இறைவா – 11

உன்னை அறிந்தால்...

சுவாமி போதமயானந்தா



ரங்கராட்டினம் சுற்றிய அனுபவம் உண்டா? சிலருக்கு அது சந்தோஷமானதாக இருக்கும். இன்னும் சிலருக்கு, தலைசுற்ற வைக்கும். ஆனால், ரங்கராட்டினத்தில் எவ்வளவு நேரம், எவ்வளவு வேகமாகச் சுற்றினாலும், அது ஒரே வட்டப்பாதையில் சுற்றிச் சுற்றித்தான் வந்துகொண்டு இருக்குமேயொழிய, அதிலிருந்து ஒரு அடிகூட நகராது.

நம் வாழ்க்கை, ரங்கராட்டினத்தைப் போல அமைந்துவிடக் கூடாது.

வாழ்க்கையை ஓர் ஓட்டப்பந்தயக் களமாக நாம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய தொடர்!



நாம் இலக்கை நோக்கி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் முன்னேற்றம் காண முடியும்; சாதனைகள் புரிய முடியும்.

வாழ்க்கையைப் புரிந்துகொள்ளவும், சாதனைகள் புரியவும், அடிப்படையில் ஒரு விஷயம் முக்கியம். நீங்கள், முதலில் உங்களைப் பற்றி சரியானபடி புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் எப்படிப்பட்டவர் என்று உங்களுக்கே சரியாகத் தெரியவில்லை என்றால், அப்புறம் மற்றவர்கள் எப்படி உங்களைப் பற்றி சரியான முறையில் புரிந்துகொள்வார்கள்?

ஆதிவாசிகளின் கிராமம் ஒன்றில், ஒரு நல்ல மனிதர் இருந்தார். அமைதியான சுபாவமும், அடுத்தவர்களுக்கு முடிந்தவரை உதவுகிற குணமும் கொண்டவர்; வசதியானவர். அவருக்கு ஒரே மகன். ஒருநாள், அத்தனை சொத்துக்களுக்கும் தன் மகனே ஏகபோக வாரிசு என்று அறிவித்துவிட்டு, மனுஷர் மண்டையைப் போட்டுவிட்டார். மகன், தனது அப்பாவைப்

போலவே தோற்றம் கொண்டவர். அமைதியான குணம்.

அப்பா மரணமடைந்து சில மாதங்கள் கழித்து, அப்பாவின் அறையைச் சுத்தம் செய்தான் மகன். அப்போது, அறையின் ஒரு மூலையில் பளபளப்பாக இருந்த ஏதோ ஒன்று அவனது கவனத்தை ஈர்த்தது. கிட்டே சென்று பார்த்தான். அது ஒரு முகம் பார்க்கும் ஆளுயரக் கண்ணாடி. ஆனால், அது கண்ணாடி என்பதோ, முன்னால் நிற்பவரது பிம்பம், அந்தக் கண்ணாடியில் அப்படியே தெரியும் என்பதோ, அதற்கு முன் கண்ணாடியையே பார்க்காத அந்த மகனுக்குத் தெரியவில்லை. எனவே, கண்ணாடியில் தெரிவது, தனது பிம்பம் தான் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் பார்ப்பதற்கு அவனுடைய அப்பா போன்ற தோற்றம் கொண்டவன் என்பதால், கண்ணாடியில் தெரிவது, தன் அப்பாவின் உருவம் என்று நினைத்துக் கொண்டு விட்டான்.

'அப்பா இறந்துவிட்டார். இனி அவரைப் பார்க்கவே முடியாது' என்று எண்ணி ஆழ்ந்த மனவருத்தத்தில் இருந்த மகன், கண்ணாடியில் தன் அப்பாவின் உருவத்தைப் பார்ப்பதாக நினைக்க ஆரம்பித்தவுடன் மிகவும் சந்தோஷப் பட்டான். அப்பாவுடன், அவர் நேரில் இருப்பதாக நினைத்துக்கொண்டு, பேச ஆரம்பித்தான். அதன்பின், தினமும் இரண்டு மூன்று தடவைகளாவது, அப்பாவின் அறைக்குப் போய், ரகசியமாக அவரது கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான்.

அடிக்கடி தன் கணவர், தன்னுடைய அப்பாவின் அறைக்குச் சென்று கொஞ்ச நேரம் செலவிடுவதைக் கண்ட அவரது மனைவி, அந்த அறைக்குள் அப்படி என்னதான் இருக்கிறது என்று பார்க்க விரும்பினாள். ரகசியமாய், அந்த அறைக்குள் சென்று பார்த்தாள். அவளுடைய கண்களில், ஒரு மூலையில் வைத்திருந்த கண்ணாடி பட்டுவிட்டது. அதை எடுத்துப் பார்க்க, கண்ணாடியில் தனது உருவத்தைப் பார்த்தாள். எப்போதும் சிடுசிடுப்புடன் இருக்கும் முகம். புன்னகையை உதிர்த்த அனுபவமே இல்லாத உதடுகள். ஆனால், அது கண்ணாடி என்றோ, அது தன் எதிரில் இருப்பதைப் பிரதிபலிக்கும் குணமுடையது என்றோ தெரியாத அந்தப் பெண்மணி, கண்ணாடியில் வேறு ஒரு பெண்மணி இருப்பதாகவும், அவள் சட்டென்று தன்னைப் பார்த்துவிட்டதால் ஆத்திரப்படுவதாகவும் தவறாக நினைத்துக் கொண்டு விட்டாள். 'ஓகோ! இங்கே உள்ள பெண்மணியைப் பார்த்து, ஜாலியாகப் பேசிக் கொண்டிருப்பதற்காகத்தான் இந்த மனிதர் அடிக்கடி ரகசியமாய் இந்த அறைக்குள் வருகிறார்' என்று முடிவே செய்துவிட்டாள்.

வெளியில் வந்து, அவளுடைய கணவனிடம், "நீங்கள் எதற்காக அந்த அறைக்குள் ரகசியமாய் போய் வருகிறீர்கள் என்று நான் கண்டுபிடித்து விட்டேன். அந்தப் பெண்மணி யார்? அவள் என்னைப் பார்த்தவுடன் வெறுப்புப் பார்வை பார்ப்பதிலிருந்தே அவள் ஒரு போக்கிரிப் பெண் என்பது தெரிகிறது" என்று ஆரம்பித்து, பெரும் சண்டை போட்டாள்.

கணவனோ, "அந்த அறைக்குள் பெண் யாரும் கிடையாது. என் அப்பா

'விவேக'ானந்தர்!

அமெரிக்காவில் இருந்த போது, ஒரு நூல் நிலையத்துக்குச் சென்றார் விவேகானந்தர். நூலகரிடம் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தைக் கேட்டார். சிறிது நேரத்திலேயே புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார் விவேகானந்தர். நூலகர் சினத்துடன், "எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடி எடுத்துக் கொடுத்தேன். இவ்வளவு சீக்கிரம் திருப்பித் தந்துவிட்டீர்களே... புத்தகத்தைப் படித்தீர்களா, இல்லையா?" என்று கத்தினார். "நான் புத்தகத்தை முழுவதும் படித்துவிட்டேன். வேண்டுமானால், நீங்கள் இப் புத்தகத்திலிருந்து எதையாவது கேட்டுப் பாருங்கள். பதில் சொல்கிறேன்" என்றார் விவேகானந்தர் அமைதியாக.

நூலகரும் அவ்விதமே புத்தகத்திலிருந்து சில கேள்விகள் கேட்டார். உடனுக்குடன் சரியான பதில்களைச் சொன்னார் விவேகானந்தர். வியந்து போன நூலகர், "எப்படி இவ்வளவு விரைவாக

இந்தப் பெரிய புத்தகத்தைப் படித்து முடித்தீர்கள்?'' என்று கேட்டார்.

''சிலர் வார்த்தை வார்த்தையாகப் படிப்பார்கள். சிலர் வாக்கியம், வாக்கியமாகப் படிப்பார்கள். இன்னும் சிலர் பத்தி, பத்தியாகப் படிப்பார்கள். சிலர் பக்கம், பக்கமாகப் படிப்பார்கள். நான் புத்தகம், புத்தகமாகப் படிப்பவன்'' என்று பதில் சொன்னார் விவேகானந்தர்.

- பாரதி மகள்



தான் அங்கே இருக்கிறார்'' என்று சொல்ல, ''யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? நான் என் இரு கண்களால், அந்தப் பெண்ணைப் பார்த்தேன்! உன் அப்பா இறந்து இத்தனை நாள் கழித்து, அறைக்குள் அப்பா இருப்பதாகச் சொல்லி என்னை முட்டாளாக்கப் பார்க்கிறாயா?'' இப்படி சண்டை தொடர்ந்தது.

இந்தக் கதையில், கணவன், மனைவி இரண்டு பேருக்கும் தன் உருவம் எப்படி இருக்கும் என்பதே தெரியவில்லை. அதனால்தான் கண்ணாடியில் பார்த்த தனது பிம்பத்தை கணவன், இறந்து போன அப்பாவாகவும், மனைவி வேறு ஒரு பெண்மணியாகவும் நினைத்துக் கொண்டுவிட, அதனால் வந்தது பிரச்னை! எனவே நாம் ஒவ்வொருவரும் - குறிப்பாக மாணவர்கள், தாங்கள் யார் என்பதை சரியானபடி புரிந்துகொள்ள வேண்டியது ரொம்ப அவசியம்.

சாதனை புரிந்த பெரிய தலைவர்கள், விஞ்ஞானிகள், விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள் என்று அனைவருமே, சாதனை புரிவதற்கு அடித்தளமாக இருந்தது, அவர்கள் தங்களைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொண்டார்கள் என்பதுதான். சுவாமி விவேகானந்தர், தமது சொற்பொழிவுகள் பலவற்றிலும், ''நான் இன்று இந்த நிலைமையில் இருப்பதற்கு முக்கியக் காரணம் என்னுடைய தாயும், என் குருவும்தான்'' என்று குறிப்பிடுவார்.

சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம்: விவேகானந்தரின் தந்தை பெரும் செல்வந்தர். தாம் சம்பாதிக்கும் பணத்தை எல்லாம், கொஞ்சம் கூட தயக்கம் இல்லாமல், ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் தாராளமாய் வாரி வழங்கும் குணம் படைத்தவர். இதை கவனித்த விவேகானந்தர், "அப்பா! நீங்கள் சம்பாதிப்பதை எல்லாம், இப்படி எல்லோருக்கும் வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறீர்களே! உங்கள் மகனான எனக்கு என்ன சொத்து மீதமிருக்கும்?'' என்று கேட்டார்.

''மகனே நரேன்!'' என்று விவேகானந்தரை அழைத்த அவரது அப்பா, அவர்கள் வீட்டிலிருந்த பிரம்மாண்டமான, வேலைப்பாடுகள் நிறைந்த கண்ணாடி ஒன்றின் முன்னால் விவேகானந்தரைக் கொண்டு நிறுத்தினார். "கண்ணாடியில் தெரிகிற உனது பிம்பத்தை உற்றுப் பார். அந்த காந்த சக்தி கொண்ட கண்கள், வலிமையான உடல், கூர்மையாகச் சிந்திக்கும் மனம் இவை மூன்றும்தான் நான் உனக்குத் தருகிற சொத்து. இதற்கு இணையாக வேறு சொத்து ஏதும் இந்த உலகில் இல்லை. இந்தச் சொத்து உன்னிடம் இருக்கிறபோது, இதை வைத்து, உலகின் வேறு எந்த சொத்தையும் உன்னால் பெற்று விட முடியும்'' என்றார்.

அப்பா சொல்வதைக் கேட்டபடி, தன் உருவத்தைப் பார்த்த சிறுவன் நரேந்திரனுக்கு, தான் யார்? தன் பலம் என்ன? என்பது புரிந்தது. அவைகளை வைத்துத்தான், நரேந்திரன் என்கிற சிறுவன், சுவாமி விவேகானந்தராக, தன்னை உணர்ந்த ஞானியாக விஸ்வரூபம் எடுக்க முடிந்தது.


எனதருமை இளம் நண்பர்களே! நீங்கள் யார்? உங்கள் சொத்து என்ன? என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உலகை வெல்லப் புறப்படுங்கள்!

(அடுத்த வாரம் சந்திப்போம்)

"ஆஹா... பால்



• அக்கா!



• கால்ல விழறாங்க



• கோதுமை சிலை

காஸ்மோபாலிட்டன் சிட்டி ஆகிவிட்ட பிறகு, சிங்காரச் சென்னைக்கு வெவ்வேறு திசைகளிலிருந்தும் சல்வார், ஜீன்ஸ் அணிந்த வண்ணத்துப் பூச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் வருகையில் பல்மொழிக் கழகமாகிவிட்டது சென்னை. சுதந்திரமாக ஆங்காங்கே உலாவிக் கொண்டிருந்த சில மாணவிகளை மடக்கிப் பிடித்து தமிழகம் தொடர்பான சில கேள்விகளை முன் வைத்தோம்.

முதலில் அகப்பட்டவர் ஷிவ்ப்ரியா, ஜெய்ப்பூரை சேர்ந்த பி.டெக். மாணவி.

"தமிழ்நாடு எப்படியிருக்கு?"

"எங்க ஊர்ல நிறைய கோட்டைகளும் அரண்மனைகளும் இருக்கும். ஆனா சென்னையில் மட்டுமில்லாம, தமிழ்நாட்டிலேயே நினைவுச் சின்னங்கள் ரொம்பக் கம்மியா இருக்கிறது எனக்கு ஆச்சர்யமா இருக்கு. எத்தனை வருட பாரம்பரியம் உங்களுடையது. ஆனாலும் சென்னையில் இன்றும்கூட புதுமையோடு பழைமை உரசிட்டுதான் இருக்கு. அளவான உயர் அடுக்குக் கட்டடங்கள் இருப்பது இயற்கையை மூச்சடைக்காம பாது காத்திட்டிருக்கு." என்று சீரியஸாய் பேசிய வரை, மூச்சுவிட்டுக் கொள்ளச் சொல்லி விட்டு அடுத்தவரைத் தேடினோம். சிக்கியது மும்பை கார்க்கி.

உணவு வகைக்கு பழக்கமாயிட்டீங்களா?

"நான் வட இந்தியப் பெண்கிறதால இட்லி, தோசை எனக்குப் பழக்கமில்லை. ஆனா வெரி நைஸ்யா! எங்க ஊர்ல தமிழ் ஃபுட்ஸ் தாராளமா கிடைக்கும். ஆனா இங்கே சப்பாத்திக்கு குருமாவோ, சாம்பாரோ தான் கொடுக்கிறாங்க... 'டால்' தர்றதேயில்லை. அரிசி உணவை மூணு வேளையும் சாப்பிடறதால, தமிழ்நாட்டுக்காரங்க சீக்கிரம் குண்டாயிடறாங்க. எங்களைப் பாருங்க, கோதுமையில் மோல்ட் பண்ண மாதிரி எவ்வளவு ஸ்லிம்மா இருக்கோம்! ஆனா சமீபத்துல ஹோட்டல்ல பால் கொழுக்கட்டை சாப்பிட்டேன். ஆஹா... என்ன டேஸ்ட் போங்க! இன்னமும் நாக்கு தித்திக்குது.

கார்க்கியை சுவையில் திளைக்க விட்டுவிட்டு, வாரணாசிப் பெண்ணான அம்ரிதா சௌத்ரியிடம் தாவினோம்.

"தமிழக மக்கள் எப்படி?"

கேட்டது தான் தாமதம். மளமளவென்க கொட்ட ஆரம்பித்துவிட்டார்.

"என் ஃப்ரெண்ட் ஒருத்தி கோயமுத்தூர்ல படிக்கறா. 'என்னடி இப்படி பாசமா இருக்காங்க கோவை மக்கள்'னு கதை கதையா சொல்வா. துணிக்கடைக்குள்ளே போனா, 'வாங்கக்கா'னு இவளை கூப்பிடறாங்களாம். நான்கூட சென்னையில ஒருமுறை லைசென்ஸ் இல்லாம ஸ்கூட்டி ஓட்டி, ட்ராபிக் போலீஸ் அங்கிள்கிட்ட மாட்டினப்ப, 'இதெல்லாம் தப்பும்மா'ன்னு சொல்லி, லைசென்ஸ எடுக்க ட்ரைவிங் ஸ்கூல் அட்ரெஸ் எல்லாம் கொடுத்து, பைன் எதுவும் போடாம அன்பா அனுப்பி வைச்சாரு. அச்சா

ஆத்மி ஹேன்னா? சத்தியமா இந்த மாதிரியான அன்பும் அக்கறையும் எந்த மாநிலத்திலயும் கிடையாதுங்க."

அம்ரிதாவால் உண்டான புல்லரிப்பைச் சொறிந்துகொண்டே போபால் ஷில்பாவிடம்,

"தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் பற்றி ஏதாவது தெரியுமா?" என்று பாலிடிக்கஸ் பேசினோம்.

"தமிழ்நாட்டு சி.எம். காலில் அமைச்சருங்க எல்லாம் விழுந்து ஆசிர்வாதம் வாங்கறது ரொம்ப ஆச்சர்யமா இருக்கு. நான் இந்தியா முழுக்க டூர் போயிருக்கேன். ஏன் இங்க மட்டும் ரோடுகள் இவ்வளவு மோசமா இருக்கு? உங்க எம்.எல்.ஏ., எம்.பி. எல்லாம் என்ன பண்றாங்க? டெல்லி அரசியல் செய்திகளில் தமிழ்நாடு பத்தி அடிக்கடி நல்லவிதமா வர்றதைப் பார்த்து என்னவோ நினைச்சு இங்க வந்தேன். ஆனா குடிநீர்ப் பிரச்னையிலிருந்து எதுக்குமே இங்க நிரந்தரத் தீர்வு கிடையாது. யுவர் பீப்பிள் ஆர் ஒன்லி இமோஷனல், நாட் வைஸ் எனஃப் டு செலக்ட் எ ரைட் பர்ஸன்." என்று மிகவும் வருந்தினார் ஷில்பா.

கடைசியாக விசாகப்பட்டினம் ஐஸ்வர்யாவுடன் நமது ரவுண்ட்ஸை முடித்துக் கொள்ள எண்ணி அணுகினோம்.

''தமிழ் செம்மொழியானது பற்றி என்ன நினைக்கறீங்க?"

"வெரிகுட். ஹிந்தி, தெலுங்கு, மலையாளம்னு எல்லா மொழிகளும் தமிழிலிருந்து தானே வந்திருக்கு? அதுக்கான மரியாதையை தமிழுக்கு மத்திய அரசு தந்திருப்பது ஆரோக்கியமான விஷயம். இங்குள்ள தமிழர்களும், தமிழை பத்திரமா பாதுகாக்குறாங்க. ஆட்டோ டிரைவரிடம் தமிழில் பேசினாத்தான் எங்களை வண்டியிலேயே ஏத்துறாரு. அப்புறம் தமிழ்நாட்டுப் பெண்கள் சேலையில் தான் எவ்வளவு மங்களகரமாவும் அசத்தலாகவும் இருக்காங்க! இந்தப் பெருமை சேலையைத் தவிர வேறெந்த உடைக்கு இருக்கு?'' உணர்ச்சிவசப்பட்டு பேசிய ஐஸ்வர்யா, உடுத்தியிருந்தது சத்தியமாய் புடைவை இல்லை.

- எழில்

படங்கள் : முகில்



• தமிழ் ரசிகை



• இயற்கை

கொழுக்கட்டை!"


● சென்ற தேர்தலின்போது சில குட்டிக் கட்சிகளைத் தம்முடன் ஐக்கியப் படுத்திக்கொண்ட ஜார்ஜ் ஃபெர்னாண் டஸ், அதே பாணியில் மீண்டும் சில உதிரிகளை வசப்படுத்தும் நோக்கத்துடன் முக்கிய விழாக்களின்போது தமிழகம் பக்கம் அடிக்கடி தலைகாட்டுவதாக பேச்சு அடிபடுகிறது. இது ஒரு சில லெட் டர் பேடு கட்சிகளை குஷிப்படுத்தியிருந் தாலும், 'புதிய திட்டம்' வகுத்துவரும் மாஜி போர்வாளுக்குச் சோர்வை ஏற் படுத்தியுள்ளதாம்.

● உள்ளாட்சித் இடைத்தேர்தலின் போது நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் உள்ளிட்ட அனைத்து விவ காரங்கள் குறித்தும் அறிக்கை தர, இப் பணியில் சென்றமுறை ஈடுபட்ட அந்த குழுவினரிடமே மே(லி)டம் சார்பாக அசைன்மென்ட் தரப்பட்டுள்ளதாம். விஷயம் கேள்விப்பட்டவர்கள், இப்போது கொஞ்சம் அடக்கி வாசித்திருக்கலாமே எனப் புலம்புகின்றனராம்.

● சிவகாசி பெண்ணால் சிக்கலுக்கு ஆளானவர்கள் தற்போது துறை சார்ந்த பணிகளிலாவது கவனமாகப் பணியாற்றி பெயரைக் காப்பாற்றிக்கொள்ள முனைப் புடன் செயல்படுகிறார்களாம். இதற்காக யாருக்கும் எவ்வித வாக்குறுதிகளையும் கொஞ்ச நாளுக்குத் தருவதே இல்லை என முடிவெடுத்துள்ளார்களாம். இது ஏற் கனவே 'வாக்குறுதிகளை' அளித்துவிட்ட வர்கள் வயிற்றில் புளியைக் கரைக்கிற தாம்.

● மெகா வெற்றிக்கு பிறகு சத்தமாக எல்லாவற்றையும் நிறுத்தி வைத்திருந்த இளங்கோவன், தனது ஆதரவாளர்களின் கடுமையான வற்புறுத்தலையடுத்து அடுத்த இன்னிங்ஸைத் துவக்க முன் வந்துள்ளாராம். தற்போது நடந்து வரும் பூசல்களுக்குப் பதில் தரும் விதமாக ஒரு போட்டி மாநாடு நடத்தலாம் என அவரது ஆதர வாளர்கள் ஆர்வக்கோளாறில் பேசிவிட, அமைதி காக்குமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளார்களாம்.


• அமைதி...



• உதிரிகளை ஒன்றாக்கி...

அம்மாவின் ஆலய விசிட்!


• பனிச் ஆனால் சரி!

● இனி மாதமிருமுறை தமிழகத்துல முக்கிய ஆலயங்களுக்கு அம்மாவின் விசிட் இருக்குமாம். இதற்காக ஆஸ்தான ஜோதிடர்கள் ஆலோசனையுடன் பயணத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறதாம். எப்படியோ... பழுதடைந்த நிலையில் இருக்கும் ஆலயங்கள் 'பனிச்' ஆனால் சரி தான்!

- கலை



தச மஹா வித்யா ஸ்தோத்ராணி

தூய சமஸ்கிருதத்தில் இசைப்பவர்
திருமதி பிரேமா ரங்கராஜன்



லோக மாதாவின் பலவிதமான சக்திகளும், ஸ்வரூபங்களும்தான் தசமஹா வித்யைகளாக பரிணாமம் எடுத்துள்ளன. இவைகளை வழிபடுவதால், ஆசைகள், அபிலாஷைகள் நிறைவேறி, இறுதியில் முக்தியும் கிடைக்கும். திருமதி **பிரேமா ரங்கராஜனால்**, துதிக்கப்படும் மந்திரங்கள், ஆன்மிக பரவசத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த ஒலிதட்டில், மூலமந்திரங்கள், காயத்ரி, ஸ்ரீகணபதி, ஸ்ரீ காளி, ஸ்ரீதாரா, ஸ்ரீ ஷோடசி கல்யாணி, ஸ்ரீ புவனேஸ்வரி, ஸ்ரீ சின்னமாஸ்தா, ஸ்ரீ தூமாவதி, ஸ்ரீ பகலாமுகி, ஸ்ரீ மாதங்கி, ஸ்ரீ கமலாத்மிகா ஆகியோரைப் பற்றி ஸ்தோத்திரங்கள் உள்ளன.

அனைவருக்கும் ஆன்மீக பரவசம் அளிக்க சூப்பர் ஆடியோ (சென்னை) பிரைவேட் லிமிடெட் இந்த ஒலித்தட்டை வெளியிடுகிறது.

ரூ. 200/- மட்டுமே!

Geethanjali

SUPERAUDIO (MADRAS) Pvt. LTD.,
713, Anna Salai, Carex Centre, II Floor,
Chennai - 600 006. INDIA. ☎ 52140068
www.musicandchants.com supertape@yahoo.com.

For Trade Enquiry Contact : 52140067
For Audio Caseettes contact : Varshene Associates 24662244



உங்கள்
உலோகப் பொருட்கள்
என்றும்
பொலிவுடன் விளங்க

இரண்டு வருட வாரண்டி

Thejus™
decorative platings

தங்கம் & செம்பு Platings

24 கேரட் Gold Plated பரிசுப் பொருட்கள்
ரூ. 50லிருந்து விற்பனைக்கு உள்ளது

எங்கள் ஷோரூமுக்கு வருகை தர வேண்டுகிறோம்

(Near Jeeva Park) 'Park View', 3rd Floor, # 85, G.N. Chetty Road,
T. Nagar, Chennai - 600 017. Tel : 2815 6370 Mobile : 98400 21384.
www.thejus.com

Timings: 9.30 am to 7.00 pm **SUNDAY HOLIDAY**

பாபா பாதையில்...

தி.மு.க.விலிருந்து வெளியேற்றப் பட்ட எம்.ஜி.ஆர்., தாமே கதை எழுதி இயக்கிய படம், உலகம் சுற்றும் வாலிபன். அந்தப் படத்தின் வெளியீட்டுக்கு ஒரு போஸ்டர்கூட ஒட்ட முடியாதபடி அன்று அரசியல் நெருக்கடி. ஆனால், இருநூறு நாட்களைக் கடந்து ஓடி, மெகா வெற்றியைச் சந்தித்தது அந்தப் படம். மக்கள் சக்தி எம்.ஜி.ஆரைக் கரை சேர்த்தது. இப்போது ரஜினியின் பாபா, விஜயகாந்தின் கஜேந்திரா படங்கள் அரசியல் நெருக்கடியைச் சந்திக்கின்றன. ரசிகர்களாகிய மக்களோ, இரண்டு படங்களையும் புறக்கணித்திருக்கிறார்கள்!

கோலிவுட் வழியே கோட்டையைப் பிடிப்பது என்ற திட்டத்தோடு (?) சினிமா ஊடகத்தை, தங்களின் கொள்கை பரப்புச் சாதனமாகப் பயன்படுத்தி வரும் ரஜினி, விஜயகாந்த் இருவருக்கும், இவை ஒரே மாதிரியான தோல்விகள்தாமா?

"ஆம், அதில் என்ன சந்தேகம்" என்று அடித்துச் சொல்கிறார், தமிழ்நாடு என்டர்டெயின்மெண்ட் எனும் தமிழ்த் திரைப்பட வளர்ச்சி மற்றும் வசூல் குறித்த பத்திரிகையின் பதிப்பாளர், பத்திரிகையாளர் ராமானுஜம்.

"ரஜினி, விஜயகாந்த் இருவருக்குமே தலைவலியாக அமைந்துவிட்டது பா.ம.க.வின் அரசியல். நீண்ட இடைவேளைக்குப் பிறகு ரஜினி நடிக்கும் படம்; தமது அரசியல் பிரவேச அறிவிப்பை வெளியிடப் போகும் படம் போன்ற எதிர்பார்ப்புகள் ஒரு பக்கம் என்றால், 'திருவண்ணாமலையில் நடந்த பத்திரிகையாளர் கூட்டமொன்றில், ரஜினியை, டாக்டர் ராமதாஸ் தரக்குறைவான வார்த்தைகளால் அர்ச்சித்தார்' என ஒரு பிரபல நாளிதழ் எழுதப் போய், பா.ம.க. தொண்டர்கள் - ரஜினி ரசிகர்கள் இடையே நேர்ந்த கைகலப்பு மறுபக்கம். பாபா படத்துக்குப் பல மடங்கு எதிர்பார்ப்பு கூடியது.

கஜேந்திராவுக்கோ, கள்ளக்குறிச்சி, கல்யாண வீட்டில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஆரம்பித்தது பிரச்னை. 'மக்களைச் சந்திக்காமலேயே மந்திரியாகிறார்கள்' என்று விஜயகாந்த் விமர்சித்தது, மத்திய அமைச்சர் டாக்டர் அன்புமணியைத்தான் மறைமுகமாகக் குறிக்கிறது என்று பத்திரிகைகள் பரபரப்பாக எழுதப் போய், நடுநடுங்கிப் போனார் படத்தின் தயாரிப்பாளர் வி.ஏ. துரை. படத்தை வாங்க ஒப்பந்தம் போட்டிருந்த விநியோகஸ்தர்கள், திடீர் பல்டியடித்து அட்வான்ஸ் தொகையைத் திரும்பக் கேட்க, பா.ம.க - விஜயகாந்த் விவகாரம் படத்தின் வியாபாரத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இது எனது கருத்து அல்ல. நான் விசாரித்து அறிந்த சென்னை, செங்கை, காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல முன்னணி திரைப்பட விநியோகஸ்தர்களின் கருத்து" என்கிறார் இவர்.

ஆனால் பாபா படத்தின் வியாபாரமோ, எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. திட்டமிட்டபடி பாபா படம் வெளியிடப்பட்டது. என்றாலும் வில்லங்கம் வேறு வடிவில் வந்தது. ஆரணிக்கு அருகே பாபா படப்பெட்டி தியேட்டரிலிருந்து கடத்தப்பட்டது, பல தியேட்டர்கள் மீது கல்வீச்சு, பேனர் கிழிப்பு என பா.ம.க.வினரின் ரகளை தூள் பறந்தது. அதையும் மீறி தியேட்டருக்கு வந்த ரஜினி ரசிகர்களுக்கு, எதிர்பாராத ஏமாற்றம்! அவர்கள் எதிர்பார்த்து வ்ந்தது எதுவும் படத்தில் இல்லாததால், பாபாவின் படு தோல்வியைத் தடுக்க முடியவில்லை.

"கஜேந்திரா படமோ, அறிவித்த தேதியில் வெளியாகவில்லை. படத்தின் தயாரிப்பாளர் துரை, எங்கே கஜேந்திரா படத்துக்கு பாபாவின் கதி வந்துவிடுமோ என அஞ்சி, டாக்டர் ராமதாஸைச்

–மெகா அலசல்

கஜேந்திரா?

சந்தித்து சமாதானம் பேசிய பிறகே விநியோகஸ்தர்கள் பெட்டியை வாங்கிக் கொள்ள சம்மதித்தார்கள். இறுதியில் எந்த விளம்பர கேம்பைனும் இல்லாமல், காதும் காதும் வைத்த மாதிரி ரிலீஸ் செய்ய வேண்டியிருந்தது. படம் வெளியாகி இருபத்து நான்கு மணி நேரத்துக்குப் பிறகே பெரும்பாலான ரசிகர்களுக்குத் தெரிய வந்தது'' என பயந்தபடி உண்மையை உடைக்கிறார், கஜேந்திரா படக் குழுவில் பணிபுரிந்த ஒரு தயாரிப்பு நிர்வாகி.



"இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது'' என மறுக்கிறார் அகில இந்திய விஜயகாந்த் ரசிகர் மன்றத் தலைவரான ராமுவசந்தன். "படம் குறிப்பிட்ட தேதியில் வெளியிடப் படாததற்கு, படத்தின் தயாரிப்பாளர் துரை வாங்கியிருந்த கடன்தான் காரணம். வட்டிக்குக் கடன் கொடுத்தவருக்கு செட்டில் பண்ணாமல் படத்தை வெளியிட முயன்றார். இதனால் கடன் கொடுத்தவர் தடுத்தார். இறுதியில் நாங்கள் தலையிட்டு படத்தை வெளியிட உதவியிருக்கிறோம். படம் வெளிவருவதற்கு முதல்நாள், பத்திரிகைகளில் விளம்பரம் வந்ததை நீங்கள் கவனிக்கவில்லையா?'' என்று சூடாக பதிலுக்குக் கேட்கிறார்.

கொஞ்சம் தாமதமாக கவனித்து படம் பார்க்



கச் சென்ற விஜயகாந்த் ரசிகர்களின் விமர்சனமோ, வேறு மாதிரியாக இருக்கிறது.

"ரொம்பப் புதுக் கதைன்னு நினைச்சுப் போனேன். ஆனால் அச்சு அசலா 'பாட்ஷா' படத்தோட கதை. 'பாட்ஷா' படத்தில் ரஜினி போட்ட அதே தாடி வெச்ச கெட்-அப். அதிலேயும் ரஜினி கையிலே முத்தம் கொடுப்பாங்க. இதுலேயும் முத்தம் கொடுக்கிறாங்க. அதுலேயும் சுழல் நாற்காலியிலே உட்கார்ந்து எட்டி உதைப்பார் ரஜினி. இதுலேயும் கேப்டன் அதைத்தான் செய்யுறார். இதைவிட வேதனை, ரஜினி மாதிரியே பக்குன்னு சிகரெட் பத்த வைக்கிறார். சிம்பு, தனுஷ் மாதிரி சின்னப் பசங்க ரஜினி ஸ்டைல் பண்றாங்க. கேட்டா, ரஜினி ரசிகன்னு ஒரு வார்த்தையிலே பதில் சொல்றாங்க. எங்க கேப்டன் எவ்ளோ பெரிய சீனியர் ஹீரோ! அவர் போயி ரஜினி ஸ்டைல் பண்ணலாமா?" - நொந்து போய் பேசுகிறார், வடசென்னை விஜயகாந்த் ரசிகரான எம். ராஜு.

ஒரு சில இடங்களில் மட்டுமே பா.ம.க ரகளை செய்தாலும் ஒட்டுமொத்தமாக தோல்வி கண்டது பாபா. ஆனால் கஜேந்திராவை பா.ம.க.வினர் சீண்டாமலேயே படுத்துவிட்டது. இதை உறுதி செய்கிறது பைரசி சி.டி உலகம்.

"திருட்டு வி.சி.டி.காரர்களே போன் செய்து திட்டுகிறார்கள். கஜேந்திராவின் தோல்வி அவர்களை நிலை குலைய வைத்துவிட்டது" என்கிறார் விவரம் தெரிந்த வேறொரு விநியோகஸ்தர்.

"வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' படம் ரிலீஸ் ஆன மறுநாள், சென்னையில் மட்டும் அந்தப் படத்தின் ஐம்பதாயிரம் திருட்டு வி.சி.டிகள் விற்பனையாகி இருக்கின்றன. மதுரையில் முப்பதாயிரம். 'குடைக்குள் மழை' ஆயிரத்து ஐந்நூறு மட்டுமே விற்றதால், திருடர்களின் கண்களில் கண்ணீர் மழை! கஜேந்திரா படத்தின் சிடிக்களோ, ஐயாயிரம் மட்டும்தான். இப்போது அதிலும் மண் விழுந்துவிட்டது. இதைவிடச் சுவையான ஒரு ஃப்ளாஷ்பேக், பாரதிராஜாவின் மகன் மனோஜ் நடித்து வெளிவந்த 'பல்லவன்' படம் பற்றியது. அந்தப்படம் வெளியான மறுநாளே பெட்டிக்குள் சுருண்டது. மூன்றாவது நாள், படத்தின் அலுவலகத்துக்கு ஒரு ஃபேக்ஸ் வந்தது. "பாவிகளா! உங்களை நம்பி இருபதாயிரம் சிடிக்களை படியெடுத்தோம். ஆனால் ஒன்றுகூட விற்கவில்லை! இந்த நஷ்டத்தை யார் ஈடு கட்டுவது?" என்று கேட்டு, அந்த பேக்ஸ் குமுற, முதல்முறையாக, நஷ்டத்திற்கிடையிலும் சிரித்திருக்கிறார் அந்தத் தயாரிப்பாளர். ஆக, நல்ல கதை இல்லாவிட்டால் பல்லவன் என்ன? பாபா, கஜேந்திரா போன்ற சூப்பர் ஹீரோக்களின் படங்களைக் கூட தமிழ் ரசிகர்கள் சீண்ட மாட்டார்கள்" என்பது விநியோகஸ்தர்களின் வாதம்.


இத்தனை கருத்துகளிருந்தும் வடசென்னையில் புதிதாக கஜேந்திரா ரசிகர் மன்றம் தொடங்கியிருக்கும் ஜி.ஆர். தாமோதரன் மட்டும், விஜயகாந்தை விட்டுக் கொடுப்பதாக இல்லை.



• ஜி.ஆர்.தாமோதரன்



• எம். ராஜு




• ராமானுஜம்

"ஏற்கெனவே அறிவிச்ச மாதிரி செப்டம்பர் பத்தாம் தேதி படம் ரிலீஸ் ஆகியிருந்தால், பெரிய ஹிட்டாகி இருக்கும். ராமதாஸ் சதி பண்ணிட்டார்" என்று குற்றம் சாட்டுகிறார் இவர்!

இதனை பா.ம.க தரப்பு அத்தனை சுலபத்தில் ஒப்புக்கொள்ளுமா என்ன?

"கஜேந்திரா படம் வெற்றி பெற்றதா



• ஜி.கே. மணி



• ராமு வசந்தன்

தோல்வியடைந்ததா என்ற சர்ச்சைக்குள் நுழைய நான் விரும்பவில்லை. ஆனால் இளைஞர்களைக் கெடுக்கும் விதமாகப் படமெடுப்பதைக் கண்டிக்கிறோம். மது அருந்துதல், புகை பிடித்தல், பெண்களை இழிவு படுத்துதல் போன்ற காட்சிகள் தமிழ் சினிமாவில் அறவே ஒழிக்கப்பட வேண்டும். இப்படிச் சொல்வதால் பா.ம.க, திரைப்பட நடிகர்களுக்கோ, தயாரிப் பாளர்களுக்கோ, விநியோகஸ்தர்களுக்கோ எதிராகச் செயல்படும் கட்சி அல்ல. சினிமா ஊடகத்தை விஷமத்தனமாக பயன்படுத்துபவர்களுக்கு எதிரான கட்சி" என்று தங்கள் தரப்பு நியாயத்தைச் சொல்கிறார் பா.ம.கவின் தலைவர் ஜி.கே. மணி.

சொல்லப் போனால் பாபாவுக்கும் கஜேந்திராவுக்கும் நேரடி ஒற்றுமை இல்லாவிட்டாலும், கருத்து ரீதியாக தொடர்புண்டு என்றுதான் கூற வேண்டி யிருக்கிறது. பாபாவில் இந்துத்துவத்தை மையக் கருத்தாக தூக்கிப் பிடித்தார் ரஜினி. கஜேந்திராவிலும் அது உண்டு. பாபாவில் அரசியல்வாதிகளைப் பார்த்து 'என் வழியில் குறுக்கிடாதீர்கள்' என்று ரஜினி எச்சரிக்கை விடுவார். கஜாவும் அடிக்கடி இதே தொனியில் கர்ஜிக்கிறார். அரசியலுக்கு வருவது பற்றி ரஜினி குறிப் பிடும்போது, தமது வழி அரசியலா இல்லை, ஆன்மிகமா என்று குழப்பியிருந் தார். விஜயகாந்தும் தமது அரசியல் பிர வேசம் பற்றி திட்டவட்டமாக எதுவும் சொல்லவில்லை.

ஆனால் இருவருமே தங்கள் அரசியல் ஆசையை வெளிப்படுத் தியிருக்கிறார்கள். ரஜினி அர சியலுக்கு வர வேண்டும் என்று மக்கள் விரும்பிய போது, அவர் வரவில்லை. விஜயகாந்த் அரசியலுக்கு வர வேண்டும் என்று மக்கள் முடிவு எடுக்கும் முன்னரே, விஜயகாந்த் தன்னை முன்னிறுத்துகிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக ரசிகர்கள் தங்கள் மனம் கவர்ந்த ஹீரோக்களிடம் எதிர்பார்த்து வந்தது கிடைக் காததால்தான் இத்தனை தோல்விகள்.

பாட்ஷாவில் ரஜினி அரசியல் பேசவில்லை. தமது தனிப்பட்ட கருத்து களை அதில் திணிக்கவில்லை. அதே போல் ரமணாவில் விஜயகாந்த் தன்னை மட்டும் முன்னிறுத்தவில்லை. இதனால் தான் இந்தப் படங்கள் வெற்றி பெற்றன. பாட்ஷாவின் கதைதான் கஜேந்திரா என்றாலும், விஜயகாந்த் படம் முழுவதும் தன்னை முன்னிறுத்துவதிலேயே குறியாக இருந்திருக்கிறார்.

மொத்தத்தில் கஜேந்திரா பற்றி வரும் தகவல்கள், விஜயகாந்த் வட்டாரத்தை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதன் மூலம் அவரின் அரசியல் பிரவேசமும், சிக்கலாகியிருக்கிறது. பாபா படம் தந்த பாதிப்பால் நிறைய நிதானித்து சந்திரமுகி மூலம் மீண்டும் ரசிகர்களைச் சந்திக்க வருகிறார் ரஜினி. தன்னை மீண்டும் நிரூபித்தாக வேண்டிய கட்டாயம் அவருக்கிருக்கிறது. அது கஜேந்திரா விஜயகாந்துக்கும் பொருந்தும். அடுத் தடுத்த படங்களின் வெற்றி மூலம் கஜேந்திராவின் தோல்வியை அவர் சரி செய்யக் கூடும். ஆனால் அவையும் அரசியல் படங்களாக அமைந்து தயாரிப் பாளர்களுக்கும், ரசிகர்களுக்கும், ஏன், விஜயகாந்துக்குமே பிரச்னையைத் தந்துவிடக் கூடாது என்பதுதான் ஒட்டு மொத்தத் தமிழ்த் திரையுலகின் எதிர் பார்ப்பு.

- ஜோஸ்வாபாரதி

படங்கள் : ராஜன்

பசி

எம்.ஜி.கன்னியப்பன்

வருவோரை வரவேற்று
விருந்தளிக்கும் பந்திகளில்
பொதுவான விருந்தினர்கள்
போதுமெனத் தலையசைக்க
போய்விடுகிறார்கள் பரிமாறுபவர்கள்

என்றாலும்
அருகிலமர்ந்துண்ணும்
மேளக் குழுவினர்
மேடை அலங்காரக் கலைஞர்கள்
ஒளி - ஒலி அமைப்பாளர்கள்
போதுமென
கை நீட்டித் தடுத்தும்
கூடுதலாய் ஒரு தள்ளு சாதத்தை
இலையில் நிரப்புவர்

நிறைத்தும்
ஏதும் மிஞ்சாது இலையில்

வயிறறிந்து
உணவிடுகிறார்கள்
உழைப்பவனுக்குத் தெரியாதா
உழைப்பவனின் பசி!





வீழ்ச்சி

மு.மாறன்

சூறாவளிகளின் கோபம்
செல்லுபடியாகுமிடம்
முருங்கைகளாகவும்
இருக்கின்றன

முறிந்த கிளையிலிருந்து
தரை நழுவி
மூலைக்கொன்றாய்
போக்கிடம் தேடி அலைகின்றன
கம்பளிப் பூச்சிகள்

காய் விழுந்த
இடமாகப் பார்த்தோடிப்
பொறுக்குகிறார்கள்

கொத்துக் கொத்தாய்
பூத்திருக்கும் மலர்களை
தலை சூடி
மகிழ்கிறார்கள் சிறுமிகள்

வியாபார விரல்கள்
வெகு அழகாய்
இணுக்குகின்றன
இலைப் பச்சையை

நீயே இல்லையென்றாகிவிட்டது
நீ வைத்த மரம்
இருந்தாலென்ன
விழுந்தாலென்ன



● மர்லின் மன்றோ

கனவுக்கன்னி

ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களை ஓதிக்கொண்டுள்ள தளம் www.sacred.texts.com/hin/ இவ்வேதங்கள் ஆங்கிலப்படுத்தப்பட்டுள்ளன. சமஸ்கிருதத்தில் 'யுனிகோட்' (unicode) முறையில் கிடைக்கின்றன. மகாபாரதம், இராமாயணம், கீதை, உபநிடதங்கள், மனு சாஸ்திரம் என பலவற்றைச் சுமந்துகொண்டு ஒரு புனிதத்தலம் போல் காட்சியளிக்கிறது இந்தத் தளம். எல்லாவற்றையும் சி.டி. வடிவிலும் ஆர்டர் செய்து வாங்கிக் கொள்ளலாம். 'சிருஷ்டி' முதல் 'சிவன்' வரை எல்லாவற்றிற்கும் அர்த்தம் தேடும் வசதியும் உள்ளது. இந்துத்வா மட்டுமின்றி, உலகில் உள்ள பல மதங்கள், கலாசாரங்கள் பற்றியும் காணக் கிடைக்கின்றன.

கன்னிவெடி பயமின்றி இலங்கையைச் சுற்றிப் பார்க்க ஆசையா? வாருங்கள் Triptosrilanka.com. அனுராதபுரம் முதல் கண்டி வரை பல இடங்களின் வரலாற்றையும், இலங்கையிலுள்ள பீச், ஆறுகள், அருவிகள், தோட்டங்கள் ஆகியவற்றை படங்களுடன் பசுமையாக விளக்குகிறது இத்தளம். இலங்கைக்கு எந்த ஃப்ளைட், எங்கே தங்கலாம் எனப் பல விதங்களில் நீங்கள் அங்கே சென்று ஜாலி பண்ண, தகவல்கள் கிடைக்கின்றன. (தூத்துக்குடியில இருந்து ஏதாவது தோணி கிடைக்குமா?)

முப்பத்தாறு வயதிலேயே பலரை ஏங்க விட்டுப்போன, மர்லின் மன்றோவை பழம் - இளம் ரசிகர்கள் யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அவரை மேலும் ஞாபகப்படுத்துகிறது marilynmonroe.com அவரைப் பற்றி என்னவெல்லாம் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களோ, எல்லாமே கிடைக்கிறது. (அவரின் பயோகிராஃபி மற்றும் நானூறு புகைப் படங்களுடன்) "கடவுளே யாரோ தவறு செய்துவிட்டார்கள். அதனால் என் பெயர் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. எனக்கு ஞாபகமிருக்கிறது. நான் என்றும் நட்சத்திரமல்ல" - இது மன்றோவின் வார்த்தைகள்!



ஜாலி SMS

"ஒரு வாரமா தினமும் காலண்டர் வாங்கிட்டு வர்றியே, எதுக்கு?"

"நீதானே டெய்லி காலண்டர் வாங்கிட்டு வரச் சொன்ன?"

- ப்ரெளசர்



• டெக்னாலஜி ப்ரியன்...

கமலின் தனித்துவம்!



• மார்க்கெட் சூடு பிடிக்க...

பிதாமகன், கஜேந்திரா என இரு படங்களிலும் பிரபல ஹீரோக்களுக்கே சம்பள விஷயத்தில் பிரச்னை ஏற்பட்டதால், தயாரிப்பாளர் வி.ஏ. துரையின் படங்களில் நடிக்க, எந்தவொரு ஹீரோவும் அவ்வளவு சுலபமாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள் எனத் திரையுலகில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

தமது மார்க்கெட் நிலவரத்தை மேலும் நிமிர்த்திக் கொள்ள, சொந்த நிறுவனம் தயாரிக்கும் படங்களில் மட்டுமே நடித்து வருகிறார் பிரசாந்த்.

மாடர்ன் யுவதியான த்ரிஷாவுக்குத் தமிழ் சினிமாவில் கைகொடுப்பது என்னவோ டப்பாங்குத்துப் பாடல்கள்தான். இந்த அலைவரிசையில் அடுத்ததாக விஜய்யுடன் இணைந்து நடிக்கும் திருப்பாச்சியிலும், தினா இசையில் கடச்கட 'டன்டனக்கா' பாட்டு உருவாகி வருகிறது.

“பத்திரிகையாளர்களை வாய் நிறைய 'அண்ணா' என்று கூப்பிடுகிறேன். அப்படியும் அவர்கள் தங்கையான என்னைப் பற்றி கிசுகிசு எழுதுகிறார்களே...” என்று பார்ப்போரிடமெல்லாம் வருத்தப்படுகிறார் பூஜா.



• விருது பெற்றும்...

தேசிய விருது பெற்றும் மீரா ஜாஸ்மின் வசம் ஒரு தமிழ்ப் படமும் கிடையாது. 'ஜெயம்' அடைந்த சதாவின் கையிலும் 'அந்நியன்' மட்டுமே.

• அண்ணா என்றாலும்...

திருட்டு வி.சி.டி. தொடர்பாக தமிழ் சினிமாவே ஒன்றுகூடிப் போராடும் பொழுது, கமல் மட்டும் தனித்துவமான பதிலைத் தந்திருக்கிறார்... “டெக்னாலஜி யுகத்தில் ஒரு படம் வெளியாகும்பொழுதே வி.சி.டி. உரிமையையும் விற்று விடுவதே புத்திசாலித்தனம். இதை நாம் புரிந்துகொள்ளாமல் போனால், டெக்னாலஜியின் அசுர வளர்ச்சியின் முன்பு நாம்தான் பலவீனமாய்ப் போவோம்!” என்பது உலக நாயகனின் கருத்து. கமல் சொந்தப் படம் எடுத்தால் இதைச் செயல்படுத்துவாரா?


- பப்பி






• டன்டனக்கா..

அந்த ஒரு கேள்வி!





த.சேதுராமன்

என்னுடைய பெண் ஐஸ்வர்யாவை நான்காம் வகுப்பு அட்மிஷனுக்காக, அந்தப் பிரபலமான பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப்போயிருந்தேன். பள்ளியில் சேர வந்த குழந்தைகளை 'இண்டர்வியூ' பண்ணிக் கொண்டிருந்தார் தலைமையாசிரியர்.

என்னுடைய முறை வந்தது. 'உட்காருங்கள்' என்று சொல்லிவிட்டு, என் மகளிடம் ஹெச்.எம். கேள்விகள் கேட்க ஆரம்பித்துவிட்டார்.

"உன் பேரென்ன?"

"ஐஸ்வர்யா."

"ஸ்கூலுக்கு கரெக்டா வருவியா?"

"ம்... வருவேன்"

"க்ளாஸ் டீச்சர் சொல்றதை யெல்லாம் கேட்பியா?"

"கேட்பேன்"

"மத்த பசங்களோட சண்டை போட மாட்டியே?"

"மாட்டேன்"

ஐஷுவிடம் கேள்விகளை முடித்துக் கொண்டு என்னிடம் திரும்பி பேச ஆரம்பித்தார் ஹெச்.எம். கொஞ்ச நேரம் அமைதியாயிருந்த என் மகள் திடீரென்று ஹெச்.எம்.மிடம்,

"சார் ஒரு டவுட்..." என்றாள்.

ஆச்சர்யத்தோடு "கேளும்மா" என்றார்.

"ஒண்ணுமில்ல சார்.. ஏதாச்சும் தீப் பிடிச்சிடுச்சுன்னா டீச்சர் எங்களை விட்டுட்டு ஓடிப்போயிட மாட்டாங்களே...?" ●

மனம் வைப்பாரா முதல்வர்..?




• குழந்தைகளுடன் இராமதிலகம்..

அன்றைய விடியல், தனக்கு மட்டும் அஸ்தமனமாக இருக்கப் போகிறதென்று பன்னீர் செல்வத்துக்குத் தெரியவில்லை. எப்போதும் போல் அதிகாலையிலேயே எழுந்தவர், கூடலூர் கிராமத்தின் ஒரு குடிசையில் குடியிருந்து வந்த தம் குடும்பத்தின் தினப்படி கடமைகளை நிறைவேற்ற ஆரம்பித்தார். மனைவியோடு தண்ணீர் எடுத்து, சமையலுக்கு உதவி, பழங்கஞ்சி குடித்து அரை வயிறு நிரப்பி, படுக்கையில் துயிலெழாத தம் ஆறு வயது மகளையும், பிறந்து சில மாதங்களே ஆன மகனையும் முத்தமிட்டுவிட்டு, தமது அன்றாடப் பணிக்குக் கிளம்பினார். பன்னீர்செல்வம் ஒரு கட்டடத் தொழிலாளி. கட்டடத் தொழில் இல்லாத நாட்களில், கிடைக்கும் வேலைகளைச் செய்து வந்தார். அன்றைக்கு அவருக்குக் கிடைத்தது குடிநீர்க் கிணறொன்றை ஆழப்படுத்தும் பணி. சக தொழிலாளர்களுடன் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த போதுதான் திடீரென்று அந்த விபரீதம் நடந்தது!

கிணற்றின் மேலே நின்றிருந்த பன்னீர்செல்வம் ஏதோ கவனத்தில் பிடிப்பை தவறவிட, நிலைதடுமாறி தலைகுப்புற கிணற்றுக்குள் விழுந்தார். நொடியில் எல்லாம் முடிந்துவிட்டது. நடுமுதுகில் பலமான அடி. உயிரே போனதுபோல் இடுப்புக்குக் கீழே அப்படியொரு வலி.

"செத்துப் போயிடக் கூடாதான்னு தோணுச்சுங்க. என்னால அந்த வேதனையைத் தாங்கவே முடியல. அப்புறம் ரொம்பக் கஷ்டப்பட்டு என்னை மேலே கொண்டு வந்து, செங்கல்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போனாங்க. அங்க என் நிலைமையைப் பார்த்து, உடனே பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துட்டுப் போகச் சொல்லிட்டாங்க. அங்க போனா, ரெண்டு நாள் வரைக்கும் எனக்கு எந்தவிதமான முறையான சிகிச்சையும் தரப்படல. டாக்டருங்க வர்றதுமா போறதுமா இருந்தாங்களே தவிர, எனக்கு என்ன பிரச்னைன்னே சொல்லல. கேட்டா 'போட்டோ பிடிக்கணும்' 'ஸ்கேன் பண்ணணும்'னு ஏதாவது சொல்வாங்க. ஒரு கட்டத்துல எங்களுக்கு வெறுத்துப் போச்சு. அப்புறம் நான் வேலை செஞ்ச குழுவோட முதலாளி, என் நிலமையப் பார்த்து, தான் பணம் தர்றதாச் சொல்லி, என்னைத் தனியார் ஆஸ்பத்திரியில சேர்த்தாரு. அங்க கிட்டத்தட்ட ரெண்டு மாசத்துக்கு மேல இருந்தேன். ரெண்டு மூணு ஆபரேஷன் பண்ணாங்க. பணமும் நிறைய செலவாச்சு. ஊர்ல எங்களுக்கிருந்த இடம், பொண்டாட்டி காதுல கழுத்துல இருந்த நகைகள்னு எல்லாத்தையும் வித்து, வைத்தியம் பண்ண வேண்டியதாப் போச்சு. எங்க மொதலாளியும் எவ்வளவுதான் உதவுவாரு. சொல்லுங்க.

ஒரு கட்டத்துல பணம் இல்லாததால ட்ரீட்மெண்ட்ட முழுசா முடிக்காமயே ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வந்தோம். எங்க போறது, என்ன பண்றதுன்னே தெரியல. எங்க வீட்டுப் பக்கம் யாருமே உதவிக்கு வரல. எல்லாரும் கைவிட்டுட்டாங்க. ஆனா என் பொண்டாட்டியோட அக்காவும், அவங்க வீட்டுக்காரரும் மட்டும் எங்கள அரவணைச்சு, தங்கறதுக்கு இடம் கொடுத்தாங்க. இருக்க இடம் கிடைச்சாலும் வைத்தியத்துக்கு



• பன்னீர்செல்வம்

- ஒரு குடும்பத்தின் கதறல்

பணம் இல்லாததால இன்னமும் ஆஸ்பத்திரியிலிருந்து வந்தபோது எப்படி இருந்தேனோ, அப்படியேதான் இருக்கேன். என்னால படுத்த இடத்துலருந்து எழுந்துக்க முடியாது. நடுமுதுகுல அடிபட்டதால இடுப்புக்குக் கீழே உணர்ச்சியே இல்ல. இயற்கை உபாதைகள்கூட இருந்த இடத்திலேயேதான். டியூப் பொருத்திதான் வெளியேற்றனும். மாசத்துக்கு நாலு டியூப் ஆகுது. ஒவ்வொரு முறையும் நர்சுகள் உதவியில்லாம மாத்த முடியாது. தொடர்ச்சியா பிசியோதெரபி செஞ்சா, எனக்கு பழையபடி உணர்வு திரும்ப வழியிருக்குன்னு டாக்டருங்க சொல்றாங்க. ஆனா பணமில்லாததால பிசியோதெரபி செஞ்சுக்க முடியல. நமக்கு வாழ்க்கை நோயோடுதான்னு ஆகிப்போச்சுங்க..." - மேலே பேச முடியாமல் பன்னீர் செல்வத்தின் நா தழுதழுக்கிறது.

"படிக்கிற ரெண்டு சின்னப் பசங்கள வச்சுக்கிட்டு இவருக்கு வைத்தியமும் பார்த்துக்கிட்டு, தினமும் சாப்பிடணும்னா ரொம்பக் கஷ்டமா இருக்குங்க. ஆனா முழு பாரத்தையும் அவங்களே சுமக்க முடியுங்களா? எங்க கஷ்டத்தை முதலமைச்சர்கிட்ட கோரிக்கையா வெச்சு மனு எழுதிக் கொடுத்தோம். அதிகாரிங்க வந்து எங்க நிலைமையைப் பார்த்து, உதவி பண்றதா சொல்லிட்டுப் போனாங்க. ஆனா இதுவரைக்கும் பதிலே இல்ல. ஒன்னுக்கு ரெண்டு முறை மனு கொடுத்தாச்சு. எந்தப் பலனும் இல்ல. இப்பல்லாம் தற்கொலை எண்ணம் தலை தூக்குது... எங்க நிலைமை யாருக்கும் வரக்கூடாதுங்க..."

பன்னீர் செல்வத்தின் மனைவி இராமதிலகம் இப்படிச் சொல்லும்போதே, அருகிலமர்ந்தபடி தாயையே பார்த்துக் கொண்டிருந்த அவரது பெண் மைதிலியின் கண்களும் தளும்புகின்றன.

எங்கோ விளையாடி விட்டு வீட்டுக்குள் நுழைந்த அவர்களின் மகன் சரண், வீட்டின் சூழ்நிலை புரியாமல்,

"அப்பா, நீ எப்பப்பா எழுந்திருப்ப? என் ஃப்ரெண்ட்ஸ்ங்க எல்லாம் அவங்க அப்பாகூட ஜாலியா சைக்கிள்ல ஸ்கூலுக்குப் போறாங்க. நீ எப்பப்பா என்னை சைக்கிள்ல கூட்டிட்டுப் போவ?" என்று கேட்க, உணர்வுகளற்று படுத்திருந்த பன்னீர் செல்வம், தொண்டைக்குள் துக்கத்தை விழுங்கியபடி விட்டத்தை வெறிக்கிறார்.

அவர் பார்த்த இடம் வெற்றிடமாய் இருக்கிறது. அந்தக் குடும்பத்தின் எதிர்காலமும் அப்படித்தான் இருக்கிறது.

- மதுமிதா

படங்கள் : செந்தில்

செங்கல் விதி!

கட்டடம் கட்டும்போது செங்கல் தவறி விழுந்து உடைந்தால் தூக்கிப்போட்டுவிடுவது போலத்தான், கட்டத் தொழிலாளிகளுக்கு விபத்து நேர்ந்தாலும்! கட்டட காண்ட்ராக்ட் கம்பெனிகள் பல, அப்போதைக்கு மனது வைத்துக் கொஞ்சம் உதவி செய்துவிட்டு ஒதுங்கிவிடுகின்றன. நேர் மாறாக, ஒரு சில மனசாட்சியுள்ள கட்டடக் காண்ட்ராக்ட் கம்பனிகள், 'ஒர்க் மேன்ஷிப் காம்பன்சேஷன்' என்று இன்ஷூரன்ஸ் எடுத்து, தொழிலாளியின் கூலியில் குறைந்த சதவிகித அளவு பிடித்துக் கட்டி, விபத்து நேர்ந்தால் இன்ஷூரன்ஸ் மூலம் நஷ்ட ஈடு பெற்றுத் தருகின்றன. எந்த நிறுவனத்துக்காக வேலை நடக்கிறதோ, அதன் பெயரில் ESI பதிவும் செய்து தாங்களே பணம் செலுத்தி, மருத்துவச் செலவுக்கும் சிகிச்சைக்கும் உதவுகின்றன.

தொழிலாளியின் விதி, அவருக்கு வேலை கிடைக்கும் இடத்தைப் பொறுத்ததுதான்!

- ரகு


பிரமிட் தேசம் – 5

இதயம், இறகு, தராசு!

சிவசங்கரி

எல்லா விஷயங்களிலும் நல்லதும் கெட்டதும் இருப்பதைப் போன்று, வெளிநாடுகளுக்குச் செல்லும் குருப் டூரிலும் உள்ளது. தனியாய்ப் பயணம் மேற்கொண்டால், நம் இஷ்டத்துக்கு எழுந்திருக்கலாம். மெதுவாகத் தயாராகி, விருப்பம் போல இடங்களைத் தேர்ந்தெடுத்துச் செல்லலாம். காலார நடக்கலாம். ஒரு கடையிலேயே, அரைநாளைக் கூடக் கழிக்கலாம். இந்த சமாசாரங்களெல்லாம் குருப் டூரில் நடக்காது. காலை எட்டு மணிக்கு ரிசப்ஷனில் இருக்க வேண்டுமென்றால், ஏழு மணிக்கு நம்மை எழுப்பி விடுவார்கள். குளித்து, சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு, எட்டு அடிக்க ஐந்து நிமிஷங்கள் இருக்கையில், நாம் வரவேற்பறையில் ஆஜராகிவிட வேண்டும். "நேற்று ரொம்ப அலைச்சல், களைப்பாக இருக்கிறது. இன்னும் கொஞ்சம் தூங்குகிறேனே!" என்ற கெஞ்சலெல்லாம் இதில் எடுபடாது. பஸ்ஸில் ஏறி, அவர்கள் திட்டமிட்டுள்ள இடங்களுக்குச் சென்று, 'இறங்கு' என்றால் சமர்த்தாய் இறங்கி நடக்க வேண்டும். ஒரு இடத்தைச் சுற்றிக் காண்பித்துவிட்டு, 'அரை மணி அவகாசம் தருகிறேன். கடைக்குச் சென்று ஷாப்பிங் செய்ய விரும்புகிறவர்கள், அதை முடித்துக் கொண்டு டாணென்று வந்துவிட வேண்டும். ஐந்து நிமிஷம் பொறுத்துப் பார்ப்போம்... யாராவது வரவில்லை என்றால் விட்டுவிட்டுச் சென்றுவிடுவோம்' - என்பார் கைடு, கறாராய். (சும்மா பயமுறுத்த இப்படி இவர்கள் சொல்வதில்லை. 'காஸ்மாஸ்' டூரில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற சமயம், மாண்டிகார்லோ என்ற அழகான காஸனோவுக்குச் சென்றபோது, குறிப்பிட்ட நேரத்தில் ஒரு காதல் ஜோடி வந்து சேராமல் எங்கள் பஸ் கிளம்பிவிட, அந்த அர்த்தராத்திரியில் நூறு அமெரிக்கன் டாலர்கள் செலவழித்து, டாக்ஸியில் அவர்கள் பின்னர் ஐம்பது கி.மீ தள்ளியிருந்த ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தது ஒரு தனிக் கதை!)

சரி, இவ்வளவு சட்டதிட்டங்களுடன் ஏன் குருப் டூரில் செல்ல வேண்டும் என்றால் - சொல்கிறேன். மேலே சொன்னவற்றை மைனஸ் என்று சிலர் நினைக்கக் கூடும்... ஆனால் நான் அப்படி எண்ணவில்லை. அது ஒரு கட்டுப்பாடு. அவ்வளவே. தவிர, நாமாகச் செல்லும்போது ஒரு நாளைக்கு இரண்டு இடங்களைத் தேடிப் பிடித்





துப் பார்க்க முடிந்தால், குரூப் டூரில் போகும்போது திட்டமிட்டுச் செல்வதால், பத்து இடங்களை தாராளமாய்க் கண்டுகளிப்பது சாத்தியம். ஆக, நமக்கு என்ன வேண்டும் என்பதை நாம்தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.



• பபைரஸ் செடியுடன்...



• தீர்ப்பு தின பபைரஸ் ஓவியம்

கெய்ரோவில் போய் இறங்கிய மறுநாள் எங்கள் 'குடும்பத்துக்கு' பாப் போட்டு வைத்திருந்த அட்டவணை, மூச்சுவிட நேரமில்லாததாக இருந்தது. எட்டு மணிக்குக் கிளம்பி முதலில் கீஸா; அடுத்து ஒரு வாசனை திரவியக் கடை, பபைரஸ் ஓவியக்கூடம்; ஒரு மணிக்கு 'பகாரா' இந்திய உணவு விடுதியில் மதிய உணவு (எஸ்.ஓ.டி.ஸி போன்ற நிறுவனத்தின் பயணங்களில், சாப்பாட்டுப் பிரச்னை எழவே எழாது. எப்படியும் ஒருவேளை நல்ல இந்திய உணவு கிடைத்துவிடும்!); தொடர்ந்து கெய்ரோ மியூஸியம்; மாலையில் கலிலி மார்க்கெட், இரவு விருந்து நைல் நதிப் படகுச் சவாரியில், பெல்லி நடனம் சகிதம்! மொத்தத்தில் இரவு அறைக்குத் திரும்பிய போது, கால்களும் இடுப்பும் 'எங்களை விட்டுவிடேன்' என்று கொஞ்சத்தான் கெஞ்சின. ஆனால், நாள் முழுவதும் கிட்டிய விதவித அனுபவங்களால் மனசில் சந்தோஷம் நிறைந்திருந்தது.

கீஸா பிரமிடுகளைப் பார்த்து முடித்த கையோடு, அதன் அருகிலேயே இருந்த வாசனை திரவியக் கடைக்கு (Perfumery) போனோம். கடை முழுக்க சின்னதும் பெரிசுமாய்ப் பல வகையான டிஸைன்களில் சென்ட் குப்பிகள். சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் திரவியங்கள் நிரம்பியிருந்த குடுவைகள் சுவரெங்கும் பதித்திருந்த கண்ணாடிகளில் பிரதிபலித்ததோடு, அங்கு நிலவிய பல்வேறு சென்ட் மணங்களும் ஆளை மயக்கின.

அரசாங்கத்தால் நடத்தப்படும் அந்தக்

கடையில், நூற்றுக்கணக்கான வாசனை திரவியங்கள் விற்கப்படுகின்றன. தாமரை, பபைரஸ் என, நானாவித மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட சென்ட் வகையை அன்று முகர்ந்தேன். கடைக்குள் நுழைந்ததுமே நம்மை வரவேற்று அமரச்செய்து, குடிக்க செம்பருத்திப் பூ பானம் தருகிறார்கள். செம்பருத்திப் பூக்களைக் காயவைத்துப் பொடியாக்கி, அதைக் கொதிக்க வைத்து, வடிகட்டி, இப்பானத்தைத் தயாரிக்கிறார்களாம்! இதை 'ஹெல்த் ட்ரிங்க்' என்கிறார்கள்.

உலகப்புகழ் பெற்ற சென்ட்களான ஷேனல், பாய்ஸன், ஜாய் முதலியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு, இங்கிருந்துதான் எசென்ஸ் அனுப்புகிறார்கள். அதாவது விலை உயர்ந்த பல நூறு வகை சென்ட்டுகளுக்கு, இவர்கள் அனுப்பும் எசென்ஸ்தான் அடிப்படைப் பொருளாகிறது. எசென்ஸோடு, ஆல்கஹால் சேர்த்து, ரசாயன மாற்றங்களுக்கு உள்ளாக்கி, கடைகளில் வாங்கும் 'பெர்ஃப்யூம்' தயாரிக்கப்படுகின்றனவாம்! ஒவ்வொரு பூவின் எசென்ஸுக்கும் என்னென்ன சக்தி இருக்கிறது என்று எங்களுக்கு விளக்கிய பெண்மணி பெரிய பட்டியலே போட்டார். "தாமரை எசென்ஸ் மனநிம்மதியைக் கொடுக்கும்; பபைரஸ் சாறு கழுத்து வலியை நீக்கும்; சந்தன எசென்ஸோடு கொஞ்சம் தயிர், தேன் கலந்து முகத்தில் தடவி வந்தால் முகப்பருக்கள், கரும்புள்ளிகள் மறையும்..." இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன்.


சென்ட்டை வழக்கமாய் நாம் மணிக்கட்டுகளில், காதுகளுக்குப் பின்புறம், மார்பில் - என்று பூசுவது போல எகிப்தியர்கள் தடவுவதில்லை. எசென்ஸில் ஒரு சொட்டு எடுத்து, நெற்றிப் பொட்டின் இந்தப் பக்கம், அந்தப் பக்கம், அப்புறம் நெற்றி மத்தியில். அதாவது 'முக்கோண வடிவில்'. எகிப்தியர்களுக்குப் பிரமிட்டை ஒட்டித்தான் அனைத்துமே இயங்கும் போலிருக்கிறது!

வாசனை திரவியம் கடையைத் தொடர்ந்து மதிய உணவுக்கு முன், பெரிய பபைரஸ் ஓவியக் கூடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். ஆதி நாட்களில் எகிப்தியர்கள் ஹீரோகிளைஃபிக் (Heroglypic) என்ற பட எழுத்தில் தங்கள் வரலாற்றை, நம்பிக்கைகளை, பழக்க வழக்கங்களைப் பதிவு செய்ய, பபைரஸ் தண்டிலிருந்து மெல்லிய தாள்களைத் தயாரித்துப் பயன்படுத்தி வந்தனர். பபைரஸ் என்ற சொல்லிலிருந்துதான் 'பேப்பர்' என்ற வார்த்தை வந்ததாகச் சொல்கிறார்கள். பபைரஸ் என்பது கோரைப்புல் வகையைச் சார்ந்த செடி. இதை இங்கு நாம் 'குடைப் புல்' என்று குறிப்பிடுகிறோம். நம்மூரில் பார்க்கும்

> "அது என்னப்பா?"
> "கழுதைடா...!"
> "அதுக்குப் பக்கத்துல இருக்கறது...?"
> "கழுதையோட மனைவி...!"
> "கழுதைகள்கூட கல்யாணம் பண்ணிக்குமா அப்பா...?"
> "கழுதைகள்தான் கல்யாணம் பண்ணிக்கும்...!"
>
> – எம்.ஆர். மூர்த்தி

குடைப் புல் போல் அளவில் சின்னதாக இல்லாமல், ஐந்து, ஆறு அடி உயரத்தில் சுமார் ஓர் அங்குல தடிமனான தண்டுடன் இவை வளர்கின்றன. அந்த ஓவியக் கூடத்தில் பபைரஸ் தண்டிலிருந்து மெல்லிய தாள்களை எப்படி உருவாக்குவது, என்று செய்து காட்டினார்கள். தோல் சீவிய தண்டை, நீளத்தில் மெல்லிசாய் சீவி, அதை அப்படியே மடித்தால் உடைந்துவிடும் என்பதால், அப்பளக் குழவி போன்ற கருவியில் ஒட்டி, தண்ணீரில் மூன்று

நாட்கள் ஊறப் போடுகிறார்கள். துவண்டுவிடும் அப்பட்டைகளைப் பாய் பின்னுவது போல் பின்னி, இரண்டு பலகைகளை நடுவில் இட்டு, அழுத்தம் கொடுத்து, மீண்டும் மூன்று நாட்கள் வைத்து எடுத்தால், மிக மெல்லிய, சுருட்டக்கூடிய தாள் தயார்! இதில் விதவிதமான வர்ணங்களைக் கொண்டு தேவையான சித்திரங்களை வரைகிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட பபைரஸ் ஓவியங்கள், மெருகு குலையாமல் கெய்ரோ அருங்காட்சியகத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.



எகிப்துக்குப் போய்விட்டு பபைரஸ் ஓவியங்கள் வாங்காமல் எவரும் திரும்ப மாட்டார்கள். அவ்வளவு பிரபலம்! ஓவியக் கூடத்தில் ஐம்பது பவுண்டுகளுக்கு விற்கப்படும் ஓவியங்கள் கலீல் மார்க்கெட்டில் ஐந்து பவுண்டுக்குக் கிடைக்கின்றன. கேட்டால், "இது அசல் பபைரஸ், அது போலி!" என்கிறார்கள். அந்தக்கால எகிப்தியப் புராணங்கள் பலவும் பபைரஸ் ஓவியங்களாகக் கிடைக்கின்றன. அவற்றில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுவது 'தீர்ப்பு தினம்' (Judgement Day) என்ற காட்சி.

இறந்தவரின் ஆவி (Cosmic double) பல பயணங்களைச் செய்தபிறகு, இறுதியாக ஓஸைரிஸ் (Osiris) என்ற கடவுளின் தீர்ப்புக்கு வருமாம். அங்கு அனுபிஸ் (Anubis) நீதித் தராசின் பொறுப்பாளராகவும், தோத் (Thoth) தீர்ப்பை எழுதும் எழுத்தராகவும், நாற்பத்து இரண்டு தெய்வங்கள் நீதிபதிகளாகவும் அமர்ந்திருக்க, தராசுத் தட்டில் ஒருபக்கம், இறந்தவரின் இதயம், மறுதட்டில் நெருப்புக் கோழியின் இறகு வைக்கப்படுமாம். இதயத்திடம், "நீ அடுத்தவர் பொருளை எடுத்தாயா?", "அடுத்தவர் மனைவிக்கு ஆசைப்பட்டாயா?" என்பது போன்ற கேள்விகள் வரிசையாகக் கேட்கப்படுமாம். ஏதாவது ஒன்றுக்கு 'ஆம்' என்று கூறி, அந்தத் தராசுத் தட்டு மேலே போய்விட்டாலும், அந்த ஆவி பாவியாகக் கருதப்பட, தயாராக இருக்கும் முதலைத்தலை அமுட் கடவுள் (Ammut) அந்த இதயத்தைத் தின்றுவிடுமாம். அனைத்துக் கேள்விகளுக்கும் இல்லை என்று பதிலளிக்கும் இதயம், பரிசுத்தமானதாக அங்கீகரிக்கப்பட்டு அதன் உடலில் ஆவி பழையபடி புகுந்து கொள்ள அனுமதி அளிக்கப்படும். இந்தக் காட்சியைத்தான் 'தீர்ப்பு தினம்' என்கிறார்கள்!

கடுமையான வெயில், சரியான அலைச்சல், பசி, எல்லாவற்றுக்கும் மேல் எகிப்தியப் புராணக்கதைகளின் நம்ப இயலாத விவரங்களும் சேர்ந்து கொண்டு ஆளை கிறுகிறுக்க வைத்ததில், "அடுத்து 'பகாரா' உணவு விடுதி" என்று பாப் அறிவித்ததும், இடைக்கால நிவாரணம் பெற்ற காவிரி டெல்டா நெற்பயிர் போல நிமிர்ந்து உட்கார்ந்தோம்.

(தொடரும்)



அடையாளம்

"ஸார்... கம்மங்குடி கேட்டீங்களே... நீங்கதானே...?"

கண்டக்டரின் குரல் கேட்டு, மூர்த்தி விழித்துக் கொண்டான். ஊர் வந்து விட்டதை ஜன்னல் வழியே வெளியே பார்த்தான்.

அழகான கம்மங்குடி. சாலையோரத்தில் தியேட்டர். அதன் அருகில் ஐ.டி.ஐ. கட்டடம். அதிலிருந்து பிரிந்து செல்லும் செம்மண் சாலை. வரிசையாகக் கீற்று வீடுகள்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயல் வெளி. நடுநடுவே போர்பம்ப்செட் இருப்பதற்கான சிறிய தகரக் கொட்டகை அடையாளங்கள், மரங்கள்... சிலுசிலுவெனக் காற்று.

கிராமத்தின் நாகரிகக் கலப்பில்லாத தன்மை மனதுக்கு இதமாக இருந்தது.

"ஸார் ஆட்டோ" அருகில் குரல் கேட்டது.

ஆட்டோவோடு ஒருவன் நின்றிருந்தான். கிராமத்தில் ஆட்டோ சர்வீஸ்...!

"கம்மங்குடி போகணும்ப்பா!" என்றான், சொதசொதவென்று கிடந்த சாலையைப் பார்த்தவாறு.

"மேல கம்மங்குடியா...? கீழ கம்மங்குடியா ஸார்...?"

மூர்த்தி சிறிது தடுமாறினான்.

"ராமநாதன் செட்டியார் வீடுப்பா!"

ஆட்டோ சாலையில் உருண்டது. குதித்து குதித்து ஓடியது.

மூர்த்தி ஆட்டோவுக்குள் வசதியாக

உட்கார்ந்து கொண்டான்.

மாமா தளர்ந்து போயிருந்தார். அந்தக் கம்பீரமான உடம்பு இளைத்துப் போயிருந்தது. குரல் மட்டும் அழுத்தம் திருத்தமாக இருந்தது.

"வாய்யா..."

"உங்களைப் பார்க்கிறதுக்கே ரொம்பக் கஷ்டமா இருக்கு



மாமா."

மாமா சிரித்தார்.

"வயசாயிட்டுல்ல! அப்படியே இருந்திட முடியுமா?" வெற்றிலை வாயோடு சிரித்தார்.

"இந்தப் புகையிலை போடற பழக்கத்தை விடக் கூடாதா?"

"இனிமே விட்டு என்னத்த ஆகப் போவுது? நாற்பது வருஷப் பழக்கம். கடைசிக் காலத்துல புகையிலையை ஏன் பகைச்சுக்கணும்?"

"சென்னைக்கு வாங்களேன் மாமா! நல்ல டாக்டரா பார்க்கலாம்!"

"இப்ப தேவலாம்! அப்படியே போகட்டும்! கஷ்டம் நஷ்டம் இல்லாம போயி சேர்ந்திடணும்! வந்த சூட்டோட புறப்பட்டுடாதீங்க! ரெண்டு நாள் இருங்க! குளிச்சிட்டு பலகாரம் சாப்பிடுங்க!" என்றார்.

மூர்த்தி துண்டை எடுத்துக் கொண்டு குளத்தை நோக்கிப் புறப்பட்டான்.

"அடாடா! தம்பி எப்ப வந்தீங்க? பார்க்க முடியுமான்னு நினைச்சிருந்தேன்!"

மாமாவின் தம்பி ஆரவாரமாக வரவேற்றார். முகத்தில் இவனைப் பார்த்துவிட்ட குதூகலம் பொங்கியது. கிராமத்து ஜனங்களுக்கே உரிய பாரம்பரிய இன்முகம், அவரிடம் தெரிந்தது. எப்போதும் வெற்று மார்போடு இருப்பார். இப்போது சட்டை போட்டிருந்தார்.

"ஊருக்குள்ள வரும்போதே நீங்க வழியில நிப்பீங்கன்னு நினைச்சேன்! கண்லயே காணலே!" என்றான்.

"அட! அலைச்சல் தம்பி! பள்ளிக்கூட விவகாரம் ஒண்ணு! கலெக்டர் ஆபீஸுக்கும் ஊருக்குமா அலைஞ்சிக்கிட்டு இருக்

திருவாரூர் பாபு

கேன்! விவகாரம் முடிய மாட்டேங்குது! எங்க குளத்துக்கா?"

"ஆமாம்! தண்ணி இருக்குதுல்ல?"

"நல்லாக் கேட்டீங்க போங்க! ரொம்பி வழியுது! மழை வெளுத்துட்டுதுல்ல!" என்றார்.

"வேற என்ன மாமா விசேஷம்?"

"இப்ப நீங்க வந்திருக்கிறதுதான் விசேஷம்! உங்களையெல்லாம் பார்க்க முடியுமான்னு இருந்துச்சு! அக்கா வாக்கப்பட்ட ஊரை ஞாபகம் வச்சிருக்கீங்களே! அதுவே பெரிய விஷயம்!"

"மல்லிகா எப்படி மாமா இருக்கா?"

சின்ன மாமா பெருமூச்சு விட்டார்.

"மாப்பிள்ளை பார்த்துக்கிட்டு இருக்கேன்! ஒரு வருஷம் பூவும் பொட்டுமா வாழ்ந்தவ! இடும்னு அறுத்துப் போடற மாதிரி ஆயிடுச்சு. ஜாதகம், நாள் கிழமை

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

பார்த்தும் கூட கழுத்துல தாலி நிலைக் கலை. என்னவோ போங்க! பெருந் தன்மையோட யாராச்சும் கல்யாணம் பண்ணிக்க வரணும்! நாலா பக்கமும் சொல்லி விட்டிருக்கேன்! பார்ப் போம்...''

அவர் இப்படிச் சொன்னது மூர்த்திக்கு மகிழ்ச்சியாக இருந்தது. 'கிராமத்தில், கணவனை இழந்த பெண்ணுக்கு இன்னொரு திருமணம் செய்வார்களா!' என்று நினைத்திருந் தான்.

''அதெல்லாம் மாறிட்டுது மாப் பிள்ளை...''

ஆற்றில் நீர் சுழித்துக் கொண்டு ஓடியது.

மூர்த்தி அமைதியாக இருந்தான். கிராமத்துச் சூழ்நிலை மனதுக்கு இதமாக இருந்தது. ஏழு வருடங்களில் நிறைய மாற்றங்கள் தெரிந்தன. கிராமத்து கட்டுப்பட்டித்தனத்திலிருந்து மக்கள் நிறையவே மீண்டிருக்கிறார்கள் என்பது புரிந்தது. அதே நேரம் இவையெல்லாம் காலத்தின் கட்டாயமோ என்கிற எண்ணமும் ஏற்பட்டது.

பெண்கள் மொபெட்டில் போகிறார்கள்... ஊருக்கு ஆட்டோ சர்வீஸ்.

எந்த பாகுபாடும் இன்றி ஆண்கள் சட்டை போட்டுக்கொண்டு நடமாடுகிறார்கள்.

வீட்டில் பாத்ரூம் கட்டியிருக்கிறார்கள்... சாலையோரக் கடையில் சிக்கன் ஃப்ரைடு ரைஸ் கிடைக்கிறது. வி.சி.டி.யில் படம் பார்க்கிறார்கள். விதவைக்கு மறுமணம் செய்வது பற்றி யோசிக்கிறார்கள்.

''அண்ணனுக்கு ரொம்ப சந்தோஷம்!''

''ம்!''

''அக்கா மாமனாருன்னு இல்லாம இவ்வளவு தூரம் புறப்பட்டு வந்திருக்கீங்களே!''

மூர்த்தி சிரித்துக் கொண்டான்.

''ரொம்ப சந்தோஷம்ப்பா! இதுமாதிரி அப்பப்ப வாங்க. கிராமத்து மக்களுக்கு மனுஷங்கதான் ரொம்ப முக்கியம்! உங்களைப் பார்த்ததுல திருப்தி. பழைய ஞாபகம் எல்லாம் வருது. அக்காவுக்கு கல்யாணமாகி இருபது வருஷம் இருக்குமா? அப்ப நீங்க சின்னப் புள்ளை. ஒன்பதாவதோ, பத்தாவதோ படிச்சுக்கிட்டு இருந்தீங்க. காலம்தான் வாகனம் கணக்கா ஓடுதே! ஆமாம் தம்பி, அப்பவே கேட்கலாம்னு இருந்தேன்! உங்களுக்கு செகரேட்டரியேட்ல யாரையாவது தெரியுமா?''

''ஏன் மாமா?''

''ஊர்ல ஒரு பிரச்னை! நம்ம பள்ளிக்கூடத்தை நடுநிலைப் பள்ளியாக்கினாங்க! அப்புறம் பார்த்தா, திடும்னு அங்கீகாரத்தை ரத்துப் பண்ணிட்டாங்க! 'மேல கம்மங்குடிக்கு புள்ளைங்களை அனுப்புங்க'ன்னு சொல்லிட்டாங்க!''

''அப்படியா? ஏன்?''

''அந்த ஊருக்கும் நம்ம ஊருக்கும் நடுவுல ஒரு கிலோ மீட்டர் தூரம்தான் இருக்காம்! மூணு கிலோ மீட்டருக்கு ஒரு நடுநிலைப் பள்ளிதான் இருக்கணுமாம்! ஏதோ குழப்பத்துல முதல்ல அங்கீகாரம் கொடுத்துட்டாங்க! இப்ப ரத்து பண்ணிட்டாங்க!''

''எனக்கு யாரையும் தெரியாதே மாமா!''




''உள்ளே நுழைந்து நம்மளைப் பார்த்ததுமே உங்க நண்பர் எதுக்கு அப்படி சிரிக்கிறாரு?''

- உ. ராஜாஜி



“மூணு தலைமுறையா ஒரே குடும்பம் நாங்க. முப்பது வருஷமா எங்க குடும்பத்தில் ஒரு மெம்பராக இருக்கிறது ஸ்ரீராம் சிட்ஸ்!”

“1974-ம் வருஷம் புதுசா வீடு கட்ட எனக்குப் பணம் தேவைப் பட்டது. அந்த சமயத்தில் சீட்டு சேமிப்பு மூலமா முதலீட்டை எப்படித் திரட்டலாம் என்று எனக்கு சொல்லிக் கொடுத்து உதவியது ஸ்ரீராம் சிட்ஸ். அவங்க அட்வைஸ் பேரில் சீட்டு சேர்ந்து என் வீட்டைக் கட்டினேன். அப்போ இருந்து என் வாழ்க்கையிலே படிப்படியா வளர்ச்சிக்கு உதவினது ஸ்ரீராம் சிட்ஸ்தான்.



மூன்று தலைமுறைகளின் பாசப் பிணைப்பு

இப்போதும் என் மகனும், பேரக் குழந்தைகளுமா, மூணு தலைமுறையும் இந்த ராசியான வீட்டிலே சந்தோஷமா இருக்கோம். முப்பது வருஷமா எங்க குடும்பத்திலே ஒரு மெம்பர் ஸ்ரீராம் சிட்ஸ்!”

ஸ்ரீராம் சீட்டுத் திட்டம்: 3000 ஆண்டுகளாகப் புதுமைப் பொலிவுடன் திகழும் நிகரற்ற சேமிப்புத் திட்டம். சேமிக்கவும், அதிலிருந்தே கடன் பெறவும் வகை செய்யும் இருவழித் திட்டம். ஏல உச்ச வரம்பு 40% ஆக உயர்ந்ததால், கசறுத் தொகை (Dividend) அதிகமாகி வருகிறது.





ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்: ◆ 30 ஆண்டுகளாக பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு வழி காட்டி ◆ ரூ.14,000 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா ◆ பலருக்கு வேலை வாய்ப்பு ◆ தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்.

விஜயதசமி 2004: வெற்றிப் பயணத்தின் துவக்க விழா. ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு இன்றே வாருங்கள். விஜயதசமி விழாவில் பங்கு பெறுங்கள். ஸ்ரீராம் சிட்ஸ் குடும்பத்தில் இணைந்து, வாழ்வின் வெற்றிப் பயணத்தைத் துவக்குங்கள்.



ஸ்ரீராம் சிட்ஸ்

தமிழ்நாடு (பி) லிமிடெட்
சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு,
அண்ணா சாலை, சென்னை 600 002. போன்: 5201 1833

WORDCRAFTS

முப்பது ஆண்டுகளாகத் தொடரும் நிகரற்ற சேவை

"சரி விட்டுத் தள்ளுங்க! சாயங்காலம் மெயின் ரோட்டுக்கு எதுல போறீங்க?"

"மெதுவா நடந்தே போயிடலாம்னு இருக்கேன். ஊரை ஒரு ரவுண்டு வந்த மாதிரி இருக்குமில்ல!"

"அதுவும் சரிதான்! பேச்சுத் துணைக்கு ராமுவை அனுப்புறேன்" என்றார்.

"அனுப்புங்க மாமா!"

மாமா கைகூப்பி வணங்கினார்.

"அம்மாகிட்ட நல்லாருக்கேன்னு சொல்லுங்க! மல்லிகாவுக்கு மாப்பிள்ளை பார்த்துக்கிட்டு இருக்கான் தம்பி! சொன்னானா?"

"சொன்னாங்க!"

பள்ளிக்கூடமா மாறிட்டுதுன்னு எல்லோரும் சந்தோஷமா இருந்தாங்க! அட்மிஷன் கூட போட்டாங்க! ஆனா திடும்னு கேன்சல் பண்ணிட்டாங்க!"

"ஏம்பப்பா! கீழ கம்மங்குடி ஸ்கூல்ல எட்டாவது வரைக்கும் இருக்குது போலயிருக்கே! அங்க அனுப்ப வேண்டியதுதானே?"

"அங்க இருக்கு! ஆனா நம்ம ஊர் லேந்து யாரும் அங்க புள்ளைங்களை அனுப்ப மாட்டாங்க! நான் கூட கும்பகோணம் போயித்தானே படிச்சேன்!"

மூர்த்தி ராமுவைப் பார்த்தான்.

"நடந்து போற தூரம்! பக்கத்



ஜென்மப் பகை

ஒரு முறை ஷீர்டி சாய்பாபா சிறிய கிராமம் ஒன்றின் வழியே நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சாலையோரத்தில் இருந்த மரத்தடியில் ஒரு பாம்பு, தவளை ஒன்றை விழுங்க முயற்சிக்க, தவளை தப்பிக்கப் போராடிக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்த ஷீர்டி சாய்பாபா, "இன்னுமா உங்கள் சண்டை முடியவில்லை?" என்று உரக்கக் கூவினார். உடனே பாம்பும் தவளையும் வெவ்வேறு பாதையில் விலகி ஓடின!

இதைப் பார்த்த சிலர், "உங்கள் குரல் கேட்டதும் பாம்பும் தவளையும் விலகி ஓடிவிட்டனவே!" என்று ஆச்சர்யத்துடன் கேட்டனர்.

அதற்கு பாபா, "போன ஜென்மத்திலிருந்து இவர்களது விரோதம், இந்த ஜென்மத்திலும் தொடர்கிறது. அதை நான் சுட்டிக் காட்டியதும், பழைய நினைவு வந்து வெட்கப்பட்டு ஓடிவிட்டன" என்றாராம்.

- ராஜிராதா

"நல்ல பையனா இருந்தா பார்க்கச் சொல்லுங்க! எல்லா விவரமும் சொல்லிடச் சொல்லுங்க. எதையும் மறைக்க வேணாம்!"

"சரி மாமா!"

கும்பிட்டு விட்டு நகர்ந்தான்.

ராமு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தான்.

"அப்புறம் ராமு! மேற்கொண்டு என்ன படிக்கிறதா இருக்கே?"

"ரிசல்ட் வரட்டும்."

"பள்ளிக்கூடத்துல ஏதோ பிரச்னையாமே! மாமா சொன்னாங்க."

"ஆமாம்! நம்ம ஊர் புள்ளைங்களை எங்க அனுப்பறதுன்னு தெரியலை! இந்தப் பள்ளிக்கூடம் நடுநிலைப்

துலதான ஸ்கூல் இருக்கு" என்றான்.

"ஆமாம்! நடக்கற தூரம்தான்! ஆனா நம்மவங்க அந்த ஊருல கிடையாது!"

மூர்த்தி ராமுவைப் பார்த்தான். யோசனையுடன் கேட்டான்.


"நம்மவங்களா? என்ன சொல்றே?"

"தாழ்த்தப்பட்டவங்க வசிக்கிற ஊரு அது! அவங்க புள்ளைங்க படிக்கிற பள்ளிக்கூடத்துக்கு, இங்கயிருந்து யாரும் புள்ளைங்களை அனுப்பறது இல்லை! அதனாலதான் இந்த ஊரு ஸ்கூலை நடுநிலைப் பள்ளியாக்கணும்னு கேட்கிறாங்க!"

மூர்த்தியின் மனதுக்குள் மளுக்கென்று ஏதோ முறிந்தது. ○



• சுரேகா



'ஜய்ஜய்' சுரேகா!

போல்வால்ட் போட்டியில் தேசிய அளவில் முதன்முறையாகக் கலந்து கொண்ட நேரம் அது. லூதியானாவில் நடந்த அப்போட்டியில், பஞ்சாபைச் சேர்ந்த கரம்ஜித் கவுர் கடுமையான போட்டிகள் எதுவுமின்றி 3.25 மீ தாண்டி அசால்ட்டாக ஜெயிக்க, சிரமப்பட்டு 2.70 மீ வரையே தாண்டி இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்ட சுரேகா, சோகத்துடன் சென்னைக்குத் திரும்பினார்.

மூன்றே வருடங்கள்... காட்சி மாறுகிறது. பெங்களூரில் நடைபெற்ற போட்டியில் கவுரை விட 1 செமீ அதிகமாக, அதாவது 3.51 மீ வரை எகிறிச் சென்று முதலிடத்தைத் தட்டி விடுகிறார் சுரேகா.

"'என்னைவிட நீ திறமைசாலி. இன்னமும் மேலே மேலே போவாய்' என கவுரிடமிருந்து இனிய வாழ்த்தும் கிடைச்சது. யானைக்கு ஒரு காலம் வந்தா, இந்தப் பூனைக்கும் ஒரு காலம் வராதா?" எனச் சிரிக்கிறார் இந்த இருபது வயது சாதனைப் பெண்.

'போல்' எனப்படும் நீளமான குச்சியை பிடித்துக் கொண்டு ஓடியபடி அதை ஊன்றி, உடலை வளைத்து உயரே எழுந்து, குறுக்கே நிறுத்தப்பட்டுள்ள கிராஸ் பாரைத் தாண்டுவதுதான், அண்ணாந்து பார்க்க வைக்கும் போல்வால்ட்டின் குணாதிசயம். இதில்தான் இன்றைய தேதியில் வரிசையாக தேசிய சாதனைகள் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுரேகா. சமீபத்தில் மும்பையில் நடந்த போட்டியில் 3.55 மீ தாண்டி தமது ரெக்கார்டை தாமே முறியடித்திருக்கிறார்.

"முதல்ல லாங்க் ஜம்ப்தான் பண்ணிட்டிருந்தேன். திடீர்னு ஒருநாள் ரத்தத்துல ஹீமோக்ளோபின் கவுண்ட் குறைய ஆரம்பிச்சிருச்சு. டாக்டர்ஸெல்லாம் விளையாட்டே இனி உனக்குத் தேவையில்லைன்னு ஆர்டர் போட்டுட்டாங்க. விடுவேனா நான்...! கோச் மாணிக்கராஜ் கொடுத்த அறிவுரையால போல்வால்ட்டுக்குத் தாவினேன். இன்னைக்கு இதுல நான்தான் நேஷனல் சாம்பியன். நான் உயர உயர, என் ரத்த அணுக்களும் உயர்ந்திருச்சு. இன்னைக்கு நான் சுறுசுறுன்னு திடகாத்திரமா இருக்கேன்" என்று கூறும் சுரேகாவின் முதல் போல்ட்வால்ட் அனுபவமே செம காமெடியாம்.

"குச்சியைத் தூக்கிட்டு வேகமா ஓடி வர்றேன். அதுதான் முதல் தடவையில்லையா... குச்சியை, தரையில ஊன்றும்போது எனக்கு ஒண்ணும் புரியாததால, அப்படியே

'சொய்ங்'னு தலையைத் திருப்பி கோச்சைப் பார்க்கப் போக, வித்தியாசமான கோணத்துல நானும் குச்சியும் இருந்ததுல அப்படியே சுத்தி கீழே விழுந்தேன். இதைப் பார்த்துத் தலையில அடிச்சுக் கிட்ட கோச் 'இது எங்கே தேறப் போகுது'ன்னு நினைச்சுட்டார்.

விளையாட்டுகளிலேயே போல் வால்ட்டுக்குத்தான் அதிக செலவு பிடிக்கும். ஒரு போல் விலை என்ன தெரியுமா? இருபத்தைந்தாயிரம் ரூபாய்! சில பேர் நினைக்கற மாதிரியெல்லாம் கிடையாது. போட்டிக்கு இதை நாங்கதான் எடுத்துட்டுப் போகணும். நல்லவேளை, எனக்கு தமிழக அரசு நான்கு குச்சிகளை இலவசமாகக் கொடுத்ததால தப்பிச்சேன். போட்டிகளுக்கு இதை எடுத்துட்டுப் போகும்போது காமெடியா இருக்கும். ட்ரெயின்ல ஜன்னல் வழியா விட்டு கயித்துல கட்டுவோம். ரோட்ல ஆளுக்கொரு கை பிடிச்சுட்டுப் போகும்போது 'ஆ'ன்னு புரியாம வேடிக்கைப் பார்ப்பாங்க." - சிரிக்கிறார் சுரேகா.


இவரது சொந்த ஊர் கேரளத்தின் திருச்சூர் என்றாலும், படித்தது, வளர்ந்ததெல்லாம் சென்னையில்தான். பேசிக்கொண்டிருந்தபொழுது உறுத்திய விஷயத்தைக் கேட்டே விட்டோம்.

"அச்சச்சோ, மலையாளப் பெண் எதுக்கு மூக்குத்தி போட்டிருக்கான்னு நீங்களும் கேட்டுட்டீங்களே...!

அப்போ எனக்கு எட்டு வயசு. தலை முடிய பாய்கட்டிங் பண்ணியிருந்ததால எங்க போனாலும், 'தம்பி, நீ பெண்கள் லைன்ல நிக்கக் கூடாது'ன்னு எல்லோருமே சொல்லிடுவாங்க. இதுல கடுப்பாகி பெண்மைக்குத் தனி அடையாளமா அந்த வயசுலேயே மூக்குத்தி போட்டுக்கிட்டேன். சொந்த ஊர் கேரளான்னாலும், எனக்குத் தமிழ்நாடுதான் பிடிக்கும்" என்று குதூகலிக்கும் சுரேகா, தற்பொழுது தெற்கு ரயில்வேயில் பணி புரிந்து வருகிறார். அடுத்த ஆசியன் கேம்ஸில் தாய்நாட்டிற்கு மெடல் வாங்கித் தந்த பிறகுதான் கல்யாணம் காட்சியெல்லாமாம்!

- **கண்**

படம்: **எழில்**



• பிரபாகர்

கண் திறக்கும் கார்ல் மார்க்ஸ்!

ஐ.ஏ.எஸ் தேர்வு எழுதுபவர்களுக்கு இன்றியமையாதவை நூலகங்கள். நகரங்களில் வசிப்பவர்களுக்கு இவ். விஷயத்தில் சிக்கல்கள் குறைவு. அவதிப்படுவது கிராமவாசிகளே. ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்த மாணவனோ, மாணவியோ, ஐஏஎஸ் தேர்வுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள பெரு நகரத்தைத் தேடி ஓட வேண்டியிருக்கிறது. ஆனால், தென் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இனி இந்தத் தொல்லை இருக்கப் போவதில்லை. காரணம், வைகை ஆற்றின் கரையோர கிராமமான பெத்தானியபுரத்தில் அமைந்துள்ள கார்ல் மார்க்ஸ் பொதுநூலகம்.


ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., சிவில் சர்வீஸ் தேர்வுகள் என்று பல துறைகளைச் சார்ந்த புத்தகங்கள் ரெஃபரன்ஸ்"க்காக இங்கு ஏராளமாக உள்ளன. மதுரை, தேனியிலிருந்து ஏராளமானோர் வந்து இந் நூலகம் மூலம் பயனடைந்து செல்கின்றனர். போட்டித் தேர்வுகளுக்கென்று தென் மாவட்டத்தில் உள்ள ஒரே நூலகம் இதுதானாம். இலவசமாக தங்கும் அறைகள்கூட தந்து மாணவர்களை ஊக்குவிக்கும் வழக்கம், இங்கு மட்டுமே காணப்படும் அதிசயம்.

"பி.வி.டி. அறக்கட்டளை மூலம் நடத்தப்படும் இந்த நூலகத்தில், அறிவியல் முதல் ஆன்மிகம் வரை அனைத்துத் துறைகளையும் சார்ந்த பதினைந்தாயிரம் புத்தகங்களுக்கு மேல் உள்ளன.

இங்கு நூற்றி அறுபதுக்கும் மேல் தின, வார, மாதப் பத்திரிகைகள், ஹவுஸ் ஜர்னல்கள், அறிவியல் பத்திரிகைகள் கிடைக்கின்றன. புத்தகங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்க, உறுப்பினர் கட்டணம் வெறும் பதினொரு ரூபாய் தான். அதுவும் திரும்பப் பெறக்கூடியது. எங்களின் நோக்கமே ஏழை எளியவர்கள், மாணவர்கள் வந்து படிக்க வேண்டும், அவர்கள் தம் அறிவுக்கண் திறக்க வேண்டும் என்பதுதான்" என்கிறார் பி.வி.டி. அறக்கட்டளைப் பணிகளை கவனிக்கும் எம்.ஜே. பிரபாகர்.

நூலகத்தின் சார்பில் மாதம் ஒருமுறை அல்லது இருமுறை, பல்துறை அறிஞர்கள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வரவழைத்துப் பேச வைக்கிறார்கள். லேட்டஸ்ட் பேச்சாளர் வெ. இறையன்பு ஐ.ஏ.எஸ். ஆண்டுதோறும் மாவட்ட அளவில், பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது பொதுத்தேர்வில், முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவ - மாணவியரை கௌரவிப்பது, போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி போன்ற நல்முயற்சிகளையும் செய்யும் இந்நூலக அறக்கட்டளையின் அறங்காவலராக சி. ராமையா இருக்கிறார்.

- சத்யா வெங்கட்



டு புடவைகள் ✿ டிசைனர் சேலைகள் ✿ காக்ரா ✿ சல்வார் ✿ பட்டு பாவாடைகள்


RmKV

முகூர்த்தப் பட்டுகள்

எல்லோரையும் திரும்பிப் பார்க்க வையுங்கள்

ஆரெம்கேவியின் நவராத்திரி கலெக்ஷனில்

உங்கள் அழகை அழகாய் காட்டும்
ஆரெம்கேவியின் விசேஷ நவராத்திரி படைப்புகளில்
நீங்கள் எல்லோர் கவனத்தையும் ஈர்ப்பது உறுதி.
எங்கள் டிசைன் ஸ்டுடியோவினால்
பிரத்யேமாக வடிவமைக்கப்பட்ட இந்த விசேஷ கலெக்ஷனில்
பாரம்பரியமும் புதுமையும் சங்கமிக்கின்றன.
வாருங்கள். வாங்குங்கள்.
நவராத்திரி நாயகியாய் விளங்குவீர்கள்.



Showcased here:
Harini silk ghagra, Raas Leela theme silk saree and the Resham Mayuram pattu pavadai.

RmKV

நவராத்திரி கலெக்ஷன்

பாரம்பரியத்தில் புதுமை



வடக்கு ரத வீதி | திருநெல்வேலி | Ph 0462-2333105
பனகல் பார்க் | சென்னை | Ph 044-28144445

Mudra South: RmKV: 7201: 04 Tam

புக்பேங்க்



பழமொழி - பயனுரை - வ. சிவசங்கரன்

அறிவாளி 'எப்படி வாழ வேண்டும்' என்பதை ஐம்பது வரிகளில் சொன்னால், அனுபவசாலி 'அட்ஜஸ்ட்' என்று ஐந்தே எழுத்துகளில் சொல்லி விடுவார். அனுபவத்தின் சொல் வாழ்வும் கற்றுத்தரும், வாழ்க்கைப் புதிர்களையும் விடுவிக்கும். நம் ஆன்றோர்களின் அனுபவமொழி, அருள்மொழி, பழமொழியின் விளக்கம்.

பொதிகை பதிப்பகம், 60, பத்திரியன் தெரு, சென்னை - 600 001. விலை ரூ.25.

கிருஷ்ணாயிஸம் - டாக்டர் எஸ்.எ.பி.

செயலின் ஒரு பகுதியே பயன். எனவேதான் 'பலனை எதிர்பார்க்காதே' என்றது கீதை. ஆக்ஸிஜனும் ஹைட்ரஜனும் இணைந்து தண்ணீர் கிடைக்க மின்சாரம் தேவைப்படுவது போல, அறிவும் மனமும் இணைய பக்தி தேவை என்கிறது கிருஷ்ணாயிஸம். கர்மயோகத்தின் மற்றொரு கோணத்தைக் கூறும் பக்தி நூல்.

சாருபிரபா பப்ளிகேஷன்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14. விலை ரூ.30.

ஆகாயத்துக்கு அடுத்த வீடு - மு. மேத்தா

உண்மைகளை உரக்கச் சொல்லும் உரிமை கவிஞனுக்குத்தான் இருக்கிறது. அதிலும் இந்த உவமைக் கவிஞருக்கு சற்றுக் கூடுதலாகவே இருக்கிறது. உள்ளத்தையும், உலகத்தையும் பிட்டு வைத்து, உணர்ச்சிக் கரங்களால் தொட்டுவைத்து, உருக்கத்தையும் நெருக்கத்தையும் கூட்டி வைத்து, கண்ணையும் கருத்தையும் கட்டி வைக்கும் கவிதைகள்.

குமரன் பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.50.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் சாதனை இயக்குநர்கள் - வரிசை கி. ராமச்சந்திரன்

'வேடிக்கை பார்ப்பதும் அதன் விளைவுமே வாழ்க்கை' என்று விதிக்கப்பட்ட இந்தியனை, பேசாத படம் காலம் முதல், பாடல்களே கதையாய் வளர்ந்து, பின் கதையும் இயக்கமும் பிரதானமான காலம்வரை, கட்டிப்போட்டு உட்கார வைத்த திரையுலகையும், அதன் சாதனை இயக்குநர்களையும் பற்றிக் கூறும் செல்லுலாய்ட் சரித்திரம்.

செம்புலம், 50, 5வது தெரு, அச்சுதன் நகர், ஈக்காடுதாங்கல், சென்னை - 97. விலை ரூ.225.

- விஷ்வக்

இனிய தீபாவளி வாழ்த்துக்கள்!

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

P.R. ஜுவல்லரியில் ராசிக்கல் மோதிரம் வாங்கி அணிந்துபயன்பெறுங்கள். ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-

வெற்றிகரமான
19-ம் ஆண்டு துவக்க விழா
22.10.2004

தொடர்ந்து தங்களது பேராதரவை நல்கிவரும் வாடிக்கையாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R.ஜுவல்லரி. எங்கு ஜோதிடம் பார்த்தாலும் எங்களிடம் வந்து ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 400/-க்கு வாங்கிப் பயன்பெறுங்கள். உடனடியாகக் கிடைக்கும். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம். தங்கத்தில் 2 கிராம் முதல் 8 கிராம் வரை ரூ. 1800/- முதல் ரூ. 5000/-ம் வரை உடனடியாகக் கிடைக்கும். தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

முகவரி தெளிவாக எழுதவும்.

எமது சிறப்புப் பேட்டியை ராஜ் டி.வியில் தினசரி காலை 6.55 மணிக்கு காணத் தவறாதீர்கள்.

கண்ணாடிக் கல்வெட்டுகள் 18

கவிஞனின்

சில மனிதர்கள்
வசிப்பதால்
சில இடங்களுக்குப்
பெருமை வரும்!

சில இடங்களில்
இருப்பதால்
சில மனிதர்களுக்குப்
பெருமை வரும்!

சில மண்ணில்
பிறப்பதால்
சில பேருக்கு
உயர்வு வரும்!

சில பேர்
பிறப்பதால்
சில மண்ணுக்கு
உயர்வு வரும்!

உலகின் முதுமொழியில்
இலக்கணப் பல்லக்காய் நடமாடும்
இலக்கியத் தமிழுலகம்
கைகூப்பி வணங்கவல்ல
கவிதை மகன் கம்பநாடன்!

தேரழுந்தூரில் பிறந்ததினால்
திளைத்தாடினர் நன்மக்கள்!

கம்பன் பிறந்தது
உவச்சர் குலத்தில்...

கம்பனின் தந்தையார்
ஆதித்தனோ
சொந்தத் தொழிலைவிட்டு
சுடாதமண் பிசைந்து
சுட்டுப் பானையாக்கினார்!

கம்பனோ இலக்கணத்தில்
கெடாத சொல் பிசைந்து
கொட்டும் கவியாக்கினான்!

சிறுவன் கம்பன்
சிறகு முளைத்த காற்றானான்!

ஊரின் வரப்பு கரைகளே
அவன்
கவிதை தர்பார்!

ஒரு மாமரத்தின்
மிருதுவான வளர்ச்சிபோல்
சிறுவன் கம்பன்
வாலிபக்காரனானான்!

அடுக்களையில்
அடுக்கப்பட்ட விராட்டிகள் முதல்
தேரழுந்தூர் திண்ணைகளில்
கதை பேசும் பிராட்டிகள் வரை
கவிதையில் இழுத்தான்!

காளிகோயில்!
இது கம்பனின் விரல்களுக்கு
கவிதைப் பாசறை!

காளிகோயிலின்
சருகு படர்ந்த கல் மண்டபமும்
மெருகு கலைந்த தூண்களும்
கம்பன் கவிஞனான இடங்கள்!

ஒட்டைப்பானையும்
சகதிகளுமாய்
உவச்சர் குலவாசியில் ஒருவனாய்
வசிக்க வேண்டிய கம்பன்!

ஓலைச்சுவடிகளும்
எழுத்தாணி ஏடுகளும்
கற்றோர் கூட்டமும் சுற்ற
காலம் நகர்த்திய கம்பனானான்!

இதில் எரிந்தன சில
உள்ளூர் விறகுகள்!
மனம் குமைந்த கம்பன்!
காளிக்கு முன் மண்டியிட்டான்!

ஜனனம்-3



பா. விஜய்

தாயின் வருடலுக்காக
தொட்டிலில் வீறிடும் கைச்சிசுவாய்
குமுறிட உடைந்து பாடினான்
குமரனாயிருந்த கம்பன்!

அந்தோ அந்நாள்!
கம்பனின் செந்நா
தமிழைச் சூடாக்கி
தகதகவென்று பொழியப் பொழிய...

கம்பனின் கண்களிலிருந்து
நீர் என்னும் ஊன்குழம்பு
சலசலவென்று வழிய... வழிய...

அடித்த காற்று
அப்படியே சுழன்று
லட்ச இறக்கைப் பறவையாய்
படபடத்து எழுந்தது.

நின்ற மரங்கள்
உடுக்காக ஒலி எழுப்பி
உயிருள்ள பூசாரிகளாய்
நெடுநெடு என அசைந்தன!

தொங்கிய மணிகள்
தீராக் கோபம் பெற்று
நாதங்களை உண்டு பண்ணி



கணீர் கணீரென ஒலித்தன!

ஒளிர்ந்த தீபங்கள்
ஒளிரா மாடங்களில்
ஓடிப்போய் திரி அமர்த்தி
திகுதிகுவென ஒளிர்ந்தன!

கம்பனின் கண்முன்னே
ஒளி வெள்ளம் கொட்டியது!
ஒளிவெள்ளம் மத்தியிலே
ஓர் உருவம் தோன்றியது!

சாட்சாத்
மகாகாளியே
நின்றிருந்தாள்!

கம்பன் வியந்து அதிர்ந்தான்!
கம்பன் நிமிர்ந்து அமர்ந்தான்!
காளியே அண்டப் பிரசண்டமாய்
காட்சி தர தமிழ் கொண்டெழுந்தான்!

மகாகாளியோ தன்
ஆட்காட்டி விரலினால்
கம்பனின் நாவில் எழுதினாள்!

தமிழுக்குக் கிடைத்த
தலைக்கிரீடம் நீயென்று
தலைவருடிச் சென்றாள்!
அன்று முதல் கம்பன்
மாகாளி பக்தனானான்!
காளிக்கு பூத்தொடுத்து
கவிதைகளும் கலந்தெடுத்து
பாமாலை - பூமாலை சூட்டினான்!

கம்பன் அந்நாள்
கதிராடும் வயல்மட்டும்
காலார கவியூற ஓடினான்.

அப்போது ஒரு இசையற்ற
குரல் - ஆனால் அது
இதயத்தின் குரல்!

"மூங்கில் இலைமேலே...
தூங்கும் பனிநீரே!..." என்று
இருவரி கேட்டன
அத்தோடு நின்றது!

கவிஞன் கம்பனுக்கோ
கால் - கை நகரவில்லை!
அடுத்த வரி என்ன?

ரசிகன்



செவிக்குணவு பரிமாறும்
இசையரங்கில்
தானுமொரு ரசிகனாகி
சொக்கிக் கிடக்கும்
பசி.

சி. விநாயகமூர்த்தி

அடுத்த வரி என்ன?

ஏடு பயிலா
இலக்கணம் நுகரா - இந்தப்
பாமர சனம் பாடும் பாட்டே
பாரினில் உயர்ந்ததென்றால்-
அப்பாட்டுடைத் தலைவன்!

இரவெல்லாம் விழித்து
இமையெல்லாம் தகித்து
புலர்காலைப் பொழுதில்
போய் நின்றான் வயல்வெளிக்கு...

மீண்டும் அந்தக் குரல்!
"மூங்கில் இலைமேலே
தூங்கும் பனி நீரே!
தூங்கும் பனி நீரை
வாங்கும் கதிரோனே!"

கம்பன் மண்ணை வணங்கினான்.

"தமிழ் மண்ணில் பிறந்தவனை
எல்லாம்
கவிபுனைய வைக்கும்
கரிசல் மண்ணே" என்று மல்கினான்!

கம்பனின் பெருமை
கம்பனின் ஆற்றல்
கம்பனின் புலமை
கம்பனின் வறுமை - எல்லாம்
ஊர் கடந்து ஆறு கடந்து
சடையப்ப வள்ளல் செவியில்
விழுந்தது!

யானை மேல் பல்லக்கும்
யானை தாங்கா பொன் பொருளும்
தோழுந்தூரே தாங்காத
ஆள்-அம்பு-சேனையுடன்
சடையப்ப வள்ளல் வந்தார்!

கம்பனின் ஓடடர்ந்த
வீடு கண்டார்!
கம்பனைத் தம் அரண்மனையில்
கவிச்சக்கரவர்த்தியாய் அமர்விக்க
கனாக் கண்டார்!

தோழுந்தூரைப் பெருமை செய்து
ஊர் ஊராய்ப் பெருமை செய்து
உலகை நோக்கி
சடையப்ப வள்ளலோடு சென்றார்
கம்பர்!

ஒரு மகாகவிஞன்
நடந்த நடையை
தவழ்ந்த தவழலை
ஊறிய மழலையை
பேசிய கவிதையைச் சுமந்த ஞாபகத்தில்
தோழுந்தூர் பூக்கிறது இன்றும்!

*(அடுத்து வேறொரு
ஊரில் சந்திப்போம்)*

லால்குடி வட்டத்தில், இராமநாதபுரம் கிராமம்... நன்செய் வயல்கள் கொஞ்சிக் குலவும் பூமி. நிலத்தடி நீர்ப் பாசனம், பெருவளை வாய்க்கால் பாசனம்... இப்படித்தான் அந்த ஊர் பலருக்கும் அறிமுகமாகியிருக்கும். ஆனால் இவ்வூர் கிராம வாசிகள், கடந்த பத்தாண்டுகளாக ஒரே பிரச்னையைக் கையிலேந்தி போராடி

வீணாய்ப் போகும் விளை நிலங்கள்!

இராமநாதபுர சோகம்



• வயலில் கருவேல முட்கள்...

வருவது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

சமீபத்திய நாடாளுமன்றத் தேர்வின்போது கூட, இக்கிராம வாக்காளர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக தேர்தல் புறக்கணிப்பு செய்திருந்தனர். அப்படி என்ன தீர்க்க முடியாத பிரச்னை?

"எங்க இராமநாதபுரம், கோத்தாரி சர்க்கரை ஆலை மற்றும் எரிசாராய தொழிற்சாலை அருகே அமைந்திருக்கிற கிராமம். இந்த இரண்டு தொழிற்சாலைகளும் நூறு ஏக்கர்ல கழிவு நீரைத் தேக்கி வைக்கிறாங்க. அந்தத் தண்ணி பூமிக்குள்ள இறங்கி மண்வளத்தை மாசுபடுத்தறதோடு இல்லாம, மழைக்காலத்தில கழிவு நீர் வாய்க்கால் வழியா விவசாய பயன்பாட்டுத் தண்ணீரோடும் கலந்துடுது" என்கின்றனர் கிராம விவசாயிகள்.

ஆலைக்கு வெகு அருகிலேயே, இரண்டு ஏக்கர் வயலில் குறுவை நெல் பயிரிடப்பட்டிருக்கிறது. கழிவு நீர் பாதிப்பால் முழு வளர்ச்சியற்று, கதிர் பிடிக்காமல 'சோனி' போலக் காட்சி தருகின்றன நெற்பயிர்கள். "இரண்டு ஏக்கர் நன்கு விளைந்தால், எப்படியும் எழுபதிலிருந்து எண்பது மூட்டை நெல் வரைக்கும் அறுவடை ஆகிவிடும். இப்போது இருபது மூட்டை கிடைக்குமா என்பதே சந்தேகம். எல்லாத்துக்கும் காரணம், நிலத்தடி நீர் மிகவும் கெட்டுப் போய்விட்டதுதான்" என்றார் விவசாயி அறிவுமணி.

"இது போன்ற தொழிற்சாலைகள், பொதுவாக வறண்ட நிலப் பகுதிகளில் மட்டுமே அமைந்திருக்க வேண்டும். நல்ல வாய்க்கால் பாசனமும், மிகுதியான நிலத்தடி நீர் வளமும் கொண்ட நன்செய் வயல்கள் சூழ்ந்த எங்கள் பகுதியில், இத்தொழிற்சாலை இயங்கி வருவது மிகவும் துரதிருஷ்டமே. இதனை



• விவசாயிகள்...

* பாதிக்கப்பட்ட இரண்டு ஏக்கர்





எதிர்த்து கடந்த பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக இராமநாதபுர கிராமவாசிகள், பல்வேறு நிலைகளில் தொடர்ந்து போராடி வருகிறார்கள். மாநில அரசோ, மாசுக் கட்டுப்பாட்டு வாரியமோ, சம்பந்தப்பட்ட ஆலை நிர்வாகமோ, இது வரை மசிந்து கொடுக்கவேயில்லை. எங்கள் விளை நிலங்கள் வீணான நிலங்களாகி வருகின்றன. நெல் விளைந்த வயல்கள் கருவேல முட்செடிகள் செழித்து வளரும் பூமியாக மாறி வருகின்றது. எங்கள் வயல்கள் நன்கு விளைய வேண்டுமெனில், தொழிற்சாலையை இழுத்து மூடுவதைத் தவிர வேறு வழியில்லை" எனக் கொதிப்பாய்ப் பேசுகிறார்கள் மக்கள்.



* கோத்தாரி ஆலை



* அறிவுமணி

சரி, இந்தக் குற்றச் சாட்டுகளுக்கெல்லாம் தொழிற்சாலை தரப்பின் பதில் என்ன?

"இராமநாதபுரம் கிராமத்து இளைஞர்கள் சிலர் தங்கள் சுயநலத்துக்காக, இந்த விஷயத்தை அடிக்கடி திசை திருப்பி எங்கள் நிர்வாகத்தினை மிரட்டி வருகிறார்கள். கோத்தாரி எரி சாராயக் கழிவுகளில் இருந்து எவ்விதத் தீமைகளும், இராமநாதபுரம் கிராம விவசாய நிலங்களுக்கோ, குடிநீர் ஆதாரங்களுக்கோ ஏற்படவில்லை என்பதே உண்மை. மேலும் எங்கள் எரிசாராயத் தொழிற்சாலை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனைத்து விதிமுறைகளையும் ஏற்று, அதன்படியே செயல்பட்டுவருகின்றது. கோத்தாரி எரி சாராய ஆலையின் உர வடி நீர் கையாளும் விதங்கள் அனைத்துமே தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரியின் ஆலோசனைப் படியும், அவர்களின் மேற்பார்வையின் கீழுமே நடைபெற்று வருகிறது," என்கிறார் கோத்தாரி சர்க்கரை மற்றும் எரி சாராயத் தொழிற்சாலையின் பொது மேலாளர் எஸ். சிவராஜ்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ராகு காலம்

ராகுவென்றால் இன்னவென்பது நீங்கள் எல்லாரும் அறிந்த விஷயமே. ராகுவென்பது ஒரு கிரஹம் அல்லது ஒரு பாம்பு அல்லது ஓர் இராட்சதன் அல்லது ஓர் இராட்சதப் பாம்புக் கிரகம். இந்த ராகுவுக்குச் சில சமயம் திடீரென்று அகோரமான பசி உண்டாகிவிடும். பின்னர் அது என்ன செய்யும் தெரியுமல்லவா? பகலாயிருந்தால் சூரியனையும், இரவாயிருந்தால் சந்திரனையும் அப்பம் என்றெண்ணி விழுங்கிவிட முயலும். ஆனால் சூரியன் என்றால் இலேசா என்ன? சூரியனுடைய குறுக்களவு, சுற்றளவு, வெப்பத்தின் டிகிரி முதலியவையும் உங்களுக்குத் தெரிந்த விஷயங்களே. சூரியனது குறுக்களவு 10,00000... மைல். எவ்வளவு பூஜ்யம் என்பது ஞாபகமில்லை. பூஜ்யம் எவ்வளவு போட்டால்தானென்ன? இதே முறையில் எல்லாக் கிரகங்களின் அளவையும் கணக்காகச் சொல்லி விடலாமென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். பூமியிலிருந்து சூரியனுடைய தூரமோ ஒன்று போட்டு பதினாலு பூஜ்யம் மைல் என்று நினைக்கிறேன். இவ்வளவு தூரத்திலிருக்கும் சூரிய பகவான் வருஷந்தோறும் நாம் கொடுக்கும் பொங்கல், வாழைப்பழம் முதலியவற்றைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே வெயில் மண்டையை வெடிக்கின்றது. இப்படிப்பட்ட சூரிய பகவானை விழுங்க முயலுபவனின் கதி என்னவாகுமென்று சொல்ல வேண்டியதில்லை.

இப்படியாக, ராகு சூரியனையோ, சந்திரனையோ விழுங்கப் பார்த்து முடியாமல் திரும்பக் கக்கி விடுவதற்குத் தான் சூரிய, சந்திர கிரஹணங்கள் எனப் பெயர் என்பதை நாமெல்லாரும் அறிவோம். வாசகர்களின் காதோடு ஒரு சமாசாரம். இந்தக் கதையில் உண்மையாக உங்களுக்கு நம்பிக்கை கிடையாது. எனக்கும் நம்பிக்கை கிடையாது. முறையே, பூமி, சந்திரன் இவற்றின் நிழலினால் எப்படி சூரிய, சந்திர கிரஹணங்கள் உண்டாகின்றன வென்பதை நாலாம் வகுப்பிலேயே நாம் படித்திருக்கிறோமல்லவா? ஆனால், கிரஹண தினத்தன்று மட்டும் இந்த விஞ்ஞான அறிவெல்லாம் நமக்கு மறந்து போய்விடுகிறது. அன்று, கடல் நீரிலோ, குளங்குட்டையிலோ தலை முழுகித் தர்ப்பணம் முதலியவை செய்ய, நீங்களும் நானும் தவறுவதில்லை. இது குறித்து நாம் வெட்கப்பட வேண்டிய அவசியமுமில்லை. வான சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற எம்.ஏ. பட்டதாரிகள்கூட அப்படித்தான் செய்கிறார்கள். இது நிற்க,

ராகுவைப் பற்றியும் கிரணங்களைப் பற்றியும் இப்பொழுது நமக்கு நன்றாக உண்மை விளங்கிவிட்டது. ஆனால் இந்த ராகு காலம்! அதன் இரகசியந்தான் எனக்கு பிடிபடவில்லை. ராகுவுக்கும் காலத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கக் கூடும்? ராகு காலத்திலும், ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம் வரும் ராகுகாலம் மிகப் பொல்லாததாம். ஒருமுறை ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு காரியத்துக்காக நான் புறப்பட்டுச்

அமரர் கல்கி

சென்றேன்; புறப்படும் போதே 'ராகு காலத்தில் கிளம்புகிறோம்!' என்று நெஞ்சு அடித்துக் கொண்டது. அதற்கேற்றாற்போல் காரியமும் நடக்கவில்லை. சரி சரி. ராகு காலப் பலன்கள் என்று தீர்மானித்துவிட்டேன். ஆனால் நான் கொஞ்சம் சந்தேகப் பிரகிருதி என்பது உங்களுக்குத் தெரியுமே, மறுபடியும் யோசனை வந்துவிட்டது. நான் புறப்பட்ட நேரத்திற்கும், நான் பார்க்கச் சென்றவர் ஊரில் இல்லாததற்கும், என்ன சம்பந்தம் இருக்கக்கூடும்? ராகு காலத்திற்கு முன்னால் போயிருந்தாலும் அவர் இருந்திருக்க முடியாது. இவ்வாறு எண்ணி வேறொரு நாள் வேண்டுமென்றே ராகுகாலத்தில் கிளம்பிச் சென்றேன். அன்று வேலை திருப்திகரமாய் நடந்தது. அதற்குப் பிறகு பலமுறை ராகுகாலத்தில் காரியம் தொடங்கிப் பார்த்தேன். சில முறை நடந்தது; சிலமுறை நடக்கவில்லை. ஆகவே காரிய சித்திக்கும், கிளம்பும் நேரத்துக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை என்பது விளங்கிற்று. இக்கட்டுரையையும் நான் துணிந்து ராகு காலத்தில்தான் எழுதத் தொடங்குகிறேன்.

இதற்குள்ளாக, நேயர்களில் பாதிப்பேர் என்னை நாஸ்திகன் எனத் தீர்மானித்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன். உண்மையில் நான் கடவுள் கட்சியைச் சேர்ந்தவன்தான். நான் பிறந்ததிலிருந்து கடவுளுடைய கட்சியில் இருந்துவிட்டு, இப்போது அவருக்கு ஆபத்து வரும் சமயத்தில், அவரைக் கைவிட்டு விடுவதென்றால் என் மனம் இடங்கொடுக்கவில்லை. அது நம்பிக்கைத் துரோகமல்லவா? எனக்கு வயதோ, இந்திய மக்களின் சராசரி வயதைவிட அதிகமாகிவிட்டது. இன்னும் எத்தனை காலம் உயிர் வாழப் போகிறேனோ தெரியாது. (ஜோதிடர்கள் அறுபது வயது என்று சொல்லியிருக்கிறார்களென்றாலும் என்னுடைய நண்பர்கள் சிலருடைய ஜோதிட அனுபவம் அவ்வளவு



நம்பிக்கையூட்டுவதில்லை) மனித காலம் அநித்யம். இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காணோம். இந்த நிலையில், ஏதோ இருக்கும் வரையில் கடவுள் கட்சியிலேயே இருந்துவிட்டு, உயிரை விடலாம் என்று உறுதியாக இருக்கிறேன். ஆகையால் 'நாஸ்திகன்' என்னும் பழியைத் தயவுசெய்து என் பேரில் போட வேண்டாம்.

"அப்படியானால் நீர் ராகு காலத்தைப் பற்றிக் குறை சொல்கிறீரே, சொல்லலாமா?" என்று சிலர் கேட்கலாம். அப்படிக் கேட்பவர்கள் ராகு காலத்துக்கும் கடவுளுக்கும், என்ன சம்பந்தம் என்பதை முதலில் தெரிவித்தால் நலம். சம்பந்தம் எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்து நிற்பவரென்று பொருள். எனவே, அவர் அறியாத்தனத்தையும் கடந்து நிற்கவேண்டுமல்லவா? ஆகையினால்தான் மனிதனுக்கு ஆண்மையையும், அறிவையும், ஊக்கத்தையும், உறுதியையும் அளித்த பகவான், இவ்வளவும் பயன்படாமற்போக, நடுவில் நாளையும் கிழமையையும், ராகு காலத்தையும், வார சூலையையும் வைத்திருப்பாரென்று என்னால் நம்ப முடியவில்லை.

- கல்கி கட்டுரைகள் - 3
மணிவாசகர் பதிப்பகம்.

மகுட வைரம்



11. நெருங்கும் அபாயம்!


இருளில் கானகத்தில் செல்லும் போது திடீரென்று ஒலிக்கும் ஒற்றை யானையின் பிளிறலும், சிறுத்தையின் உறுமலும் ஏற்படுத்தக் கூடிய பதற்றத்தையும், அச்சத்தையும், சாதாரண மனிதக்குரலொன்று, இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்து ஏற்படுத்த இயலும் என்பதை நிரூபித்துக் கொண்டிருந்தார்கள் பகதத்தனும், பராந்தகனும்.

சற்றே அதிகாரம் கலந்திருந்தாலும், மகாராணி ரேவாதேவியின் குரல் இனிய குரல்தான். எனினும் திட்டமிட்டபடி அனைத்தையும் முடித்துக் கொண்டு வெளியேறும் தருணத்தில் மகாராணியை எதிர்பார்க்காததால் ''பணிமுடிந்து விட்டதா சீன வணிகரே?'' என்றவளின் குரல் பகதத்தனுக்கும், பராந்தகனுக்கும் சற்று பதற்றத்தை ஏற்படுத்தவே செய்தது.

ஒரு கணப்பொழுதே விழித்த சீன பகதத்தன், திரும்பி பராந்தகனைப் பார்த்து, ''சிங் சூ யாங் ஹூ சிய்...'' என்று தொடர்ந்து சீன மொழியில் இலேசாகக் குரலை உயர்த்தி இரைந்தான். மீண்டும் மகாராணியை நோக்கி வணங்கியவன், ''மகாராணி, மன்னிக்க வேண்டும். கீழ்த்தளம் முழுவதும் சந்திரகாந்தங்களைப் பொருத்தி விட்டேன். அந்த நீலக்கல்லையும் தாங்கள் கூறிய அறையில் பொருத்திவிட்டேன்'' என்றான்.

''பிறகென்ன?''

''அந்த நீலக்கல் ஒளிவிடத் தொடங்கும்போது இரு நாழிகைக்குள் அதன்மீது மூலிகைச் சாறொன்றைத் தடவ வேண்டும். அதைக் கொண்டு வர மறந்திருக்



விஷ்வக்ஸேனன்

கிறான் இந்த முட்டாள். மகாராணி அனுமதியளித்தால் நான் இப்பொழுதே சென்று அதைக் கொண்டு வந்து விடுகிறேன்.''

''அவ்வளவுதானே. சரி. விரைவில் சென்று கொண்டு வாருங்கள்'' என்றாள் மகாராணி.

வணங்கி நகர்ந்த பகதத்தன், வாசல் வரையில் சீன மொழியில் பராந்தகனை ஏசியபடியே வெளியே வந்து, ரதத்தில் பாய்ந்து ஏறினான்.

மாளிகையை விட்டு வெளியேறிய ரதம், கோட்டையின் வடக்கு வாயிலையடைந்து, வணிக ரதங்களுடன் மல்லைத் துறைக்குச் செல்லும் சாலையில் சென்று, பின்பு தென்மேற்கில் திரும்பி கணவேகத்தில் பறந்தது.

காஞ்சி அரண்மனையில் சீன வணிகர்கள் விட்டுச் சென்ற சந்திர காந்தங்களின் ஒளியில் மகாராணி ரேவாதேவியின் அழகிய முகம் சிவந்து, விழிகள் ஜொலித்து அனலை வாரிக் கொட்டிக் கொண்டிருந்தன. பணிப்பெண்களும், காவலரும் அவள் காலடியோசை கேட்டதுமே பதுங்கி மறைந்தனர். அடிபட்ட வேங்கையைப் போல் முன்னும் பின்னும் உலவியவள், வணிகர்களைத் தேடவும், குணவர்மரை அழைத்து வரவும் உத்தரவிட்டுக் காத்திருந்தாள். குணவர்மர் முந்தைய இரவே மல்லைத் துறைக்குச் சென்றுவிட்டதாகவும், அந்த

மாலைப் பொழுதில் திரும்பக் கூடும் என்றும் வீரர்கள் தெரிவித்திருந்தனர்.

பல்லவ மன்னருக்கு குணவர்மர் மீதிருந்த அன்பும், மதிப்பும் அவள் ஏற்கெனவே அறிந்தவைதாம். இதற்கு முன்பும் அவர் பல வணிகர்களை அறிமுகப்படுத்தியிருப்பதை நினைத்துக் கொண்டவள், சீன வணிகர்கள் செயலுக்கு அவர் எத்தனை தூரம் பொறுப்பேற்க முடியும், உதவியிருக்க முடியும் என்பதை தீர்மானிக்க இயலாமல் திணறினாள்.

அவள் குழப்பத்தைத் தீர்க்க, குணவர்மரின் ரதம் வேகமாக வந்து வாயிலில் நின்றது.

ரதத்திலிருந்து இறங்கியவர் வெகு நிதானமான நடையுடன், முறுவல் மாறாத முகத்துடன், வெகு சகஜ பாவத்துடன் உள்ளே நுழைந்தார். சுற்றிலும் பார்வையை ஓடவிட்டவர், "மகாராணி, சீன வணிகர் தம் பணியை திறம்படவே செய்திருக்கிறார். நன்று, நன்று" என்றார் மலர்ந்த முகத்துடன்.

அவரது நிதானமும், பாராட்டும் மகாராணியை அசர அடித்தன. "அவர்கள் உங்கள் இல்லத்தில் இல்லையா?" என்றாள் மகாராணி.

"இல்லை மகாராணி. அவர்களது உறவினர் பலர் இங்கு இருப்பதாகவும், அவர்களுடன் தங்கியிருப்பதாகவும் கூறினார்கள்."

"இதற்கு முன் அவர்களை அறிவீர்களா?"

குணவர்மரின் முகத்தில் சந்தேகச் சாயை பரவி, புருவங்கள் முடிச்சிட்டுக் கொண்டன. "இல்லை மகாராணி. தங்களிடம் நேற்றே கூறினேனே. என் ஈழத்து நண்பரின் அறிமுக ஓலையுடன் நேற்றுதான் வந்தனர். சந்திரகாந்தம் அவர்களிடம் இருந்ததால் அழைத்து வந்தேன். ஏன் மகாராணி, தவறு ஏதும் நேர்ந்துவிட்டதா? தங்களின் விசாரணை ஐயத்தை ஏற்படுத்துகிறது" என்றார் குணவர்மர்.

அவரது நேர்ப்பார்வையும், தெளிவான பதில்களும் மகாராணியின் சந்தேகத்தை அறவே துடைத்துவிட்டன. "குணவர்மரே, நான் ராஜாங்க நலனுக்காக சிறை வைத்திருந்தவர்களை, சீன வணிகர்கள் தப்பிக்க வைத்துவிட்டனர். என் பொக்கிஷத்திலிருந்து முத்துப் பேழைகளையும் எடுத்துச் சென்றுவிட்டனர்," என்று தொடங்கி, நடந்ததை விவரித்தாள்.

"கத்தியைக் காட்டி
ஆயிரம் ரூபாயை
பிடுங்கிக்கிட்டே.....
அப்புறம் எதுக்கு நூத்தி இருபது
ரூபாய் கேட்கறே?"
"சர்வீஸ் டாக்ஸ்
கட்டியாகணுமே!"
- ஜி. லீலா

குணவர்மரின் முகத்தில் வருத்தம் பூரணமாகப் படர்ந்தது. "மகாராணி, காஞ்சியில் இதுவரை நான் பெற்றிருந்த நற்பெயர் சீன வணிகர்களால் பாழ்பட்டுவிட்டது. ராஜாங்க நலன் என்பதால் தாங்கள் என்னை இப்போதே சிறை செய்து விடுங்கள். உரிய தண்டனை எதுவானாலும் ஏற்கச் சித்தமாக இருக்கிறேன். என் வாணிபத்தையும் இன்றோடு முடித்துக் கொள்கிறேன். மன்னர் வந்ததும் என்னை ஒப்படைத்து விடுங்கள்" என்றார் வருத்தம் பூரணமாகத் தொனித்த குரலில்.

பல்லவ மன்னர் வந்தபின் இதை விசாரிப்பதால், தான் இளவரசியையும், முத்துக்களையும் கடத்தியதும், ராஜமாதுலரை இதில் ஈடுபட வைத்ததும் வெளிவரும் என்பதைச் சிந்தித்த மகாராணி, "வருந்த வேண்டாம் குணவர்மரே. சீன வணிகர்களின் உள்நோக்கம் அறியாமல் நீங்கள் அழைத்து வந்தீர்கள் என்பதைத் தவிர, வேறு குற்றமேதும் நீங்கள் செய்யவில்லை. சென்று வாருங்கள். மன்னர் வந்தபின் தங்களை அழைக்கிறேன்" என்று விடை கொடுத்தாள்.

குணவர்மர் அகன்றபின் நெடுநேரம் சிந்தனையில் ஆழ்ந்த மகாராணி, அடுத்து ராஜமாதுலரை அழைத்து வர உத்தரவிட்டாள்.

ராஜமாதுலரிடம் நடந்தவற்றை விவரித்தவள், பாண்டிய இளவரசியை மீண்டும் சிறைப்பிடிக்கவும், அதை பல்லவ மன்னரும் ஏற்கும் வகையில் நிறைவேற்றவும், தான் வகுத்த திட்டத்தை மெல்ல விவரிக்க ஆரம்பித்தாள்.



கிருஷ்ணபட்சம் துவங்கி ஐந்து தினங்களுக்கு மேல் ஓடிவிட்டதால், ஓரத்தில் கிள்ளியெடுக்கப்பட்ட நிலவு மெல்ல வானின் உச்சியை அடைய முயன்றபடியே, மங்கலான ஒளியை வீசிக் கொண்டிருந்தது. தென்மேற்கே அதி வேகமாக விரைந்து கொண்டிருந்த அந்த ரதம், பல்லவ நாட்டு எல்லையை நெருங்கிக் கொண்டிருப்பதையும், எந்த நேரத்திலும் எல்லைக் காவலுக்கு இருக்கும் ராஷ்டிர கூடராலோ, காஞ்சியிலிருந்து தேடியபடியே தொடர்ந்து வந்த வீரர்களாலோ சூழப்பட்டு விடலாமென்பதை உணர்ந்ததால், விண்மீன்களும் அச்சத்தில் கண்களைச் சிமிட்டியபடி உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

ரதத்தினுள் கார்குழலி, தான் வண்டாழஞ்சேரியிலிருந்து கொண்டு வரப்பட்டது முதல், நடந்தவற்றை விம்மல்களுக்கிடையே கூறக் கேட்டபடியே வந்தான் பராந்தகன். அவள் பட்ட இன்னல்களைக் கேட்ட இளவரசியின் மனம் பாகாக உருகிக் கிடந்தது.

சற்று நேரம் மௌனமாக இருந்த பராந்தகன், மெல்லக் கேட்டான். "கார்குழலி, நீ அன்று ஆலயத்துக்கு வந்தது இந்த பகதத்தனைக் காணத்தானா?"

ரதத்தைச் செலுத்திக் கொண்டு வந்த பகதத்தன், குரலைச் செருமிக் கொண்டான்.

கார்குழலியின் தலை கவிழ்ந்து, இளவரசியின் தோளுக்குப் பின் பதுங்கியது. சிறு நகைப்புடன் அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்டாள் இளவரசி. காற்றில் குளிர் அதிகரிப்பதை உணர்ந்த பராந்தகன், ரதத்தின் பின்புறமிருந்த சீலையை எடுத்து இருவரையும் போர்த்தினான். கனத்த சீலை அளித்த வெம்மையில், ரதத்தின் பக்க அசைவில், புரவிகளின் சீரான குளம்படியோசையில், இளவரசியின் மென்மையான தோள்களில் தலை சாய்த்த கார்குழலியின் விழிகள் மெல்ல மூடின. மகாராணியின் மாளிகையிலிருந்து மீண்டுவிட்ட நிம்மதி அவள் இதழ்களில் முறுவலாக மலர்ந்து கிடந்தது.

பராந்தகனின் விழிகள் கார்குழலியைப் பரிவுடன் அணைத்துக் கொண்ட இளவரசியின் மீது பதிந்தன. பின்பு உயர்ந்து வானத்து விண்மீன்களை ஆராயத் தொடங்கின.

பராந்தகனின் சலனமற்ற முகத்தையும், வெறித்த பார்வையையும், விசாலமான நெற்றியையும், சுருண்டு பக்கங்களில் இறங்கிய குழல்களையும் கவனித்தபடியே வந்த இளவரசியின் விழிகளில் ஏதோ பனிச்சிட்டது. மதுரை அரண்மனையின் சித்திரக் கூடத்தில், தான் கண்டிக்கும் முகங்களும், சித்திரமாகத் தீட்டப்பட்டிருக்கும் சம்பவங்களும் அவள் நினைவில் எழுந்தன.

தன் தோளில் சாய்ந்து கொண்டிருந்த கார்குழலியையும் நோக்கிய இளவரசி, "இவர்கள் வண்டாழஞ்சேரியின் சாதாரண விவசாயக் குடிகளுமல்ல, இவர் சாதாரண வீரருமல்ல... தந்தையிடம் இது பற்றி விசாரிக்க வேண்டும்" என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

அடுத்து அவள் விடுத்த "சோழ வீரரே" என்ற அழைப்பில் கனிவு தெரிந்தது.

"என்ன இளவரசி" என்றான் பராந்தகன்.

"என்னை காஞ்சியிலிருந்து மீட்டிருக்கிறீர்கள். அதற்கு எனது நன்றி. உங்கள் விருப்பமென்ன என்று கூறினால், தந்தையிடம் நீங்கள் விரும்புவதை பரிசாக அளிக்கச் செய்கிறேன்."

"நன்றி கூற வேண்டியது நான்தான் இளவரசி. உங்களை மீட்க வந்ததால் தான் கார்குழலி உயிருடனிருப்பதையும், பகதத்தனின் அன்பின் ஆழத்தையும் அறிய முடிந்தது. நான் விரும்புவதும் ஒன்றே ஒன்றிருக்கிறது. சோழ நாட்டின் விடுதலை. அதை வேண்டியே, உங்கள் தந்தையிடம் உதவி கோரி நானும் படைத்தலைவரும் வந்தோம்."

"பாண்டிய மன்னர் நிச்சயம் உங்

அருள்வாக்கு



'காதம்' முதலான கர்மாக்கள் பூர்த்தம் (பலர் கூடிச் செய்யும் பொதுப் பணி) ஆகும் என்று அர்த்தம்.

காதம் என்றால் வெட்டுவது; அதாவது குளமோ, கிணறோ, வாய்க்காலோ வெட்டி உபகாரம் பண்ணுவது. சாஸ்த்ரங்களில் விசேஷித்துச் சொல்லியிருக்கிற இந்தப் பூர்த்த தர்மத்தை மறந்ததால்தான் ஜலக்கஷ்டம் (Water scarcity) என்று ஓயாமல் அவஸ்தைப் படுகிறோம். அந்தக் காலத்தில், இந்தக் கார்யம் ரொம்பவும் முக்கியமாகக் கருதப்பட்டது.

இப்போது வெட்டுகிற கார்யம் போய், தூர்ப்பதுதான் முக்யமான கார்யமாக இருக்கிறது. குழாயில் தண்ணீர் நின்று விட்டாலோ, அல்லது பூச்சியும் புழுவுமாகக் குழாய் ஜலம் வரும் போதோ, "ஏண்டா குளத்தைத் தூர்த்தோம், கிணற்றை மூடினோம்?" என்று துக்கமாக வருகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

களுக்கு..." இளவரசியின் வார்த்தைகள் சட்டென்று நின்றன. பிரதான பாதையிலிருந்து ரதம் திடீரென்று கரடுமுரடான பாதையொன்றில் திரும்பியது.

"பகதத்தா, ஏன் ரதத்தைத் திருப்பினாய்?" - பராந்தகன் கேட்டான்.

"தூரத்தில் புரவிகள் வருவதாகத் தெரிகிறது பராந்தகா. எல்லைக் காவலுக் கிருக்கும் ராஷ்டிரகூடரின் படைப் பிரிவென்று எண்ணுகிறேன்" என்றான் பகதத்தன்.

"சரி, வேறு பாதையேதும் இருக்கிறதா?"

"இந்தப் பாதையின் முடிவில் என் நண்பரொருவரது சத்திரம் இருக்கிறது. அங்கு சென்று சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் சென்று நிலைமையைக் கண்டறிந்து வந்தபின் நாம் மீண்டும் புறப்படலாம்" என்ற பகதத்தன், ரதத்தை அந்த கிளைப்பாதையில் தொடர்ந்து செலுத்தினான்.

சற்றுத் தொலைவு சென்றதும் பெரும் மாளிகையொன்று புலப்பட்டது. பார்த்தவுடன் அது எல்லைப்புறத்தில் அரச குடும்பத்தினர் வந்து தங்கும் மாளிகையாக இருக்க வேண்டுமென்பதும், தற்போது வழிப் போக்கர் தங்கும் சத்திரமாகியிருக்க வேண்டுமென்பதும் புரிந்தது.

உயர்ந்த தூண்களும், வலுவான சுவர்களும், பெரும் சாளரங்களும், மரக் கதவுகளுமாகத் தெரிந்த அந்த மாளிகையின் முகப்பில் ரதத்தைக் கொண்டு நிறுத்தினான் பகதத்தன்.

கீழே குதித்து உள்ளே சென்ற பகதத்தன், சற்று நேரத்தில் ஒரு பருத்த யவனனுடன் வந்தான்.

"பராந்தகா, தற்போதைக்கு இங்கு ஏதும் அபாயமில்லை. பாலும், கனி வகைகளும் இருக்கின்றன. இறங்கி உள்ளே வந்து சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் சென்று எல்லைப் புறத்தின் நிலையைக் கண்டு வருகிறேன்" என்றான் பகதத்தன்.

சத்திரத்தின் உள்ளே கூடமும், அறைகளும் விசாலமாகத் தெரிந்தன. மஞ்சங்களும், இருக்கைகளும் உயர்ந்த வகையாகவும், அதிகம் பயன்படுத்தாதவையாகவும் புலப்பட்டன.

கனி வகைகளையும் பாலையும் அருந்தியவர்கள் ஓய்வு கொள்ள, பகதத்தன் புறப்பட்டுச் சென்றான்.

சாளரத்தின் வழியே வந்த இளங் காற்றும், சுகமான மஞ்சமும் உறக்கத்தை வரவழைக்க, கார்குழலியும், இளவரசியும் சற்று நேரத்தில் உறக்கத்தின் வசப்பட்டனர்.

அபாயம் நெருங்குவதை உணராத பராந்தகனும்கூட, மெல்லக் கண்ணயர முயன்றான். விடிவதற்கு அரை ஜாம நேரமிருக்கையில் அந்த அபாயம், சத்திரத்திலிருந்தவர்களை அதிவேகமாக நெருங்கியது.

(தொடரும்)


Built to Last
அதிக நேரம் சூடு இருக்கக் கூடியது
உடையாதது
கண்ணாடி ரீ்ஃபில் இல்லாதது
துர்நாற்றம் வீசாதது
அதிக நாட்கள் உழைக்கக்கூடியது
KAILASH
பட்டர்ஃபிளை®
Good for a lifetime
கங்காதரம் அப்ளையன்சஸ் லிமிடெட் & பட்டர்ஃபிளை ஹோம் அப்ளையன்சஸ்
377, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
Tel: 24345199, 24364449, 24345313, Fax:24343522 Website:www.buterflyindia.com
பட்டர்ஃபிளை
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
வேக்கும் பிளாஸ்க்
With 'Space-Age Technology'

வேலை கிடைச்சுடுச்சு!



''புடைவை எடுக்கப்போன உங்க மனைவி, அஞ்சே நிமிஷத்துல பர்ச்சேஸ் முடிஞ்சு திரும்பிட்டாங்களா... ஆச்சரியமாயிருக்கே...''

''அவ புடைவை எடுக்கப் போனது என் அம்மாவுக்காச்சே!''

''ச்சே... சட்டையை ஒருநாள்கூட நிம்மதியாப் போட முடியல...''

''ஏன் அழுக்காயிடுதா...?''

''ம்ஹூம்... வாஷிங்குக்குக் கொடுத்தவன் திரும்ப வந்து கேட்கிறான்!''



''அந்த டாக்டர் ஒரு சீரியல் பைத்தியம்னு எப்படிச் சொல்ற?''

''காயத்ரி சீரியலுக்கு முன்னாடி ஒரு மாத்திரையும், புஷ்பா சீரியலுக்குப் பின்னாடி ஒரு மாத்திரையும் போடணும்னு ஃப்ரிஸ்கிரிப்ஷன்ல எழுதியிருக்காரே!''




''இன்டர்வியூவுல கேட்ட முதல் கேள்விக்கு ஓ.கே. சொன்ன உடனேயே, நீ வேலைக்கு செலக்ட் ஆயிட்டியா... அப்படி என்ன கேட்டாங்க?''

''லஞ்சம் தருவியான்னாங்க!''



ஆஸ்கர் திருவிழா!




• இங்கிரிட் பெர்க்மென்

அண்மையில் ஃபிலிம் சேம்பரில் ஆஸ்கர் திருவிழா நடந்தது. முத்து முத்தான ஆறு ஆங்கில ஆஸ்கர் படங்கள் ஒளி பரப்பப்பட்டன. அவற்றுள் காசாப்ளான்கா, கிராண்ட் ஹோட்டல் இரண்டும் கறுப்பு வெள்ளை படங்கள்.

காசாப்ளான்காவைப் பற்றி சிறிது பார்ப்போம். இரண்டாம் உலகப் போரின் பின்னணியில் இரண்டு ஆண்களுக்கிடையே மாட்டிக் கொண்டு தவிக்கும் ஒரு பெண்ணின் உணர்வுபூர்வமான கதை இது. இப்படத்தின் நாயகி, இன்கிரிட் பெர்க்மன். அவரது குழந்தைத்தனமான முகத்தைப் பார்த்தவுடன் பெரியவர்கள் பலர் புன்முறுவல் செய்தார்கள். அந்த நாளைய கனவுக் கன்னி அல்லவா?



படத்தின் ஒவ்வொரு காட்சியும், ஒவ்வொரு வசனமும் பலருக்கு மனப்பாடமாய்த் தெரிந்திருந்தது. "இப்ப என்ன ஆகும் தெரியுமா?" என்று கண்களை விரித்தபடி தனது மகனுக்கோ, பேரனுக்கோ கதை சொல்லும் பெரியவர்களைப் பார்க்க அழகாக இருந்தது.

கிராண்ட் ஹோட்டலின் கதை எளிமையானது. 1932ல் வெளிவந்த இப்படத்தின் கதை, ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கும் வாடிக்கையாளர்களைச் சுற்றி பின்னப்பட்டிருக்கிறது. ஒரு டான்ஸர், ஒரு சூதாடி, ஒரு திருடன், ஒரு மருத்துவர், ஒரு வியாபாரி எல்லோரும் இதில் பங்கேற்கிறார்கள். எதிர்பாராமல் சந்தித்துக் கொள்கிறார்கள். கதை தானாகவே அவர்களிடமிருந்து வெளிப்படுகிறது.

சீரியஸான படங்களுக்கு மத்தியில் ஒளிபரப்பப்பட்ட 'அரவுண்ட் த வோர்ல்ட் இன் 80 டேஸ்' ஒரு ஜாலி ட்ரீட். கதை? ஒரு பிரிட்டிஷ் சீமானும் அவனுடைய உதவியாளனும் சேர்ந்து உலகத்தை பலூனிலும் கப்பலிலும் (சில சமயம் யானையிலும், வான்கோழியிலும்கூட) சுற்றி வருகிறார்கள். பல சுவையான அனுபவங்கள் அவர்களுக்குக் கிடைக்கின்றன... நமக்கும்தான்!

இப்போதைய ஹாலிவுட் உலகம் டாலர்களை வண்டி வண்டியாக செலவழிப்பதுதான் பிரம்மாண்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறது. பழைய படங்களிலும் இப்படிச் செலவழித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கதை, நடிப்பு இவற்றுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை இவர்கள் கொடுக்கத் தவறிவிட்டார்கள். 'அமெரிக்கன் இன் பாரீஸ்' படத்தில் வரும் ஒரு பதின்மூன்று நிமிட பாலே நடனத்துக்காக, அரை மில்லியன் டாலர்கள் தேவைப்பட்டன.

வானளவு வெட்டுக்கிளி, மலையளவு கொசு என்று துரும்பை பூதமாக்கி, பூதத்தைத் துரும்பாக்கி எடுக்கும் இன்றைய ஹாலிவுட் உலகமும், முழுப் படமும் எடுத்துவிட்டு 'அடடே, கதை எழுத மறந்துட்டோமே' என்று வருந்தும் தமிழ்ப் பட உலகமும், இது போன்ற பழைய படங்களை, பாடங்கள் போல் நினைத்துப் பார்க்கலாம், படிக்கலாம், தவறில்லை.

- மருதன்

சிம்பு முதல் சிபி வரை சின்னப் பையன்கள் ஓடி விளையாடும் கோலிவுட்டில், சத்தமில்லாமல் பத்துப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார் சத்யராஜ். "அத்தனையும் சத்தான பாத்திரங்கள். நான் நல்ல கதைகளைக் காதலிக்கிறேன். ரசிகர்கள் என் படங்களைக் காதலிக்கிறார்கள். இதுதான் எனது வெற்றி ரகசியம்" என்கிறார் இந்த மினிமம் கியாரண்டி ஹீரோ. தமது புதிய கெட்அப்புக்களைப் பற்றி அவர் தந்த கேரக்டர் டிப்ஸ்...

பெருமாள் சாமி :

மரண தண்டனை பெற்ற கைதிகளைத் தூக்கில் போடும் சிறை ஊழியன் கேரக்டர். இவனை அரசுக் கொலையாளி என்று கூடச் சொல்லலாம். குற்றம் செய்தவனுக்கும், தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் இவனுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. ஆனால், தனது பணியால் ஓர் ஆபத்தை சந்திக்கிறான் என்பது கதை. பத்து வயதுச் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து கொன்ற தனஞ்செய் சட்டர்ஜியைச் சமீபத்தில் கொல்கத்தா சிறையில் தூக்கிலிட்டார்கள். தனஞ்செய் உட்பட எட்டுப் பேரை தூக்கிலிட்ட சிறை ஊழியரைச் சந்தித்து, நானும், படத்தின் இயக்குனர் அரிராஜனும் ஐந்து நாட்கள் அவருடன் தங்கப் போகிறோம். இதற்குச் சிறை அதிகாரியின் அனுமதி கிடைத்துவிட்டது. பெருமாள்சாமி பாத்திரத்துக்கு உயிரூட்ட இது உதவும்.

ஐயர் ஐ.பி.எஸ். :

இதிலும் இரட்டை வேடம். ஆசாரமான பிராமணக் குடும்பத்திலிருந்து ஒரு முரட்டு போலீஸ் அதிகாரி. இன்னொருவர் வயதான ஊமை வில்லன். வில்லன் பாத்திரத்துக்கு உடல் முழுவதும் கறுப்பு மேக்-அப் போட்டு நடித்திருக்கிறேன். இந்த கேரக்டருக்கு உடல் முழுவதும் நீல வர்ணம் பூசி பலமுறை கிருஷ்ண பரமாத்வாக நடித்த சிவகுமார் அண்ணனிடம் ஆலோசனை கேட்டேன். அவர் 'கொசு கடித்தால்கூட சொறிந்து கொள்ள முடியாது. உடலை அசைத்துக் கொள்' என்றார். அவர் சொன்னதுபோல கொசுக்களுக்கு நல்ல வேட்டை.

மகா நடிகன் :

சினிமாவில் நடிகனாகி, கட்சியில் சேர்ந்து, கட்சித் தலைவரையே கவிழ்த்துவிட்டு முதல்வராகும் மொள்ளமாரி நடிகன் கேரக்டர். இதில் எம்ஜி.ஆர். ஸ்டைலில் நடிக்கிறேன் என்பது வதந்தி. அவர் நேர்மையாக ஆட்சியைப் பிடித்தவர். அதனால் அவர் ஸ்டைலை இந்தப் படத்தில் தவிர்த்திருக்கிறேன்."

- ரவுண்ட்ஸ்பாய்




• மகா நடிகனில் நமீதாவுடன்...

முதல்வராகும் மொள்ளமாரி!




• பெருமாள்சாமியாக...





• மகன் சிபியுடன் பெருமாள்சாமியில்...



• ஐயா ஐ.பி.எஸ்.ஸில் கறுப்பு மேக்-அப்

செப்.24 - நம்பர் 24 அக்பர் சாலை, புதுடில்லி. 'லொடுக்குன்னு' சோனியா சொல்லாம, கொள்ளாம காங்கிரஸ் அலுவலகத்துக்கு போக, 'திடுக்கு'ன்னு யாருமே பயப்படல. காரணம், அங்க இருந்த கொஞ்ச பேரும் 'குறட்டை' விட்டுக்கிட்டு இருந்தாங்களாம். அப்புறம் 'தடதட'ன்னு எல்லோரும் வந்து சோனியா முன்னால் 'தண்டால்' எடுத்தாங்களாம். இதே கூத்து - நம்ம தமிழகத்துல நடந்தா...



அ.தி.மு.க. அலுவலகம் :

அம்மா அதிரடியாய் நுழைகிறார். அதுவரை ஹாயாக 'டு இன் ஒன்'னில் "சினா தானா டோய்.." கேட்டுக் கொண்டிருந்த சுலோச்சனா சம்பத், பதட்டத்தில் பட்டனை மாற்றித் தட்டி சூரியன் எஃப்.எம்.மை ஆன் செய்ய, அம்மா 'மிர்ச்சி' பார்வையை வீச, செங்கோட்டையன் அதுவரை படித்துக் கொண்டிருந்த 'புதுசு கண்ணா'வை பதுக்குகிறார். நிலைமை விபரீதமாவதை உணர்ந்த பன்னீர்செல்வம், "தானே வந்த தானைத் தலைவி, அலுவலகம் வந்த அதிரடித் தலைவி..." என 'வாசிக்க' ஆரம்பிக்க, அனல் தணிகிறது.



பா.ம.க. அலுவலகம் :

படாரென்று ராமதாஸ் நுழைகிறார். கையிலிருக்கும் 'கஜா' சி.டி.யை என்ன பண்ணுவதென்று தெரியாமல், ஜி.கே.மணி, அதை ஏ.கே. மூர்த்தி கையில் திணிக்க, அவர் விழி பிதுங்கி நிற்கிறார். "திருட்டு விசிடியாக் கூட போணியாகாத படத்தை கையில வைச்சுக்கிட்டு ஏன்யா திருட்டு முழி முழிக்கிறே... வாசல்ல எவன்யா போர்டு எழுதுறது...? அது என் தமிழ்ப் பற்றுக்கே அவமானம்!" என பி.பி. எகிற கத்துகிறார். மணி ஓடிப் போய் பார்க்கிறார். ஒரு ஹிந்தி வாலா போர்டு எழுதிக் கொண்டிருக்கிறார். "பட்டாணி மஹ்ஹல் கட்ஜி" என.



அறிவாலயம் :

'நான் இன்று அலுவலகத்திற்கு விடுமுறை' என முரசொலியில் வேண்டுமென்றே கடிதம் எழுதிவிட்டு, அறிவாலயம் செல்கிறார் கலைஞர். 'காஸ்மோபாலிடன், படித்துக் கொண்டிருக்கிறார் கழகக் கண்மணி

ஒருவர். நமது எம்.ஜி.ஆரில் கட்டப்பட்ட கடலைப் பொட்டலம் ஒன்று இறைந்து கிடக்கிறது. ஒருவர் பயபக்தியுடன், திருஷ்டி பூசணிக்காயை சுற்றிக் கொண்டிருக்கிறார். கடுப்பான கலைஞர் தம் அறைக்குள் சென்று கடிதம் எழுதத் தொடங்குகிறார்.

"உடன் பிறப்பே! இந்த அம்மையாரின் ஆட்சியிலே எல்லாமே முரண்பாடாக மாறி விடுகிறது.."



தாயகம் :

ஓர் இரவு வை.கோ.

தானே வந்த தானைத் தலைவி!

தடாலென்று நுழைகிறார். 'மெட்டி ஒலி' பார்த்துக் கொண்டிருந்த நாஞ்சில் சம்பத், தட்டுத் தடுமாறி ரிமோட்டைத் தேடுகிறார். சுற்றிலும் வெற்றிலைக் கறையுடன் எல். கணேசன் இளிக்க, கொதிக்கிறார் வைகோ.

"தொலைக்காட்சியினுள்ளே நம்மை 'வெற்று' என நினைப்பவர்களின் கறை, வெளியே வெற்றிலைக் கறை. கறை நம் வேட்டியில் மட்டும்தான் இருக்க வேண்டும்..." என அறிவுரை வழங்க ஆரம்பிக்கிறார்.



பி.ஜே.பி. அலுவலகம் (சென்னை) :

சி.பி. ராதாகிருஷ்ணன் ரகசியமாக நுழையப் பார்க்கிறார். வாட்ச்மேன் அவரைத் தடுத்து நிறுத்தி "இன்னாபா.. நீ பாட்டுக்கு வர்ற... இன்னா வேணும்... வெள்ளையும் சொள்ளையுமா கட்சிக்காரன் மாதிரியேக் கீற...! இன்னா, முந்தி ஒரு கட்சி இருந்துச்சே, அதுல மெம்பரா நீ...? அந்த ஆபீசெல்லாம் காலி பண்ணிக்கினு போயாச்சு.." எனச் சொல்ல, டென்ஷனாகி ஹெச்.ராஜாவுக்கு 'செல்'லுகிறார் ராதா. "அண்ணே வணக்கம்ணே. எனக்கு கடவுள் நம்பிக்கை ஜாஸ்தின்னு உங்களுக்குத் தெரியும். அதான் வாஸ்துப்படி, நம்ம கட்சி மேலும் வளர, ஆபீசை பங்களாதேஷுக்கு மாத்திட்டேன்.. வெச்சிரவா..." என ராஜா சொல்ல, ராதா பேஜாராகிறார்.

முகில்

ஒன்மேன் ஆர்மி!

ஷாராஜ்

விடுமுறை நாட்கள் வந்துவிட்டால் காலையில் எட்டு மணிக்கே ஜோல்னாப் பையை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவார் வெங்கடேசன்.

அந்தப் பையில் முழுநீள வெள்ளைத் தாள்கள், ஸ்கெட்ச் பேனாக்கள், ஒட்டுவதற்கான பசை, சாக்பீஸ்கள், கையடக்க கேமரா போன்றவை இருக்கும். அதைச் சுமந்தபடி நகரத்தின் மையப் பகுதிகளிலோ, புறநகர்ப் பகுதிகளிலோ சுற்றிக் கொண்டிருப்பார். முக்கியமான சாலைகள் சிதைந்து பள்ளமாகி போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பது, சாக்கடை வழிந்து தெருவில் ஓடுவது, குடிநீர்க் குழாய் உடைந்து நீர் வீணாவது, மக்கள் கூடும் இடங்களில் குப்பை கூளங்கள் மண்டிக் கிடப்பது, மின் கம்பங்களோ, தொலைபேசிக் கம்பங்களோ விழக்கூடிய ஆபத்தில் சாய்ந்து நிற்பது, பொது இடங்களில் அத்துமீறல்கள் நிகழ்வது போன்ற குறைபாடுகள் தென்பட்டால் உடனே அதற்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கிவிடுவார்.

முதலில் அந்த சீர்கேடுகளுக்கு கண்டனம் தெரிவித்து வெள்ளைத் தாளில் வாசகங்கள் எழுதி, அருகே உள்ள பொதுச் சுவரில் ஒட்டி விட்டுப் போவார். இரண்டொரு நாட்களில் சரிப்படுத்தப் படாவிட்டால் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலமோ, நேரிலோ தகவல் சொல்வார். அதுவும் பலனளிக்காவிட்டால், அதைப் பற்றி நாளிதழ்களுக்கு புகார்க் கடிதம் எழுதிவிடுவார். தேவைப் பட்டால் புகைப்படமும் எடுத்து இணைக்கப்படும்.

குறைகளையும் குற்றங்களையும் நாளிதழ்கள் மூலம் லட்சக் கணக்கானவர்கள் அறிந்து கொள்வதால், பொது மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடமை ஆற்றியாக வேண்டிய நிர்பந்தமும், குற்றவாளிகளுக்கு பயமும் ஏற்படுகிறது என்பது வெங்கடேசனின் உளவியல்.

கோகிலாவுக்கு இதொன்றும் பிடிக்காது.

"லீவு நாள்ல வீட்டுல இருந்தமா, ரெஸ்ட் எடுத்தமான்னு இல்லாம, எதுக்குங்க இப்படி பொதுநலம், சமூக சேவைன்னு அலைஞ்சுட்டிருக்கீங்க? அதனால நமக்கு ஏதாவது பிரயோஜனம் உண்டா?" என்று கேட்பாள்.

"சேவைங்கறது பலனை எதிர்பார்த்து செய்யறதில்ல, கோகி! அது ஆத்ம திருப்திக்காக செய்யறது. அதுதான் அதோட பலன்னு வேண்ணாலும் வெச்சுக்கோயேன்" என்பார் அவர்.

இப்படி சேவை செய்வதால் குடும்பத்துக்கு வேண்டியதைச் செய்வதில் எதுவும் தவறிவிடவில்லை. லோன் போட்டு சொந்த வீடு கட்டினார். அத்தியாவசியப் பொருள்கள் யாவற்றையும் வாங்கிக் கொடுத்தார். மகனையும் நல்ல முறையில் படிக்க வைத்தார். அவன் இப்போது சென்னையில் பணிபுரிந்து கொண்டிருக்கிறான். திருமணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது. குடும்பத்தை சரிவர கவனிக்காமல், சமூக சேவைக்குப் போகவில்லை என்பதால் கோகிலா, வெங்கடேசனை அவரது போக்கில் விட்டுவிட்டாள்.

உத்தியோக ஓய்வு பெற்றதிலிருந்து அவரது பொது நலச் செயல்பாடுகள் தீவிரமடைந்தன. நுகர்வோர் மன்றத்தில் பல நிறுவனங்கள் மீது பொதுநல வழக்குகள் தொடுத்தார். அரசு மருத்துவமனையில் ஊழியர்களும், மருத்துவர்களும், நோயாளிகளிடம் கட்டாயப் படுத்தி லஞ்சம் வாங்குவது, ஒரு அரசியல்வாதி பினாமியின் பேரில் ஊழல்கள்

செய்தது, ஆற்று மணல் கொள்ளை முதலானவற்றை ஆதாரத்தோடு வெளிப் படுத்தினார்.

இவற்றின் காரணமாக அவருக்கு தொலைபேசி மூலமாகவும், மொட்டைக் கடிதம் வாயிலாகவும் மிரட்டல்கள் வந்தன.

ஆனால் வெங்கடேசன் எதற்கும் பயப்படவில்லை. வழக்கம் போல் தனது பணியைச் செய்து வந்தார்.

அன்று காலை ஆறரை மணி. காபி பருகியபடியே வீட்டு வாசற்படியில் அமர்ந்து, செய்தித்தாள்கள் வாசித்துக் கொண்டிருந்தார் வெங்கடேசன்.



வீட்டுக்கு முன்பாக ஒரு டாடா சுமோ வந்து நின்றது. அறிமுகமற்ற நாலைந்து பேர் இறங்கி, சுற்றுப்புறத்தை நோட்டமிட்டபடியே வந்தார்கள். கேட்டின் மேல் கொக்கியையும் அவர்களே விடுவித்துக் கொண்டார்கள்.

"வெங்கடேசன்ங்கறது நீங்கதானே?"

"ஆமா..." செய்தித்தாளை மடித்தபடியே எழுந்தார்.

குறுந்தாடி வைத்திருந்தவன் ஜாடை காட்டவே அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர். "யா... யார் நீங்க? என்ன விஷயம்?" என்று கேட்டார்.

அவர்கள் அதற்கு பதில் சொல்லாமல், "ஏண்டா, கிழவா... எங்களப் பத்தியா போட்டுக் குடுக்கற?" என்றவாறே சட்டைக்குள் முதுகுப்புறமாக மறைத்து வைத்திருந்த வீச்சரிவாள்களை உருவினார்கள்.

அவர் சுதாரித்துக் கொள்வதற்குள் தாக்குதல் தொடங்கிவிட்டது.

வீட்டுக்குள் சமைத்துக் கொண்டிருந்த கோகிலாவுக்கு வெளியில் ஏதோ களேபர சத்தம் கேட்டது. "ஐயோ...!" என்கிற வெங்கடேசனின் கதறலும் எழவே, கையிலிருந்த பாத்திரத்தை அப்படியே கீழே போட்டுவிட்டு பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தாள். வன்முறைக் கும்பல் அவரைச் சூழ்ந்து கொண்டு அரிவாளால் சரமாரியாக வெட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும், "பாவிகளா...! அவர விடுங்கடா...!" என்று பாய்ந்தாள். ஒரு முரடன் அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டான். பின்னந்தலை கதவில் மோத நிலைகுலைந்து விழுந்தவள், "காப்பாத்துங்க... காப்பாத்துங்க...! அவரக் கொல்றாங்களே...! ஐயோ... யாராவது ஓடி வாங்களேன்..!" என்று அலறினாள்.

உடம்பெங்கும் வெட்டுக் காயங்கள் பட்டுவிட்ட நிலையில், உயிரைக் காத்துக் கொள்ளும் தவிப்பில், வெங்கடேசன் அலை பாய்ந்தார். சுற்றி வளைத்த கும்பலை மீறி வெளியேற இயலவில்லை.

காம்ப்பௌண்ட் சுவருக்கும் வீட்டுக்கும் இடையே உள்ள குறுகிய இடைவெளியை அவர்கள் அடைத்துக் கொண்டிருந்தனர். வீட்டுக்குள்ளும் போக முடியாது. வெளியிலும் போக முடியாது. குனிந்து, இரண்டு பேருக்கு நடுவே எப்படியோ புகுந்து மாடி போர்ஷனை நோக்கி ரத்தம் சிதற ஓடினார். அப்போதும் ஒரு அரிவாளின் முனை பின்னந்தலையைக் கொத்தியது. இன்னொன்றின் வீச்சு வலது புஜத்தில் ஆழப் பதிந்தது. வெங்கடேசன் முன் பக்கம் சரிந்து மாடிப் படிக்கட்டில் குப்புற வீழ்ந்தார்.

இதற்குள் மாடி போர்ஷனில் வாடகைக்குக் குடியிருக்கிற காளிமுத்துவின் குடும்பத்தாரும் அக்கம் பக்கத்து வீட்டினரும் வெளியே வரவே, அந்தக் கும்பல் ஓடிச்சென்று வாகனத்தில் தொற்றிக் கொண்டு விரைந்துவிட்டது.

கவலைக்கிடமான நிலையில் வெங்கடேசன் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கே தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. உடனடியாக இரண்டு ஆபரேஷன்களும் பிறகு ஒன்றும் நடத்தப்பட்டன. உயிர் பிழைத்துக் கொண்டார்.

போலீஸ் கேஸாகியிருந்ததால் இவர்களிடம் விசாரணை செய்யப்பட்டு, சம்பவம் நடந்த இடமும் பார்வையிடப்பட்டிருந்தது. தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை. குற்றவாளிகள் யார் என்பது கோகிலா உள்ளிட்ட யாருக்கும் தெரியாது. வெங்கடேசன் மீது நிறையப் பேருக்கு பகைமை இருந்ததால் குறிப்பிட்டு யாரையும் சந்தேகிக்க இயலவில்லை.

இதனிடையே அவர் தனியார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மற்ற காயங்கள் ஆறிக் கொண்டிருந்தன. வலது கை மட்டும் குணமாகவில்லை. புஜத்தில் ஆழமாகப் பதிந்த வெட்டு எலும்பைச் சேதப்படுத்தியிருந்தது. உலோகம் வைத்து சர்ஜரி செய்வதன் மூலமாகவாவது சரிப்படுத்த முடியுமா என அறிவதற்கான பரிசோதனைகள் செய்யப்பட்டன. அது முடியாது என்பது தெரியவந்தது. கையை நீக்கியே ஆக வேண்டிய கட்டாயம்.

"எவ்வளவு செலவானாலும் பரவால்ல, டாக்டர்! கைய எடுக்காம, சரி பண்றதுக்குப் பாருங்க. இங்க முடியல்லன்னா சென்னைக்கு கூட்டிட்டுப் போயிடறேன்" என்றான், அங்கிருந்து வந்திருந்த இவர்களின் மகன்.

"அப்படி இருந்தா நாங்களே சொல்லியிருப்போம். இது ரொம்ப மோசமான நிலைமைல இருக்கு. சென்னைக்குன்னு இல்ல, வெளிநாட்டுக்கே கூட்டிட்டுப் போனாலும் எதுவும் பண்ண முடியாது" என்றனர் மருத்துவர்கள்.

வேறு வழியில்லாமல் வலது கையை நீக்க வேண்டியதாகிவிட்டது.

பதினேழு தினங்களுக்குப் பிறகு அவர் வீடு திரும்பினார். பூரணமான படுக்கை ஓய்வு. இன்னும் தலையிலும் கையிலும் கட்டுகள் இருந்தன. நீக்கப்பட்ட கையின் காயம் ஆறிய பிறகு செயற்கைக் கை பொருத்திக் கொள்ளலாம் என்று மருத்துவர்கள் கூறியிருந்தனர்.


இல்லாத கையின் ஞாபகம் அடிக்கடி வந்து கொண்டேயிருந்தது அவருக்கு. எடுக்கவோ, பிடிக்கவோ, தொடவோ அனிச்சையாக முன்னுக்கு வருகிற அந்தக் கை எவ்வளவு உபயோகமாக இருந்தது! அந்த வலது கையில் செய்ததையெல்லாம் இப்போது இடது கையால் செய்ய வேண்டியிருந்தது. வலது கையைப் போல

வாடிக்கையாளர்களை வேதனைப்படுத்தலாமா?

அண்மையில் துணியெடுக்க ஒரு பிரபல துணிக்கடைக்குச் சென்றிருந்தேன். பர்ச்சேஸ் முடிந்து படியிறங்கும் போது திடீரென்று என்னைத் தனியே அழைத்தார் அந்தக் கடைச் சிப்பந்தி ஒருவர். 'எதற்கு?' என்றதற்கு 'உங்களை செக் செய்ய வேண்டும்' என்று கூறி, என் அனுமதிகூட பெறாமல், அவர் இஷ்டத்துக்கு நான்கு பேர் எதிரில் என் உடைகளைத் தடவ ஆரம்பித்து விட்டார். பாக்கெட்டிலும் கைவிட்டுத் துழாவினார். பிறகு எதுவுமில்லையென்று தெரிந்ததும், 'நீங்கள் போகலாம்' என்று கூறிவிட்டார்.

அவரின் செய்கையால் எனக்கு அவமானமாகப் போய்விட்டது. ஒரு பெரிய ஜவுளி நிறுவனம் இப்படியா வாடிக்கையாளர்களை மிகக் கேவலமாக நடத்துவது? இப்படி மன உளைச்சலுக்கு ஆளான கஸ்டமர்கள் மறுபடி அந்தக் கடைக்கு எப்படி வருவார்கள்? என்னிடம் எதுவுமில்லையென்று தெரிந்த பிறகாவது, ஊழியர் மன்னிப்பு கேட்டாரா என்றால், அதுவும் இல்லை.

வியாபாரிகளே... யாரையேனும் சந்தேகப்படும்போது அவரின் அனுமதி பெற்றே, அதுவும் தனியறையில் சோதனையிட வேண்டும். அப்போதுதான் தவறு செய்யாத பட்சத்தில் அந்த வாடிக்கையாளரை நிறுவனம் தக்க வைக்க முடியும். இந்த அடிப்படை



நாகரிகம்கூடத் தெரியாமல் கஸ்டமர்களைக் கேவலப்படுத்தும் உங்கள் செயல் நாகரிகமன்று. வாங்க வருபவர்களை நல்ல முறையில் நடத்தவும் வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

- எம்.காளிதாஸ்,
சென்னை - 83

அது இயல்பாகவோ கலபமாகவோ இருக்கவில்லை. தவிர, இரண்டு கைகளால் செய்யக் கூடிய செயல்களை அந்த ஒரு கையால் செய்வதும் பாடாயிருந்தது. முடியாதவற்றுக்கு கோகிலாவின் ஒத்தாசை தேவைப்பட்டது. அவரை அவஸ்தைக்குள்ளாக்கும் தருணங்கள் யாவும் அப்போதுதான் நேர்ந்தன. கழுவுகிற கையில் சாப்பிடுவது, சாப்பிட்ட கையில் கழுவுவது...

சீக்கிரமே அதை மனம் ஏற்றுக் கொண்டுவிட்டது. செயலற்று ஓய்ந்திருக்கும் நிலையைத்தான் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இந்த முடக்கம் கழிவிரக்கத்தை உண்டாக்கியது. வீடு, சிறையாகத் தோன்றியது.

மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு வந்துவிட்டவரை நலம் விசாரிப்பதற்காக பக்கத்துத் தெருவைச் சேர்ந்த முதியவர் திருஞானம் வந்திருந்தார். பேச்சோடு பேச்சாக அவர் ஒரு தகவல் தெரிவித்தார். நகராட்சிக்கு உட்பட்ட ஒரு மயானத்தில் பிணத்தைப் புதைப்பதற்கு லஞ்சம் வாங்கப்படுகிறதாம்.

"மனுசன் வாழும்போதுதான் போற எடத்துலல்லாம் லஞ்சம் குடுக்க வேண்டியிருக்குதுன்னு பாத்தா.... செத்தப்புறமும் குடுக்க வேண்டியிருக்கு. கலி முத்திடுத்தான் போச்சு!" என்றார்.

வெங்கடேசனுக்கும் அதே வருத்தம்.

"ம்ம்...! என்ன பண்றது? இந்த மாதிரி அநியாயங்களை தட்டிக் கேக்கறதுக்கு நம்ம ஏரியாவுல நீங்க ஒருத்தர்தான் இருந்தீங்க. உங்களையும் இப்படிப் பண்ணி மூலைல மொடக்கிட்டானுகளே படுபாவிக...!" என்று அங்கலாய்த்தார் பெரியவர். "எவ்வளவோ பேருக்கு உபகாரம் பண்ணுன கை அது! இந்த டவுனு முழுக்க எத்தனை எத்தனையோ குறைகளைத் தீக்க எழுதுன கை. அதையே வெட்டிட்டானுகளே...!"

அந்தக் கை இருந்த இடத்தை, இப்போது மூளியாக இருக்கும் புஜத்தை, அனுதாபத்தோடு பார்த்தார் அவர்.

வெங்கடேசன் எதுவும் சொல்லவில்லை. அவர் விடை பெற்றுச் சென்ற பிறகு யோசனையில் ஆழ்ந்தார்.

சற்று நேரத்துக்குப் பிறகு கோகிலா தம்ளர்களை எடுக்க வந்தபோது, வெங்கடேசனை படுக்கையில் காணோம். அடுத்த அறையில் மேஜையருகே போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்திருந்தார். மேஜைக்கும் நாற்காலிக்குமிடையே பேடை வைத்து, இடது கையால் பேனா பிடித்து எழுதப் பழகிக் கொண்டிருந்தார் அவர்.

●

23

தாமரை புத்தகத்தை மூடி வைத்தாள். அந்த நூலகம் அவளுடைய பல வினாக்களுக்கு விடையளிக்கக் கூடியதாக இருந்தது. மதுராவுடன் இருக்கும் நேரங்களைத் தவிர்த்து, மற்ற நேரங்களில் அங்கேயே தங்கி விடுகிறாள். சிவகாமியும், தியாகராஜனும் எந்த மறுப்பும் தெரிவிப்பதில்லை. சிவகாமி அவள் படித்த புத்தகங்களை இவளுடன் விவாதிக்கிறாள்.

"வாழ்க்கை என்பது போராட்டம் தானா?"

"நிச்சயமா"

"வெற்றி, தோல்வி உள்ள போராட்டமா?"

"ஆமாம்."

"உங்களைப் போல மாணிக்கத் தொட்டிலில் பிறந்தவர்களுக்குத் தோல்வி என்பதே இருக்க முடியாதே."

"திருஞானம் என் தோல்வியல்லவா?"

தாமரை பதில் எதுவும் கூறவில்லை.

"நாளைக்கு திருஞானத்திடம் வெளிய எங்கனயும் போயிரச் சொல்லாத. இவக பெரியப்பச்சியோட கடைசி மகன், பிள்ளையில்லயின்னு பிள்ளை எடுக்கப் போறான். பெரிய விசேஷமா நடக்கப் போவுது. எல்லாரும் போகோணும். சொல்லி வை."

இருப்பினும் இரவில் அவன் வந்ததும் சொன்னாள்.

"மத்த சாதியில தத்தெடுக்குறதும், நம்ம



நகரத்தாரில தத்து எடுக்குறதும் மொத்தமா வேற வேற. தெரியுமில்லஞ்ச?"

"உம்"

"மத்த சாதியில எப்படி வேணுமின்னாலும் தத்தெடுப்பாக. நாம அப்படியில்ல. ஆம்பளப் பயலத்தான் தத்தெடுக்கோணும். ஒரே கோவிலைச் சேர்ந்த புள்ளியிடம் உள்ள மகனைத்தான் தத்தெடுக்கோணும். இவ்வளவு ஏன் வப்பாட்டிக்குப் பொறந்த பயலைக் கூட தத்தெடுக்க முடியாது. இது எதைக் காட்டுது தெரியுமா?"

தாமரை வாய் திறக்கவில்லை.

"இனம் என்னும் சங்கிலியின் கண்ணிகள் ஆண் பிள்ளைகள். மதுராவைப் போல பெண் பிள்ளைகள் இல்லை. எனக்கொரு ஆண்பிள்ளையைப் பெத்துத் தருவியா? மதுராவைப் போல் கதிரேசன் சாடையில் வேண்டாம். என் சாடையில் ஒரு மகன்."

தீக்கங்குகளைத் தலை வழியாகக் கொட்டியது போல் ஆனது.

"உண்மை சுடுதா?" என்றான். அவன் பேச்சின் தொடர்ச்சி, அவளுடைய வேதனையைத் தெரிந்து கொண்ட பின்பும் அதை ரசிப்பதாகவே தெரிந்தது.

தாமரை கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ஏன் இப்படி வதைக்கறீக? என்ன சந்தோஷம் உங்களுக்கு? வெறும் வக்கிர சந்தோஷத்துக்குத்தான் இப்படிப் பேசறீகளா? இல்லை நெசமாகவே ஒரு நெனப்பு விளுந்திருச்சா?"

"விளுந்திருமோன்னு அச்சமா இருக்கு."

"நான் என்ன செஞ்சு நிரூபிக்கணும்? தீ வளர்த்து குதிக்கணுமா? இல்லை சிலம்பை ஒடைக்கணுமா? என்ன செய்யட்டும்?" ஆவேசத்தில் அலறினாள்.

"என்னடி மெரட்டுற?" அவளை உதறி விட்டு, அவன் படுக்கையில் படுத்துக் கொண்டான். இரவு முழுவதும் அவனுடைய வார்த்தைகளின் வெப்பம் தாளாமல், தான் மீண்டும், மீண்டும் சிறுமைப்படுத்தப்படுவதனால் ஏற்பட்ட மன உளைச்சலில், ஒரு நாழிகை கூட தூங்காமல் கழித்தாள்.



வலம்புரி முத்து

சத்தியப்ரியன்

விசுவநாதனின் பங்களா மாம்பலத்தில் இருந்தது. இவர்களுடைய பங்களாவுக்குச் சிறிதும் குறைவின்றி பெரிய புல்வெளி, மூன்றடுக்கு என சகல வசதிகளுடன் கூடிய பங்களா. மூன்று பிள்ளைகள், இரண்டு பெண்கள். இரண்டாவது மகனான விசுவநாதனுக்கு மட்டும் வாரிசு இல்லாமல் போயிற்று. மருந்து, மாந்திரீகம், பூஜை,

'தீபம்' நா. பார்த்தசாரதியும் திருப்பூர் கிருஷ்ணனும், ஒரு நாள் டிபன் சாப்பிட சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டலுக்குச் சென்ற போது, அங்கே கண்ணதாசனைப் பார்த்திருக்கிறார்கள். நா.பா. அவரிடம், "ரொம்ப மகிழ்ச்சி... இதே மாதிரி குடிக்காமலேயே இருங்களேன். ஏன் உடம்பைக் கெடுத்துக் கொண்டு மதுவை நாடுகிறீர்கள்?" என்று கேட்க, அதற்குக் கண்ணதாசன், "தங்கள் அன்புக்கு நன்றி. ஆனால் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நானும் மதுவிலக்குக்கு ஆதரவானவன் தான். அதனால் தான் மற்றவர்கள் குடிக்கக் கூடாது என்று நிறைய நானே குடித்துத் தீர்க்கிறேன்.." என்று சொன்னாராம். அங்கே ஒரே சிரிப்பு. உரத்த சிந்தனை அமைப்பு நடத்திய விழாவில் திருப்பூர் கிருஷ்ணன் பேச்சிலிருந்து.



- லெ.நா. சிவகுமார்

விரதம் எதுவும் பலனளிக்க வில்லை. தலைக்கு மூன்று வருஷம் என, பன்னிரண்டு வருஷம் போனதும் தான், வீட்டுப் பெரியவர்கள் முடிவு செய்து, கொஞ்சம் சிரம தசையில் இருக்கும் இன்னொரு அண்ணன் மகன் வயிற்று மகன் ஒருவனை, பிள்ளை கூட்ட முடிவு செய்தார்கள். உறவும் விட்டுப் போகாது. சொத்தும் பிரியாது. 'புத்' என்ற நரகத்திலிருந்து, விசுவநாதனுக்கும் விடுதலை கிடைக்கும்.

விசுவநாதன் வீட்டுக் குடும்பப் பெண்கள், அவர்களை இன்முகத்துடன் வரவேற்று சிற்றுண்டி அளித்தார்.

பங்காளிப் பெண் ஒருத்தி, மதுராவை உச்சி முகர்ந்து விட்டு "பிள்ளை அப்படியே தாமரையைக் கொண்டு இருக்கு" என்றாள்.

"பார்த்துச் சொல்லுங்க அண்ணமூண்டி.. என்னய மாதிரி இருக்குன்னு தாமரை பொய் சொல்லுறா" என விளையாட்டுப் பேச்சுப் போல் தாமரையைக் கண்களில் தாக்கினாள்.

சுவீகாரப் புத்திரன் அந்த ஹாலில் நுழைந்த பொழுது, மங்கலச் சங்கு ஊதினார்கள். விசுவநாதனின் ஆத்தாள் மாக்கல் விளக்கு எடுத்து வந்து, பிள்ளைக்கு மங்கல ஆரத்தி எடுத்தாள். அப்பொழுதும் பெற்றவளின் முந்தானையை விடாத பிள்ளையைத் தாய் அதட்டினாள்.

"கொடுமையில்லையா இது?" என்றாள் தாமரை.

"கொடுமை என்ன கொடுமை? அவன் அப்பன், ஆத்தாவுக்கு வீடு, நிலம், எஸ்டேட் எல்லாம் எழுதிக் கொடுத்தாச்சு. போதாததுக்கு கம்பெனி ஷேர்."

"அப்பன், ஆத்தாவுக்கு பணம் ஈடு. பாவம் அந்தப் பிள்ளைக்கு எது ஈடு?"

"அதுக்குத்தான் சிறு பிள்ளையா இருக்கும்பொழுதே சுவீகாரம் கொடுத்திடோணும்."

"இனம் மிக முக்கியமாய் நகரத்தாரிடம் காப்பாற்றப்படுகிறது."

"நகரத்தாரிடம் மட்டுமில்லை. நம் நாட்டில் உள்ள பல்லாயிரம் சாதியினரிடமும், அவர்களது இனம் அவரவர் சாங்கியங்கள் மூலம் காப்பாற்றப்படுகிறது."

"அந்நிய இனத்திற்கு தாய் இனத்தில் இடமில்லையா?" என்ற கேள்விக்கு சிவகாமி நிமிர்ந்து பார்ப்பதற்கு பதில், முன்னால் அமர்ந்திருந்த திருஞானம் அவளைப் பார்த்து வக்கிரமாகச் சிரித்தபடி "இடமில்லை" என்றான்.

வடுகநாதன் என்ற சிறுவன் மேடையில் ஏறினான். விசுவநாதனும், அவன் மனைவி மெய்யம்மையும் மேடையில் அமர்ந்திருந்தார்கள்.

சுவீகாரப் பையன் மெய்யம்மையின் கால்களை பாலால் கழுவினான். மெய்யம்மை அவனை வாரிக் கொண்டு உச்சி முகர்ந்து, தன் கையில் இருந்த பால் குவளையிலிருந்த பாலை, பையன் வாயில் ஊற்றினாள்.

"இவன் வந்த பிறகு மெய்யம்மைக்குப் பிள்ளை பிறந்துச்சுன்னா, இவனை என்ன பண்ணுவாக?" என்றாள் தாமரை.

முன்வரிசையில் அமர்ந்திருந்த திருஞானம் திரும்பிப் பார்த்து, "விசுவநாதனுக்கு அவன் மூலமா பொறந்த பிள்ளை கிட்டதான் பற்று கூடுதலா இருக்கும்" என்றான். சொல்லிவிட்டு தாமரையைப் பார்த்துச் சிரித்தான்.

விழா முடிந்ததும் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்து முடிந்ததும், ஒரு தனிமையான சந்தர்ப்பத்தில் தாமரையிடம் "நான் நேரா ஆஃபீஸ் போறேன். நீ அம்மாவோட வீட்டுக்குப் போயிரு" என்றான் திருஞானம்.

"ஆஃபீஸ் போயிட்டு வாரப்பவாச்சும் மனசை மாத்திக்கிட்டு வாங்க" என்றாள் அவள்.

"மனசை மாத்திக்கிலேன்னா வராதங் குறியா?"

"நேராவே சிந்திக்கத் தெரியாதா? எப்பவும் குதர்க்கமா?"

"உரிமை எடுக்கப் பார்க்காத. நீ ஒரு ஷோ-கேஸ் பொம்மை என்பதை உனக்கு நினைவுபடுத்தணுமா? குதர்க்கம் என்பது என் உடலோடு ஒட்டிப் பிறந்தது. நான் செத்துப் போனாதான் என் குதர்க்கமும் போகும்."

மதுராவை தோளில் கிடத்தி, இரண்டு கைகளாலும் 'என்னை விட்டுவிடு' என்ற ரீதியில் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"போயிடுங்கறியா?" என்றான்.

அதுதான் அவளிடம் பேசிய கடைசி வார்த்தை. மதுராவை அழைத்துக் கொண்டு தியாகராஜன், சிவகாமியுடன் வேறொரு சொகுசுக் காரில் வீட்டிற்குக் கிளம்பினாள். இரவு முழுவதும் அவன் சமீபமாக சொல்லத் தொடங்கிய குற்றச்சாட்டு - அது குற்றச்சாட்டு இல்லை, அவதூறு இல்லை, அதற்கும் மேல் - நினைவுக்கு வந்தது. அவனிடம் இதைப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என காத்திருந்த அவளுக்கு, அப்படி ஒரு சந்தர்ப்பமே அமையாமல் போனது. அந்தக் கொடூரமான தொலைபேசி அழைப்பு, அவளுடைய வாழ்வைப் புரட்டிப் போடுவதாக இருந்தது.

"நாங்கள் அவசர உதவிப் பிரிவைச் சேர்ந்தவர்கள். திருஞானம் என்ற பெயரை உடைய நபர், கார் விபத்தில் மகாபலிபுரம் சாலையில் அடிபட்டு அந்த இடத்திலேயே இறந்து கிடக்கிறார். எங்கள் பாதுகாப்பில் உள்ளது அவர் உடல். 'மகாபலிபுரம் 30 கிலோ மீட்டர்' என்ற அடையாளக் கல் அருகில் விபத்து நிகழ்ந்துள்ளது."

கேட்கும் சக்தியை இழந்த அவள் தொலைபேசியை மாமனாரிடம் கொடுத்துவிட்டு, சரிந்து விழுந்தாள். அவன் உயிர் பிரிந்த தருணத்தில், மதுரா அவர்களது மகள்தான் என்ற நினைப்பு அவனிடம் தோன்றியிருக்குமா?

(தொடரும்)

ஜான்சிராணி!

கதாநாயகன் நாயின் துணைகொண்டு வில்லனை ஒழிப்பது, கதாநாயகிக்கு நாய் உதவி செய்வது- இவை நாம் பார்த்த தமிழ் சினிமாவின் பழைய ஃபார்முலாக்கள். ஆனால், இன்று நிஜமாகவே இப்படி உதவிடும் நாய்களும் உள்ளன. 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்ற மீசைக்காரப் புலவனின் எட்டயபுரத்திற்கு அருகில் உள்ள கரைக்காய்பட்டி என்ற கிராமத்தில், குமார பெத்து நாயக்கர் என்பவர் நிறைய ஆடுகளை வளர்த்து வருகிறார். இந்த ஆடுகளை மேய்ச்சலுக்காக காட்டுக்கு கொண்டு செல்லும் போதும், இந்த ஆடுகளை கட்டிப் மேய்க்கும் போதும் ஜான்சிராணி என்ற பெண் நாய் இவருக்கு உறுதுணையாக உள்ளது. இதைத் தவிர, இரவு நேரங்களில் ஆட்டு மந்தையில் ஆடுகள் கிளம்பி வீட்டுக்குச் செல்லாமலும், திருடர்கள் அங்கே நுழையாமலும் காத்து வருகிறது. இந்த ஜான்சிராணி நாய், வேட்டைநாய் வகையைச் சேர்ந்தது. இந்த நாய் போட்ட குட்டியை இவர் ஒருவருக்கு கொடுத்து விட, தன்னிடமுள்ள பாலை தன் எஜமானரின் ஆட்டுக்குட்டிக்குக் கொடுத்து 'நாய் நன்றியுள்ள பிராணி' என்பதை வித்தியாசமாக உணர்த்தி வருகிறது. ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளும் நம்மவர்கள், இதைப் பார்த்தாவது மனம் மாறினால் நல்லது.



- டி.எல்.ரெட்டி, வேலிடுபட்டி


கலையுணர்வு,
கவிதையுணர்வு,
கலகலப்பு
இணைந்த
அரியதொரு
தயாரிப்பு!
விலை ரூ.80/-
கூரியரில் பெற ரூ.30/-
சேர்த்து அனுப்பவும்.
உள்ளூர் ஏஜெண்டிடமும்
பதிவு செய்து
கொள்ளலாம்
மானேஜர், கல்கி,
ஈக்காடுதாங்கல்,
சென்னை-600 097
கல்கி தீபாவளிமலர் 2004
வாங்கத் தவறினால் வருத்தப்படுவீர்கள்!



• ஈசுவரன் டி.கே.பி. தம்பதி... (படம்: ஸ்ரீஹ

ஒபீடியண்ட் சாம்ராக்ஞி!

'சங்கீத சாம்ராக்ஞி' என்றொரு பட்டத்தையும், ரூபாய் பத்தாயிரம் பணமுடிப்பையும் டி.கே. பட்டம்மாளுக்கு வழங்கியது பாரத் கலாச்சார் அமைப்பு. விமர்சகர் கே.எஸ்.மகாதேவன், ஓவியரும் இசைக் கலைஞருமான எஸ்.ராஜம், பாரத் கலாச்சார் நிறுவனர் திருமதி ஒய்.ஜி.பி. ஆகியோர் பாராட்டிப் பேசினர். "பட்டம்மா ஒரு பாட்டுப் பாடணும்" என்று கேட்டுக் கொண்டார் திருமதி ஒய்.ஜி.பி. டி.கே.பி. தயங்க, அவர் கணவர் ஈசுவரன் 'வேண்டாம்' என்று மறுக்க, திருமதி ஒய்.ஜி.பி. ஒரு கணம் தலைமை ஆசிரியை ஹோதாவை மீட்டெடுத்துக் கொண்டு, ஓர் அதட்டுப் போட்டார். "மாமா அப்படித்தான் சொல்லுவார்! நீங்க பாடுங்கோ!"

தாம் பாடிப் பிரபலப்படுத்திய 'சாந்தி நிலவ வேண்டும்' என்ற பாடலின் முதல் இரு வரிகளை மட்டும் 'ஒபீடியண்ட்டாக'ப் பாடி முடித்துக் கொண்டார் ப்ட்டம்மாள்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு திருமதி ஒய்.ஜி.பி.யிடம் கைகுலுக்கி விடை பெற்ற ஈசுவரன், 'சீனியர் ஸ்போர்ட்ஸ்மேன்' என்ற பட்டத்துக்குரியவரானார். ஸ்போர்ட்டிவ்வாக கை குலுக்கியதற்காக அல்ல...! தொண்ணூற்றியொரு வயதிலும் தளராமல், தவறாமல் தினமும் டென்னிஸ் ஆடி வருபவர் என்பதற்காக! அடையாறு ஹம்சத்வனி சபா, 'டி.கே.பி.யுடன் ஈசுவரன் மாமா'வுக்கும் வேறு பல மூத்தோருக்கும் அடுத்த வாரமே, ஆழ்வார்பேட்டை நாரதகான சபாவில், விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தியது. நிகழ்ச்சி ஸ்பான்ஸர்... வேறு யார், ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்தான்!



• குழந்தை கிருஷ்ணா!

செப்டெம்பர் 16, எம்.எஸ்.ஸின் 88வது பிறந்த நாள். மும்பை ஷண்முகானந்தா, ஆண்டுதோறும் இந்தத் தேதியில் ஓர் இசை ஆசிரியரைத் தேர்வு செய்து, எம்.எஸ். பெயரால் விருதும் பரிசும் வழங்கி வருகிறது. இவ்வாண்டு பெற்றவர், ராஜராஜேஸ்வரி நாட்டியாலயா நாட்டிய குரு கல்யாணசுந்தரம். அன்று ஷண்முகானந்தாவில் கச்சேரி செய்த காயத்ரி வேங்கடராகவன். எம்.எஸ். பிரபலப்படுத்திய பாடல்களைக் கொண்டு நிகழ்ச்சி நிரல் அமைத்திருந்தார்.

அடையாறு இஷ்டசித்தி விநாயகர் ஆலயத்தில், டி.எம். கிருஷ்ணாவின் பிள்ளையார் சதுர்த்தி ஈவ் (eve) கச்சேரி... காம்போதியில் அவர் பாடிய மைசூர் வாசுதேவாச்சார்யாரின் 'லம்போதரம் அவலம்பே' அபூர்வமாகவே கச்சேரிகளில் கேட்கக் கிடைக்கும். அதைவிட அபூர்வம், ஆவர்த்தனத்துக்குப் பிறகும் பிள்ளையார் பற்றிய பாடல்கள் கேட்கக் கிடைப்பது... கிருஷ்ணா அன்று அவற்றைப் பாடினார். அதைவிட, அதைவிட அபூர்வம், 'ஸ்ரீகணநாத' என்கிற ஆரம்ப இசைப் பயிற்சி கீதத்தைக் கச்சேரியில் பாடக் கேட்பது... குழந்தைக் கடவுள் என்பதால், தாமும் அதைவிட அதைவிட குழந்தையாகி, கிருஷ்ணா 'ஸ்ரீகணநாத' என்று பாலகீதம் பாடி மகிழ்ந்தார் போலும்!

- தும்புரு

நட்சத்திரப் பெயர்கள் வைப்பது நியாயமா?



கேட்கறது...!

● **ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்**

***?** ரயில்வே தனியார் மயமாக்கப்பட்டால் லல்லு ராஜினாமா செய்வாராமே?*

! ரயில்வேயை முற்றிலுமாகத் தனியார் மயமாக்காமல், முக்கியப் பிரிவுகளை விட்டுக் கொடாது. ஒரு சில பிரிவுகளை மட்டும் தனியார் மயமாக்கினாலே போதும் - சேவையின் தரம் ஓஹோ ஹோவென்று உயரும்.

● **சுந்தரூபி, தந்தனூர்**

***?** சமீபத்தில் தங்களை அதிர்ச்சி அடைய வைத்தது எது?*

! சென்னை மாநகராட்சி இடைத்தேர்தலில் நடந்த பயங்கர வன்முறை. தேர்தல் என்றால் மக்களின் கருத்து கணிக்கப்பட ஒரு வாய்ப்பு என்பது போய், ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையேயான புஜபலப் போட்டி என்றல்லவா ஆகிவிட்டது! 'உள்ளாட்சித் தேர்தலில் அரசியல் வேண்டாம்' என்ற அண்ணாதுரையின் கருத்து மறுபடி வலுப்பெறுகிறது.

● **ஏ. அக்பர் அலி, உடையார்பட்டிவிளக்கு**

***?** ரஜினி நடிக்கும் ஜக்குபாய் படத்தின் கதாநாயகி யார் என்று முடிவு செய்யப்பட்டு விட்டதா...?*

! ஜக்குபாய்க்கே முடிவு கட்டப்பட்டுவிட்டதே! இப்போது சிவாஜி புரொடக்ஷன்ஸ் படத்தில் ரீமாசென் - ரஜினி ஜோடி சேர்வார்களா என்பதுதான் எதிர் பார்ப்பு.

● **எச். ஆன்டனி தமிழரசன், மும்பை - 17**

***?** இராமகோபாலனுக்கு 'கீதையின் மறுபக்கம்' நூலைக் கொடுத்த பிறகு, அதன் விற்பனை அதிகரித்திருப்பதாகவும், 'இதிலிருந்து மக்கள் விருப்பம் தெளிவாகிறது' என்றும் கலைஞர் சொல்கிறாரே...?*

! இதற்குப் பெயர் negative curiosity. எத்

● **உமரி பொ. கணேசன், மும்பை - 37**

***?** பா.ஜ.க தொண்டர்கள் தேசியக் கொடியை விரித்து, அதன் மீது சீட்டு விளையாடி உள்ளார்களே - இது அவமதிப்பு இல்லையா?*

! உண்மையாக இருப்பின், அது உமாபாரதியின் யாத்திரா பலன்!

● **அ.சா. குருசாமி, செவல்குளம்**

***?** 'ஒருவரை பதிபக்தி இல்லாதவர், அரைவேக்காடு என்று கூறுவதெல்லாம் தனிப்பட்ட விமர்சனம் இல்லை' என்கிறாரே ஜெ?*

! சே! இப்படியா வார்த்தைக்கு வார்த்தை ஞாபகம் வைச்சுக்கிட்டுக் கேள்வி

நீங்கள் கேட்டவை - தராசு

தனையோ ஆயிரக்கணக்கான புத்தகங்கள் பிரசுரமாகின்றன. அவற்றில் குறை கண்டுபிடிக்கச் சொன்னால் யாருக்கு அக்கறை? கீதை, குரான், ராமாயணம், பைபிள் - இவற்றில் குறை கூறினால்தான் பரபரப்பு விற்பனை.



• விண்தொடும் பெருமை!



• மனம் உலுக்கும் கொடுமை!

● **எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி**

? 'பள்ளி மாணவர்களின் உடல் புண்படும்படியோ, மனம் புண்படும்படியோ ஆசிரியர்கள் நடந்து கொள்ளக் கூடாது' என்று பள்ளிக் கல்வி இயக்குனர் க. பரமசிவன் உத்தரவிட்டுள்ளாரே?

! கர்நாடக மாநிலம் தாவண்கிரே வட்டத்தில், ஹொன்னலி கிராமப் பள்ளியில், தூங்கி வழிந்த ஆசிரியர் நாற்காலியை விட்டே விழுந்துவிட்டாராம். அதைக் கண்டு சிரித்த மாணவிகள் நால்வரை, மாட்டுச் சாணம் தின்ன வைத்துச் சிறுமைப்படுத்தியிருக்கிறார்! இப்படிப்பட்ட ஆசிரியர்களிடம் என்ன சொல்லி என்ன பயன்? இத்தகையோரை நியமிக்கிற அரசுதான் கண்டனத்துக்குரியது.

● **மல்லிகை மன்னன், மதுரை - 17**

? 'நாட்டின் சுதந்திரத்துக்காக அரும்பாடு பட்ட மகாத்மா, தமது மகன்களுக்குச் சுதந்திரம் கொடுத்து வளர்க்கத் தவறி விட்டார்' என்று அவரது கொள்ளுப் பேத்தி தமது புத்தகத்தில் விமர்சித்துள்ளாரே...?

! புதிதாக அவர் எதையும் சொல்லவில்லை. மஹாத்மா Vs காந்தி என்ற நாடகத்தின் மையக் கருவும் இதுதான். 'பொதுநல நோக்கில் மட்டுமே சிந்தித்ததால், அவரது குடும்பத்தினருடைய தனிப்பட்ட உணர்வுகளை அவர் கவனிக்கவே தவறி விட்டார்' என்ற விமர்சனம்.

● **ரெ. இராமசுப்ரமணியன், நாகப்பட்டினம் ❒**

? இந்த முறையும் பாப்பாபட்டி, கீரிப்பட்டி ஊராட்சித் தலைவர் தேர்தல் புறக்கணிக்கப்பட்டுள்ளது பற்றி...?

• யாத்ரா பலன்!



! தலித்துகளுக்கு எதிராக உயர்ஜாதி உணர்வு எத்தனை தூரம் வன்மத்துடன் செயல்பட முடியும் என்பது, மீண்டும் மீண்டும் நிரூபணமாகி வருகிறது. இந்த ஊராட்சிகளில். சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து செழித்த நாட்டில், இப்படியொரு இழிநிலை வேதனை தருகிறது!

● **லெ.நா. சிவகுமார், சென்னை - 33**

? இன்றைய தேதியில்கூட தமிழக காங்கிரஸ் கட்சியில் கோஷ்டிப் பூசல் நிலவுகிறதே...?

! அது அதிசயமே இல்லை. பா.ஜ.கவுக்குள்ளேயும் அது ஆரம்பித்து, சன்னியாசிகளையும் சம்சாரிகளையும் ஒருங்கே ஆட்டிப் படைக்கிற அளவுக்கு வளர்ந்திருப்பது, இன்றைய அரசியலின் தரத்தைக் காட்டுகிறது.

● **எலிசெபத், மும்பை - 19**

? ஈராக்கில் தாக்குதல், கொலைவெறிகளை நடத்துவது யார்? ஏன்?


! அமெரிக்க ஆதிக்கத்துக்கு உட்பட்ட இடைக்கால ஈராக் அரசை ஏற்காத தீவிரவாத அமைப்பினருக்கும், இன்னும் வெளியேறாத அமெரிக்க ராணுவத்துக்கும் இடையேயான மோதல்களே பெரும்பாலும் உயிர்ச் சேதத்துக்குக் காரணமாகிறது.

● **கோ. வீரராகவன், அறந்தாங்கி** ★

? இத்தாலியில் பிறந்த சோனியாவை இந்தியாவின்



* மறுத்த சுதந்திரம்!



* புதிய 'பாய்!'

? பிரதமராக ஏற்கத் தயாராயிருந்த இடதுசாரிகள், திட்ட கமிஷனில் வெளிநாட்டு நிபுணர்கள் இடம் பெறுவதை ஏன் எதிர்க்கிறார்கள்?

! சோனியாவை இந்தியப் பிரஜை என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. ராஜீவின் காதல் மனைவி, இந்திய மக்களின் நலன் கருதுபவராய் இருப்பார் என்று எதிர் பார்க்கலாம். திட்ட கமிஷனில் இடம் பெறும் அயல்நாட்டவர் விஷயம் அப்படியல்ல... நாட்டின் பொருளாதாரம் என்பது பண விவகாரம் மட்டும் அல்ல; நமது தேச மக்களின் நலன், வாழ்க்கைமுறை, எதிர் காலம் முதலிய பலவற்றை உள்ளடக்கியது. யோசனைகளை ஏற்கலாம். இறுதி முடிவு நம்முடையதாக இருக்க வேண்டும்.

● **எஸ். அசாதி, பிள்ளையார்குளம்**

? தமிழைச் செம்மொழியாக அறிவித்திருப்பது மகிழ்ச்சியளித்தாலும், தமிழகத்தில் பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் வேறுபாடு அதிகரித்து வருவது கவலையளிக்கக் கூடியதாக உள்ளதே?

! பேச்சு மொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் எப்போதுமே சற்றுக் கொச்சையாகத்தான் இருக்கும். எழுத்துக்கும் பேச்சுக்கும் ஆன அந்த இடைவெளி, மொழியைக் கையாள்வோருக்குப் புரிந்தால் போதும். ஆனால், இன்று தமிழ் பேசும் பலர், அம்மொழியைப் படிப்பதோ, எழுதுவதோ இல்லை என்பதுதான் மிகப்பெரிய ஆபத்து.

● **கே.வி. நாதன், நெய்வேலி - 3**

? கல்வி வளர்ச்சிக்காக 'எஜுசாட்' செயற்கைக்கோள் அனுப்பிய நாம் தலை நிமிர்ந்து இருக்கலாமா...?

! நிச்சயமாய் பெருமை கொள்ளலாம். அதேசமயம், கூரையில்லாப் பள்ளிகளையும், கல்வி வாய்ப்பில்லா குழந்தைகளையும் நினைத்துக் கொண்டால், மனம் கனத்துத்தானே போகிறது!

● **ப. இராம் முருகன், சிவகங்கை**

? துபாயில் பிரபல சந்தைக்கு 'மீனா பஜார்' என்றும், அதை அடுத்துள்ள ஆப்பக் கடைக்கு 'சிம்ரன் ஆப்பக் கடை' என்றும் பெயர் வைத்துள்ளார்களாமே...?

! நம் ஊரில் இட்லிக்கு குஷ்பூ என்று பெயர் வைத்துள்ளார்களே... அதை விடவா!

● **எஸ். சக்தி, விக்கிரமசிங்கபுரம்**

? பெரும்பாலான மருமகள்களிடம் மாமனாருக்கு இருக்கிற மதிப்பும் மரியாதையும், மாமியாருக்கு இருப்பதில்லையே...?

! தங்கள் மனைவியை - அதாவது மருமகளின் மாமியாரைச் சமாளிப்பது எவ்வளவு கஷ்டம் என்பது தெரிந்திருப்பதால் பிறந்த மரியாதையாக இருக்கும்!

● **எஸ். சுந்தரம், குமாரபாளையம்**

? ஓய்வு பெற்றவுடன் நீதிபதிகளுக்கு கவர்னர் பதவி தர வேண்டும் என்று ஜெ. சொல்லும் யோசனை நன்றாக உள்ளதே?

! சரியல்ல... ஓய்வு பெறுவதற்கு முன் செய்யும் பணிகளை, பதவி எதிர்பார்ப்பு பாதிக்க வாய்ப்புகள் அதிகம். எனவே கவர்னர் பதவிக்கு, குறிப்பிட்ட ஒரு துறையினரை மட்டும் முன்மொழிதல், வழிமொழிதல் தவறாகும்.

□ ரூ 100 பரிசு பெறுபவர்:
ரெ. இராமசுப்பிரமணியன்,
தேசிய மேல்நிலைப் பள்ளி,
நாகப்பட்டினம்.

*** ரூ 50 பரிசு பெறுபவர்:**
கோ. வீரராகவன்,
16, அங்காளம்மன் தெரு,
அறந்தாங்கி.



• ட்வின்ஸ்...

ரத்னா ரகசியம்!

வசன உச்சரிப்பில் அழகான ஏற்ற இறக்கங்களோடு, ரத்னா திரை விமர்சனம் செய்வதைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். ஆனால் சமீபகாலமாக, வேறொரு முகம் வேறொரு பாணியில் நிகழ்ச்சியை நடத்த, எங்கே இவரும் உமா பத்மநாபன், ஃபாத்திமா பாபு, நிர்மலா பெரியசாமி பாணியில் சேனல் தாவி விட்டாரோ என்று நினைத்து தேடிப் பிடித்தோம். எடுத்தவுடன் நம் வாயில் சர்க்கரையைத் தூவினார்.

"பயப்படாதீங்க சார்... நான் பிரசவ லீவில்தான் இருக்கேன். கடந்த 9ம் தேதி எனக்கு ஆண் - பெண் என ட்வின்ஸ் பிறந்தது. அதனால ஒரு மூணு வார ரெஸ்ட். இன்னும் கொஞ்ச நாள்ல புதுப் பொலிவோட வர்றேன் பாருங்க" என்று படபடவென்று கூறிய ரத்னாவின் முகத்தில் தாய்மையின் அழகு மிளிர்ந்தது.



• நண்டு...

'**ஊ**ர்ல இருக்கிற அநியாயத்தை யெல்லாம் தட்டிக் கேக்கற 'மதுர' கலெக்டர் மட்டும், காய்கறிக்காரனா மார்க்கெட்ல பகல் வேஷம் போட்டு ஃப்ராடு பண்ணலாமா?' - இப்படி 'மதுர' விமர்சனத்தில் தைரியமாக எழுத முடியுமா? ஆனால் விஜய் டி.வியில் 'கடவுள் பாதி, மிருகம் பாதி' நிகழ்ச்சியில் நண்டு, வண்டு, செண்டு என முக்கோண கெட்-அப்பில் வந்து, ஒரு புதுப் படத்தையும் விடாமல் நண்டுப்பிடி பிடிக்கிறார் அலைக் கூந்தலழகன் ஜெகன்.

"நான் லயோலாவுல பி.ஏ இங்கிலீஷ் லிட்ரேச்சர் படிச்சுட்டு, அப்படியே தியேட்டர்ஸ் பண்ணிட்டு இருந்தேன். அப்போ என்னைப் பார்த்த விஜய் டி.வி புரொடியூசர் சுரேஷ் ஸார், எந்த டெஸ்ட்டும் வைக்காம அப்படியே 'வை ராஜா வை'க்கு நண்டுங்கிற கேரக்டர்ல செலக்ட் செஞ்சிட்டாரு. அதுக்கப்புறம் மாடலிங், இப்போ கடவுள் பாதின்னு வாழ்க்கை இந்த நண்டை பெண்டு எடுத்திட்டிருக்கு" என்று கூந்தலை வாரிக்கொண்டே பேசுகிறார்...

"நாங்க படங்களை கிண்டல் மட்டும் செய்றது கிடையாது. சரிவிகிதத்துல விமர்சனம் செய்றதுதான் இதோட கான்செப்ட். மனம் வந்து பாராட்டவோ, இல்லை திட்டவோ யாருக்கும் தைரியம் இல்லாததுதான் எங்களோட ப்ளஸ் பாயிண்ட்".

மெட்டி ஒலி கேட்கும் நேரத்தில் நிகழ்ச்சி வந்தாலும், தமது அசத்தல் சேஷ்டைகளால் மக்களைச் சிரிக்க வைக்கிறாரே... நிச்சயம் ஜெகனுக்குப் புண்ணியம் உண்டு!

- சநகன்

காவல்துறை மீது முதல்வருக்கு அதிருப்தியா?

'நான் இவ்வழியே ஒருமுறைதான் கடப்பேன். அப்பொழுதே அனைத்து நல்ல விஷயங்களையும் செய்து விடுகிறேன். ஏனெனில் மீண்டும் இவ்வழியே வரமாட்டேன்' - சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தின் முன்பு எழுதப்பட்டுள்ள வாசகம் இது. ஆனால் ஆர்.நடராஜ் ஐ.பி.எஸ். அவர்களுக்கு மட்டும் சென்னை மாநகர காவல்துறை கமிஷனராகப் பணியாற்ற மீண்டுமொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மிகுந்த அலுவல் நெருக்கடியிலும், நேரம் ஒதுக்கி நம்மிடம் பேசினார்.

சிறிய இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சென்னையின் போலீஸ் கமிஷனராகியிருக்கிறீர்கள். அடிக்கடி இப்படி கமிஷனர்களை மாற்றுவது இந்தப் பதவியின் மரியாதையைக் குறைக்காதா?

"நபர்கள் மாறலாம். ஆனால் செயல்பாடுகளில் எந்தவொரு மாற்றமும் இருக்காது. குற்றங்களைத் தடுப்பதும், நடந்த குற்றங்களைக் கண்டுபிடிப்பதும்தான் காவல்துறையின் அடிப்படை குணமே. அதில் என்றும் மாற்றம் இருக்கப் போவதில்லை. கடமையை உணர்ந்து செயல்படுவதே பணிக்கான தர்மம் ஆகும்."

சமீபகால கொலை, கொள்ளைகளால் பீதி நகரமாகிவிட்டதே சென்னை?

"நான் பதவியேற்றவுடன் கே.கே.நகர், ஐஸ்ஹவுஸ் ஆகிய இரு பகுதிகளிலும், குறுகிய காலத்தில் நடந்த ஆதாயக் கொலைகளை மறுஆய்வு செய்து கட்டளைகள் பிறப்பித்துள்ளேன். சென்னை மாநகரம் அமைதியானது. மற்ற மாநிலங்களைவிட இங்கு மக்களும் மீடியாவும் விழிப்புணர்வு மிக்கவர்கள். கொல்கத்தாவில் யாராவது ஒருவரை அடித்துக்கொண்டிருந்தால் காரணமே தெரியாமல் கும்பல் சேர்ந்து, அடித்துத் துவைத்து விடும். ஆனால் தமிழக மக்கள் எப்பொழுதுமே அநாவசிய சண்டை சச்சரவுக்குச் செல்ல மாட்டார்கள். தமிழக காவல்துறையை விட, சென்னை காவல்துறை நூற்றி நாற்பது வருட பாரம்பரியமிக்கது. வழிவழியாக வந்த வழிமுறைகளும் செயல்பாடுகளும், இதனை உலக அளவில் மதிப்பிற்குரிய தாக்கியுள்ளது."

ஆனால், சமீபகாலமாக காவல்துறையின் உயர் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், இந்தக் களங்கத்தை எவ்வாறு துடைக்கப் போகிறீர்கள்?

"இது தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் நான் எதுவும் கூற இயலாது. மற்றபடி நிறைய ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மற்ற எல்லாத் துறைகளையும்விட காவல்துறையில் பணிபுரிபவர்களுக்குக் கடுமையான ஒழுக்கக் கட்டுப்பாடுகளும், சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. ஜெயலட்சுமி வழக்கில் புகார் வந்தவுடனேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது ஓர் உதாரணம். மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாக்கும் பணியில் ஏதாவது சிறுதவறு நடந்தாலும், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன."



—மனம் திறக்கிறார் கமிஷனர்

இரவு நேரங்களில் அதிகமான குற்றங்கள் நடைபெறுகின் றனவே?

"மற்ற எந்த மாநகரத்தையும்விட, சென்னை மாநகரத்தில் அதிக பட்சமாக சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேர் இரவு ரோந்துப் பணிகளில் இரவு பத்து மணி முதல் மறுநாள் காலை ஏழு மணி வரை ஈடுபடு கின்றனர். நம்மூரில் பெண்கள் அதிகாலையில் வெளியே வந்து கோலம் போடும் வழக்கம் உள்ளதால், முதலில் காலை ஐந்து மணி வரையிலிருந்த காவலர் ரோந்து, இப்பொழுது ஏழு மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது தவிர 'யாராவது வெளியூர் சென்றால் காவல் நிலையத்தில் தெரிவித்துவிட்டுப் போகலாம்' என்கிற அறிவிப்புக்கு மக்களும் ஒத் துழைப்புக் கொடுத்து வருகிறார்கள். இவ்வருடம் கிட்டத்தட்ட முப் பது சதவிகித குற்றங்கள் குறைந்திருக்கின்றன. இது சாதாரண விஷய மல்ல."

அண்மையில் ஸ்டெஃபானி என்கிற பெண் ஈவ் டீஸிங்கினால் பலியானபோது, நீங்கள்தான் உடனடி யாக ஸ்பாட்டுக்கு வந்தீர்களாமே?



"அன்று இரவு நான் ரோந்துப் பணியில் இருந்தேன். தகவல் கிடைத்து உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த பொழுது, காருக்கருகே அப்பெண் கிடந்தார். அந் நால் வரும் குடிபோதையில் சுயநினைவே இல்லாமல் இருந் தார்கள். நான்தான் அவர்களைப் பிடித்தேன். இது நிச்சய மாக கெட்ட நோக்கோடு செய்த செயல்தான். எனக்கு மிகவும் மனவேதனையை அளிக்கிறது.

வார இறுதியில் கேளிக்கைக்குச் செல்பவர்கள், தங்கள் குழுவில் மது அருந்தாத நபர்களை கார் ஓட்ட அனு மதிக்க வேண்டும். அவர்களின் பொறுப்பின்மையால் பாதிக்கப்படுவது பொதுமக்கள்தானே?"

அரசியல்வாதிகள் மற்றும் தவறு செய்பவர்கள் தமக்குத் தெரிந்த காவலர்களின் உதவியை நாடி தப்பித்து விடுகிறார்களே...?

"இந்த மனோபாவம் தவறானது. காவலர்களின் நட்பை யாராவது தவறாகப் பயன்படுத்தினால் உடனடியாக எனக்குத் தெரிவிக்கலாம்."

சாலைகளில் டூ வீலரை மட்டும்தான் மடக்குகிறீர்கள்...? அரசு வாகனங்களின் அத்துமீறல்களுக்கு நடவடிக்கைகள் எடுக்கிறீர் களா?

"லைசென்ஸ் செக்-அப் செய்யும்பொழுது எவ்வித அநாவசியத் தொல்லையும் கொடுப்பதில்லை. குறிப்பான காரணங்கள் இருந்தால் தவிர, கார் போன்ற நான்கு சக்கர வாகனங்களை நிறுத்துவது கிடையாது. அரசுப் பேருந்து மற்றும் வாகனங்கள் பொது மக்களின் உபயோகத்திற்கு இருப்பதால், ஆன் தி ஸ்பாட்டில் நிறுத்தாமல், அவர்கள் தவறு செய்திருந்தால் சம்பந்தப்பட்ட துறைக்கு வண்டியின் எண் மற்றும் குற்றங்களைத் தெரிவித்து விடுவோம்."

ஒரு குற்றவாளியை என்கௌன்டர் மூலம்தான் ஒழித்துக் கட்ட முடியுமா?

" தனி மனிதனின் உயிரைப் பறிக்க சட்டத்தை தவிர, யாருக்கும் அனுமதி கிடையாது. இருந்தாலும் தற்காப்புக்காகவும் அல்லது ஆபத் திலிருந்து மக்களைக் காக்கவும் கடுமையாக நடந்துகொள்ள எங் களுக்குச் சட்டமே இடம் கொடுக்கிறது."

பண்பும் கண்ணியமும் இல்லாத, சரியாக உடலைப் பேணிக்காத காவலர்களைப் பற்றி?

"காவல்துறை என்பது ஒரு சேவை தான். பயிற்சி அளிக்கும் பொழுது கிரிமினல்களிடம்தான் கடுமையாக நடந்துகொள்ள வேண்டுமே தவிர, பொதுமக்களிடம் அனுசரணையாகத் தான் இருக்க வேண்டும். இதைத்தான் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறோம். இதற்கு ஒரு வரலாற்றுத் தொடர்பு உண்டு. பிரிட்டிஷ் காலங்களில் அவர்களின் கையாளாகவும், மக்களை அடக்குவதற்காகவும் காவலர்கள் பயன்படுத்தப் பட்டதால், அவ்வழி முறை ஒரு சிலரிடம் இன்னமும் இருக்கிறது. அதே சமயத்தில் காதலர்களும் பெண்களும் இக்கட்டான நேரத்தில் பாதுகாப்புத் தேடி காவல் நிலையத்திற்குத்தானே வருகிறார்கள்? நல்லவர்கள் காவலர் துறையில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

ஃபிட்னெஸ் லெவலைப் பராமரிப்பது காவலர்களிடையே பிரச்னையாக இருக்கிறது. இதனால் இப்பொழுது எடை கூடிய காவலர்களுக்கு, பயிற்சியும் தியானமும் அளிக்கவிருக்கிறோம். வேலைப் பளுவில் நேரங்கெட்ட நேரங்களில் சாப்பிடுவதால், உடல் நலத்தை அவர்கள் பேணுவதில்லை."

கமிஷனர் பதவி பெருமையா, பெருஞ்சுமையா?

"டென்ஷன் என்பது எந்நேரமும் இருக்கக் கூடியதுதான். ஏதாவதொரு மாவட்டத்தில் நடக்கும் குற்றங்களும், கலவரங்களும் சென்னையில் பிரதிபலிக்க வாய்ப்புண்டு என்பதால், எப்பொழுதும் அலர்ட்டாக இருக்க வேண்டும். மாநகரத்தில் அமைதி நிலவினாலும் அதிலொரு சலசலப்பு நிச்சயம் இருக்கும். சமீபத்தில் விநாயகர் ஊர்வலம் அமைதியாக நடந்து முடிந்ததில் பாராட்டுகள் கிடைத்தபொழுது பெருமையாக இருந்தது."

முதல்வர் ஜெயலலிதா காவல் துறையின் செயல்பாடுகள் குறித்து அதிருப்தியாக உள்ளாரா?

"அவர் திரும்பத் திரும்பச் சொல்வது தமிழக காவல்துறை, இந்தியாவிலேயே மிகச் சிறந்தது. அதன் மீது ஒரு களங்கமும் ஏற்படக்கூடாது என்பதைத்தான் சமீபத்தில்கூட ஒரு கருத்தரங்கில், 'இரவில் நாம் நிம்மதியாகத் தூங்குவது காவல்துறையினர் விழிப்புணர்வோடு இருப்பதால்தான்' என்றிருக்கிறார். இது அவருக்கு எங்கள் மீதுள்ள மரியாதையையும் நம்பிக்கையையும்தானே வெளிப்படுத்துகிறது!"

சினிமா மற்றும் ஊடகங்களில் போலீஸைக் கிண்டலடிப்பது மன வருத்தம் அளிக்கிறதா?

"உங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் காவலர்களை நீங்கள் எல்லா வேலையும் வாங்கிக்கொண்டு, இறுதியில் கேலி செய்வது முரண்பாடாக இல்லையா? ஜோக்காக இருந்தாலும், ஒரு கட்டத்திற்கு மேல் அது சமூகத்துக்கு நல்லதாக அமையாது. யூனிஃபார்ம் அலுவலர்கள் நிச்சயம் மதிக்கப்பட வேண்டும்."



கடைசியாக ஒரு கேள்வி... உங்கள் விருமாண்டி கெட்-அப்பின் ரகசியம் என்ன?

"(சிரிக்கிறார்) இதில் ரகசியம் எதுவுமில்லை. 2001-ல் வீரப்பன் காட்டில் அதிரடிப் படை அதிகாரியாகப் பணிபுரிந்த போது, வேலை சௌகரியங்களுக்காக வைத்துக் கொண்டது இந்த கெட்டப். விருமாண்டி படம் பார்த்து வைத்ததல்ல."

- **ச.ந.கண்ணன்**

படங்கள் : ஸ்ரீஹரி

நடக்குமென்பார் நடக்கும்!

▪ அக்னிசர்மா பக்கம் ▪

மேஷம்: உங்க துணிவும் நம்பிக்கையும் கூடுற நேரம். எதிர்ப்புகள் அடங்கிப் போகும். எதிர்பாராத பணவரவு, விஐபிக்கள் ஆதரவு கூடும். உத்தியோகத்தில் அனுகூலத் திருப்பங்கள் நேரும். உலோகவகை, கெமிக்கல்ஸ், மருத்துவம் துறைகளுக்கு யோகம். குடும்பத்தில் தாமதமாகிவந்த சுப காரியம் நிறைவேறும். பெண்களுக்கு உடன் பிறந்தவர்களால் அனுகூலம்.

ரிஷபம்: உங்களை நிறுத்தி வெச்சிருந்த ரெட் சிக்னல் கிளியரா யிட்டுதுங்க. இனி உங்க முயற்சிகளெல்லாம் அதிவேகத்தில் முன்னேறும். ஒவ்வொரு திருப்பமும் உங்களுக்கு சாதகம்தான். உத்தியோகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வுன்னு நல்ல செய்தி காத்திருக்கு. கலைத்துறை, ஆபரணத் தொழில், பத்திரிகை தொழில்கள் சுபிட்சம் காணும். ஜவுளி, ஃபர்னிச்சர் தொழில்கள் லாபம் தரும். குடும்பத்தில் ஒற்றுமையும் அமைதியும் சேரும். பெண்களுக்கு அனுகூலமான நேரம்.

மிதுனம்: உங்களுடைய மற்றெந்த பலத்தையும் விட, தெய்வ பலம் கூடியிருக்கிற யோக காலம் இது. எடுத்த காரியங்களும் பயணங்களும் அனுகூலமா இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் ஆதரவு கூடும். கோரிக்கைகள் நிறைவேறும். உங்கள் திறமைக்குப் பாராட்டும் கிடைக்கும். இரும்பு, எலெக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், சட்டம், காவல், ராணுவம் துறைகள்ல இருக்கறவங்களுக்கு மேன்மை கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை நிலவும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

அக்டோபர் 6 முதல் 12 வரை

கடகம்: உற்சாகமும் உல்லாசமுமா இருக்கப் போறீங்க. எதிர்பாராத பணவரவு இன்னும் குஷிப் படுத்தப் போவுது. எதிரிங்க காணாமப் போயிடுவாங்க. உத்தியோகத்தில் சிறப்பான, அனுகூலமான வாரம். கடன் தொல்லைகள் குறையும். இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், எலக்ட்ரிகல்ஸ் துறைகள்ல இருக்கிறவங்களுக்கு யோக காலம். குடும்பத்தில் உற்சாக, உல்லாச சூழ்நிலை நிலவும். பெண்களுக்கு எதிர்பாராத பொருள் வரவு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

சிம்மம்: இந்தப் பக்கமுமில்லாம அந்தப் பக்கமுமில்லாம, குழப்பத்தில் தடுமாறிக்கிட்டிருந்திங்கயில்லையா? அந்தக் குழப்பம் இப்போ தீர்ந்து போயிடும். அனுகூலக் காத்து வீசி உங்களை ஆனந்தப் பட வைக்கும். தனவான்கள் ஆதரவு கை கொடுக்கும். உத்தியோகத்தில் உங்க கோரிக்கைகள் நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்புடையதும், கூட்டுத் தொழிலும் மேன்மை பெறும். ஆபரணம், பத்திரிகை, கலைத்துறை.

இது நல்ல வாரம்

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	அக்.6 புரட்.20	திருவாதிரை	அஷ்டமி	லக்ஷ்மி பூஜை
வியாழன்	அக்.7 புரட்.21	புனர்பூசம்	நவமி	-
வெள்ளி	அக்.8 புரட்.22	பூசம்	நவமி	மருவத்தூர், பெரிய பாளையம் உற்சவம்
சனி	அக்.9 புரட்.23	ஆயில்யம்	தசமி	-
ஞாயிறு	அக்.10 புரட்.24	மகம்	ஏகாதசி	மன்னார்குடி ராஜ கோபாலன், காஞ்சி வரதர் உற்சவம்
திங்கள்	அக்.11 புரட்.25	பூரம்	துவாதசி	பிரதோஷம், கபாலீஸ்வரர், காஞ்சி ஏகாம்பர நாதர் உற்சவம்
செவ்வாய்	அக்.12 புரட்.26	உத்திரம்	திரயோதசி	சிதம்பரம் ருத்ராபிஷேகம்

உலோக வகை, கெமிக்கல்ஸ் தொழில்களில் லாபம் அதிரிக்கும். குடும்பத்தில் புதிய சொத்து சேர்க்கை, சுப காரியங்கள் நடக்கும். பெண்களுக்கு எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

கன்னி: கல்வி, ஆராய்ச்சி, விஞ்ஞானம்னு ஈடுபட்டிருப்பவங்க சாதிக்கற நேரம் இது. புதுமுகம் அறிமுகம், முக்கியஸ்தர்கள் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் எல்லோர் ஆதரவும் கூடி சந்தோஷப்படுத்தும். புதிய முயற்சி வெற்றி தரும். கலைத்துறை, யந்திரம், காண்ட்ராக்ட்ஸ், கெமிக்கல்ஸ் துறைகள் மேன்மை பெறும். அரசியல்வாதிகள் எதிலும் நிதானமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் சுப காரிய முயற்சி பலித்து நிம்மதி கிடைக்கும். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

துலாம்: ஜான் ஏறினா முழம் வழுக்குதேன்னு இத்தனை நாள் கவலைப்பட்டீங்க இல்லையா? கவலையை விடுங்க. இனி தடங்கல்களும், தாமதமாகி வந்ததும், வழக்கு வம்படிகளும் தீர்ந்து போய், பறக்க ஆரம்பிச்சுடுவீங்க. புதிய அறிமுகம் சில கிடைக்கும். எதிர்பாராத செலவு கொஞ்சம் ஏற்படும், உஷாரா இருங்க. உத்தியோகத்தில் புதிய பொறுப்பும் திருப்பமும் ஏற்படும். எலக்ட்ரானிக்ஸ் கம்ப்யூட்டர், ஆபரணம், ரியல் எஸ்டேட் வியாபாரங்கள் சூடு பிடிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு எதிர்பாராத பண வரவினால் உற்சாகம் கூடும்.

விருச்சிகம்: நீங்களும் உங்க பர்ஸும் இளைச்சுப் போயிருந்தீங்க இல்லையா, அந்த நிலைமை மாறிடும். நெருக்கடியெல்லாம் கொசுக்கடியா தட்டிட்டு, மளமளன்னு முன்னேறுவீங்க

உத்தியோகத்தில் அதிர்ஷ்டம் ஒண்ணு காத்திருக்கு. அரசாங்க, பாங்க் உதவிகள் உடனே கிடைக்கும். பழைய கடன் தொல்லை மறையும். காண்ட்ராக்ட்ஸ், கமிஷன், எலக்ட்ரிகல்ஸ், மருத்துவம் துறைகள் மேன்மை பெறும். குடும்பத்தில் இதுவரை இருந்த சிக்கல்கள் மறைந்து, மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.



தனுசு: உங்க திறமையையும், அறிவையும் தெரிஞ்சேதாங்க சிக்கல்கள் உங்ககிட்ட வருது. குழப்பமில்லாம நிதானமாக சமாளிங்க, வெற்றி நிச்சயம். தெய்வ பலத்தை அபிவிருத்தி பண்ணிக்கோங்க. உத்தியோகத்திலயும் சுமுகமாக இருப்பது நல்லது. கொடுக்கல் வாங்கல், சமயத்தில் கை கொடுக்கும். ஜவுளி, ரெடிமேட், ஃபர்னிச்சர், ஏற்றுமதி இறக்குமதி தொழில்கள் ஏற்றம் பெறும். குடும்பத்தில் நிம்மதி நிலவும். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


ரிஷப ராசிக்காரர் எழுத்தாளர் சுஜாதாவோட முயற்சிகளெல்லாம் அதிவேகத்தில் முன்னேறுமாம்.

மகரம்: எதிர்பாராத சந்திப்பும், பயணமும் உங்க அனுகூல யோகத்தை உயர்த்தக் காத்திருக்கு. எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். உத்தியோகத்தில் அதிர்ஷ்டமான திருப்பம் காத்திருக்கு. புதிய முயற்சி வெற்றி பெறும். புதிய தொழில் தொடங்கறவங்க, தைரியமா களத்தில் இறங்கலாம். யந்திரம், காண்ட்ராக்ட்ஸ் கமிஷன் வியாபாரங்கள் லாபம் பெறும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் கூடும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

கும்பம்: ரப்பரா இழுத்துக்கிட்டிருந்த உங்க காரியங்கள் எல்லாம், எதிர்பாராத வேகத்தில் அனுகூலமா முடியும். தேவைக்கேற்ற பணவசதி கிடைக்கும். புதியவர்கள் கிட்ட ரொம்ப ஜாக்கிரதையா பழகுங்க. உத்தியோகத்திலயும் இதுவரை இருந்த பிரச்னைகள் ஓய்ந்து நிம்மதி கிடைக்கும். பத்திரிகை, ஃபர்னிச்சர், ரியல் எஸ்டேட் வியாபாரங்கள் அளவோடு லாபம் பெறும். அரசியல்வாதிகள் எச்சரிக்கையா இருக்கறது நல்லது. குடும்பத்தில் நெருக்கடி வந்தாலும், உதவி கிடைக்கும். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனமா இருக்கணும்.

மீனம்: எல்லாக் கதவும் மூடிடிச்சேன்னு கவலைப்பட்டீங்க இல்லையா? கவலையை விடுங்க. மூடிக்கிடந்த வழியெல்லாம் இனிமே தெளிவாத் தெரியும். காரியங்கள் மளமளன்னு நல்லபடியா நடக்கும். உத்தியோகத்தில் ஒரு அதிர்ஷ்டமான திருப்பம் காத்திருக்கு. கலைத்துறை, ஆபரணத் தொழில், சட்டம், காவல், ராணுவம் துறைகள்ல இருக்கறவங்க உயர்வு பெறுவாங்க. குடும்பத்தில் அமைதி நிலவும் பிரிந்தவர்கள் ஒன்று சேருவார்கள். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

புரிய வைத்ததற்கு நன்றி!



✉ கிங்மேக்கர் ராஜாஜி பற்றிய செய்தி (உ. 3 விஷயம்) படித்து வியந்தேன். தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல, அவரைப் போல் இன்று யாரும் இல்லையே என்று ஏக்கம் ஏற்பட்டது.

சிதம்பரம், ஸ்ரீவித்யா

✉ 'பாரதியதா என்னும் பம்மாத்து' தலையங்கம் பா.ஜ.க.வுக்கு சரியான கும்மாங்குத்து! 'இந்துத்வா', 'இந்தியா ஒளிர்கிறது' போன்ற கோஷங்களெல்லாம் வெறும் வேஷங்களாகிப் போன நிலையில், அரசியல் பிழைப்புக்கு அத்வானி அண்ட் கோ இப்படியெல்லாம் ஆடித்தான் தீர்ப்பர்! ஆனால் ஒன்று, மக்கள் எப்போதும் விழிப்புடனிருக்கிறார்கள்.

மதுரை, இரா.கல்யாணசுந்தரம்

✉ 'இந்துத்வா' என்பதை மாற்றி, 'பாரதியதா' என்ற பெயரில் பா.ஜ. கட்சியினர் மக்களை ஏமாற்றிட முனைவதை வெட்ட வெளிச்சமாக்கியதோடு நின்றிடாமல், எதிர்காலத்தில் அந்தக் கட்சியின் செயல்பாடு எப்படி இருந்திட வேண்டும் என்று அறிவுரை - ஆலோசனை வழங்கியிருப்பது, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

பெங்களூர், ப. மூர்த்தி

✉ 'அப்பாவின் வாசனை' ஓர் உணர்ச்சிக் கவிதையாகி மனத்தை உலுக்கிய கதை.

கருமத்தம்பட்டி, அ. இராஜப்பன்

✉ வைகோவின் பேட்டியில் ஆதங்கம் இழையோடி நிற்கிறது. சன் டி.வி. இவரைப் புறக்கணிப்பது கருணாநிதியை மீறிய செயல் அல்ல என்பது நமக்குப் புரியும்போது, வைகோவுக்குத் தெரியாதா என்ன?

அனுப்பானடி, இரா. கல்யாணசுந்தரம்

✉ நடைப்பயண இருட்டடிப்பு, சேது சமுத்திர திட்ட விஷயத்தில் முகத்தில் கரி, இவ்வளவுக்குப் பிறகும் வைகோ 2006ல் இதே கூட்டணி தொடரும் என்று கூறுவது கலைஞர் செய்த புண்ணியம்தான்!

ஆர்.பிரகாஷ், பொன்மலை

✉ ஒரு பக்கம் மாதர் சங்க அமைப்புகள் 'நியூ' படப் பாடலுக்கு, நீதிமன்றக் கதவுகளைத் தட்டுகிறார்கள். மறுபுறம் பாம்பே ஞானம் போன்ற மாதர்கள் சப்பைக்கட்டு கட்டுவதைப் புரிய வைத்ததற்கு நன்றி!

ஈரோடு, ரேவதிப்ரியன்

✉ 'உலக நாகரிகத்தின் தொட்டில்' என அழைக்கப்படும் நைல் நதி தீரத்தை சிவசங்கரியின் எழுத்தோவியமாகப் படிக்கும்போது, வரலாற்று நதியில் நாங்களும் அவருடன் பயணிப்பது போன்ற பிரமை!

சென்னை, எம்.எஸ். இப்ராஹீம்

✉ தமிழ்நாட்டு மருமகள் என்று சொன்னவங்க பல பேர், அயல்நாட்டு மருமகளாகி சூடுபட்டு, தமிழ்நாட்டுக்கே திரும்பிவிட்டார்கள். இப்போது ஸ்நேகா! ம்.. பார்க்கலாம்.

சென்னை, வே. முருகேசன்

✉ 'எல்லோரும் மனிதர்கள் என்று சொல்ல எப்போதைய்யா கற்றுக் கொள்ளப் போகிறோம்' என்று வேதனை மிளிர தராசு அளித்த பதில், வீரமணி போன்றவர்களுக்குச் சரியான அறிவுரை!

அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ 'மேக்னா நாயுடு'வை 'மேக்னட் நாயுடு' என்று குறிப்பிட்டது மெத்தச் சரி. அவருடைய நான்கு ஸ்டில்களிலுமே பார்வை

காந்தம்போல் இழுக்கிறதே!
மதுரை, என். பாலகிருஷ்ணன்

✉ இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, கின்னஸில் மட்டுமல்ல... சரித்திரத்திலும் பெயர் பெற்றுவிட்டார் லதா மங்கேஷ்கர்.
சாத்தூர், சரவணா


✉ காஞ்சிப் பெரியவரின் 'அருள்வாக்கை'ப் படித்து, அன்னதானத்தின் சிறப்பைப் புரிந்து கொண்டோம்.
வேலூர், வே.த. கதிர்வேல்

✉ வட்டமேஜைக்குக் கடிதம் எழுதி, நம் கடிதம் வராதா என காத்திருப்பவர்கள் பலர் இருக்கும்போது, இரண்டு பக்கங்களில் வெறும் எட்டே எட்டு கடிதங்களைப் பிரசுரம் செய்தது மிகப் பெரிய தவறு. 8 + 8 = 16 கடிதங்கள் வரவேண்டிய இடம் இப்படி வீணாகி விட்டதே!
ஆலங்குளம், ரா. சாலமோன்

✉ 'வலம்புரி முத்து' தொடர்கதை சிறந்த நல்முத்து. விதி வசத்தால் குடிகாரப் பணக்காரனான திருஞானத்திற்கு மனைவியாகிவிட்ட தாமரையின் தவிப்பு, நமது நெஞ்சையும் அஞ்ச வைக்கிறது. பாரதத்தில் இன்னும் பெண்கள் ஆணாதிக்கத்தின் பிடியிலிருந்து மீள முடியாமலிருப்பதை, திருஞானத்தின் உரையாடல் உணர்த்துவது, வலிமிக்க யதார்த்தம். சாகித்திய அகாடமி பரிசு பெறத்தக்க கதை.
தஞ்சாவூர், ஜி. ராமதாஸ்

✉ கல்கி 26.9.2004 இதழின் தராசு பகுதியில், அட்மிஷன் சமயத்தில் ஜாதி மதம் கேட்பதாகக் குறிப்பிட்டிருந்தது. எங்கள் பள்ளியின் விண்ணப்பப் படிவத்தில், ஜாதி மதங்கள் கேட்பதில்லை. ஆசிரியர் பணியில் சேர்க்கும்போதும், எங்களுடைய சேர்க்கை விண்ணப்பத்திலும், ஜாதி மதங்கள் கேட்பதில்லை. சேவாலயா அறக்கட்டளை நடத்தும் முதியோர் இல்லம் சேர்க்கையிலும், ஆதரவற்ற சிறுவர் - சிறுமியர் இல்லத்திலும், ஜாதி மதம் கேட்பதில்லை. ஜாதி சமயமற்ற புதிய சமுதாயம் அமைக்கும் பணியில், சேவாலயா தனது சிறு பங்கை ஆற்றி வருகிறது.
சென்னை, தலைமையாசிரியர்,
மகாகவி பாரதியார் பள்ளி

✉ நவீன இலக்கியத்தின் போக்கு குறித்த 'இகாரஸ் பிரகாஷ்'ன் விமர்சனத்தில் எனக்கு உடன்பாடுண்டு. அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையாத,



இலக்கியங்களால் யாருக்கு என்ன பயன்...?
தூத்துக்குடி, எஸ்.வி. அமிர்தகௌரி

✉ வசூல் ராஜாக்கள் நிரம்பியுள்ள இக்காலத்தில் 'வசூல் அறியாத ராஜா' டாக்டர் சஞ்சீவி, உண்மையில் சிரஞ்சீவிதான்!
சென்னை, கே.வி.ராமன்





கண்ணே, சந்திரமுகி!

ஜெயலலிதா அமைச்சரவையில் யாருக்கு எப்போது பதவி கிடைக்கும் என்று சொல்ல முடியாது! ரஜினி படத்துக்கு இயக்குனராவதும் அப்படித்தான். அதிர்ஷ்டம் அடித்திருப்பது பி.வாசுவுக்கு.

கடந்த மாதம் மூன்றுநாள் ஓய்வாக பெங்களூருக்குச் சென்ற ரஜினி, அங்கே ஆப்தமித்ரா (ஆத்ம நண்பன்) என்ற கன்னடப் படத்தைப் பார்த்து அசந்து போயிருக்கிறார். இந்தப் படத்தை இயக்கியவர் சாட்சாத் பி. வாசு. மோகன்லால் நடித்து கேரளத்தைக் கலக்கிய 'மணிச்சித்ரதாழ்' மலையாளப் படத்தின் அவுட்லைனைக் கொண்டே ஆப்தமித்ராவை அசத்தலாய் கன்னடப்படுத்தினாராம் வாசு.

சென்னை திரும்பிய ரஜினி வாசுவை நேரில் அழைத்து 'படம் சூப்பர்' என்று வாழ்த்த, "ஆப்தமித்ராவை தமிழில் எடுத்தால், அதில் நீங்கள் நடித்தால் படம் சூப்பர்ஹிட். உங்களுக்கென்றே அந்தக் கதைக்கு புதிய வடிவம் கொடுத்திருக்கிறேன் சொல்லட்டுமா?" என்று ரஜினி தலையசைக்கு முன்னரே, முழுக் கதையையும் சொல்லி ரஜினியைக் கண் கலங்க வைத்திருக்கிறார், வாசு.

ரஜினிக்குக் கதை பிடித்ததா, இல்லையா என்று குழம்பிக் கொண்டிருந்த வாசுவுக்கு, சிவாஜியின் மூத்த மகன் ராம்குமாரிடமிருந்து செல்ஃபோன் அழைப்பு.

"நீங்கள் சொன்ன கதை ரஜினிக்கு மிகவும் பிடித்துவிட்டது. நீங்கள் இயக்குகிறீர்கள். ரஜினி நடிக்கிறார். சிவாஜி புரொடெக்‌ஷனுக்கு இது பொன்விழா படம்" என்று ராம்குமார் சொல்லி முடிக்க, இன்ப அதிர்ச்சியில் வார்த்தைகளே வரவில்லை வாசுவுக்கு. காரணம், இது இயக்குனருக்கும் ஐம்பதாவது படம்!

தர்மத்தின் தலைவன், குரு சிஷ்யன் படங்களுக்குப் பிறகு பிரபுவும் ரஜினியுடன் கை கோக்க, விஜயகுமார், நாசர், வடிவேலு பிற நடிகர்கள். சிம்ரன், சிநேகா, ரீமாசென், ஜோதிகா இந்த நால்வரில் இருவர், கட்டாயம் கதாநாயகிகள் என்கிறார் படத்தின் தயாரிப்பாளர்.

தெலுங்கு கில்லி படத்துக்கு ஒளிப்பதிவு செய்த சேகர் ஜோசப்தான் சந்திரமுகியின் ஒளிப்பதிவாளர். கலை இயக்குனர் தோட்டாதரணி. இசை வித்யாசாகர், ஏப்ரல் 14, 2005ல் படம் வெளியாகப் போகிறது. "கண்ணே சந்திரமுகி" என்று இப்போதே உருகத் தொடங்கி விட்டார்கள் ரஜினி ரசிகர்கள்.

- ஸ்ரீ

கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி ஜன்னலில் ஒரு மின்னல்!
(சென்னை மாநகருக்கு மட்டும்)

8 பக்கங்கள் 10, அக்டோபர் 2004 இதழுடன் இலவச இணைப்பு

"செம ஆட்டம் போட்டோம்!"



இருபத்தி நான்கு பேர் கொண்ட கடுமையான போட்டியிலிருந்து ஏன்சான் மியூசிக்கின் பாப் ஆல்பத்திற்குத் தேவையான ஐந்து பேரில் தேர்வானவர் ஸ்வேதா. அவரின் இளமையான அனுபவங்களிலிருந்து...

"எத்திராஜ்ல பயோடெக் முதல் வருடம் படிக்கிற நான் முதற்கொண்டு, 24 கேர்ள்ஸையும் ஒரு வாரம் காலேஜுக்கு லீவு போடச் சொல்லிட்டு, ட்ரெயினிங்குக்காக மும்பைக்கு கூட்டிட்டுப் போயிட்டாங்க. வீடு, படிப்பு எந்த நினைவுமில்லாம, ஒரு வாரமும் செம ஆட்டம்தான் போங்க.

நான் சின்ன வயசில இருந்தே சென்னையில இருக்கிற ஒரு மலையாளப் பொண்ணு. சென்னை, கோவை, ஹைதராபாத், பெங்களூர், கொச்சின்... இப்படிப் பல இடங்களிலிருந்து செலக்ட் ஆகி வந்த 24 பேர்ல, 20 பேர் மலையாளிகள், தெரியுமா!

தினமும் காலையில 8 மணிக்கு ரெடியாகி சென்னைக்கு கூட்டிட்டு வருவாங்க. இங்கே இசையமைப்பாளர் பிரவீன் மணி, மியூசிக்ல ட்ரெயினிங் கொடுப்பாரு. இப்படி டான்ஸ், வாய்ஸ் ட்ரெயினிங்னு ஒரு வாரமா பெண்டு எடுத்துட்டாங்க. தினமும் நைட் 2 மணிக்குத்தான் ரிசார்ட்டுக்கு திரும்புவோம். அந்த களைப்பிலயும் தூங்காம எல்லோரும் ஒண்ணா உட்கார்ந்து, ஜாலியா அரட்டையடிச்சிட்டு இருப்போம்.

ஃபைனல்ஸ் நடப்பதுக்கு முன்னாடியே, உலக அழகிப் போட்டி மாதிரி எங்களோட நடைகளைக், ட்ரெயினிங்கில் எங்களது பங்கெடுப்பு இதை வைச்சே எண்பது சதவிகிதம் மார்க்குகளை முடிவு பண்ணி வைச்சுட்டாங்க. பெண்கள்ல நிறையப் பேர் இங்கிலீஷ் பாட்டு பாடினதால, நான் 'கொஞ்சும் மைனாக்களே' பாட்டை கடைசி நாள்ல செலக்ட் பண்ணி பாட முடிவெடுத்ததால போட்டியில கொஞ்சம் சொதப்பவும் செஞ்சேன்.

ரிசல்ட் அறிவிச்சப்போ, எல்லோரும் மேடையிலேயே 'வாவ்... ஊ'-ன்னு கத்தி கலாட்டா செஞ்சோம். அந்த ஒரு வாரத்துல எல்லோரும் திக் ஃப்ரெண்ட்ஸ் ஆயிட்டதால யாருகிட்டயும் போட்டி பொறாமையேயில்லை. எந்த விகல்பமும் இல்லாம கட்டிப்பிடிச்சு வாழ்த்துத் தெரிவிச்சுக்கிட்டோம். பெரும்பாலும் பூனைக் கூட்டம் அமைதியா இருந்த நான் செலக்ட் ஆனது எல்லோருக்கும் பெரிய... ஆச்சர்யம்!

எனக்கு நடிப்பு கட்டுப் போட்டாலும் வராது. ஆனா பாருங்க, நான் இன்னும் கொஞ்ச நாள்ல பாப் ஸ்டார் ஆகப்போறேன். ஹைய்யோ! காலேஜ் லைஃபை விட, செம ஜாலியா அந்த ஒரு வாரமும் ஆட்டமும் பாட்டமுமாக் கழிஞ்சது. இப்போ எல்லோரும் அவங்கவங்க ஊருக்குப் போயிட்டாலும், டெய்லி எஸ்.எம்.எஸ் வழியா "வி மிஸ் யூ ஆல்"-னு எங்க உணர்வுகளை பகிர்ந்திட்டிருக்கோம். ஃபைனல் நடந்த அன்னைக்குத்தான் எனக்கு 18 வயசு ஆரம்பமாச்சு. மறக்க முடியுமா இந்த பிறந்த நாளை!"

ச.ந.கண்ணன்

இது "சென்னை கேர்ள்ஸ் ஸ்பெஷல்" மாமூ!

ஒரு பேனாவின் பயணம்!

"உங்களைப் பார்த்து நான் பரிதாபப்படுகிறேன்" என்று அமெரிக்கர்களைப் பார்த்து அமெரிக்க மண்ணில் நின்று கொண்டே உரக்கச் சொல்வதற்கு நிரம்ப தைரியம் தேவை. அது அருந்ததிராயிடம் இருந்தது. அவரது பேனாவிடமும் இருந்தது.

"செப்டம்பர் 11 சம்பவம் நிகழ்ந்தற்கு அமெரிக்காவும் ஒரு காரணம்" என்று புள்ளி விவரங்களோடு பொறுமையாக எடுத்துக் கூறினார் அவர். நிரம்பியிருந்த அமெரிக்கர்கள் அமைதியாக அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டார்கள். யாரும் அவரை எதிர்த்துப் பேசவில்லை. "உனக்கு எவ்வளவு திமிர்! உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கொக்கரிக்கவில்லை. "உன்னை வரவழைத்ததே நாங்கள். நீ எங்களையே குற்றம் சுமத்துகிறாயே!" என்று கேள்வி எழுப்பவில்லை. அவர் பேசியது அனைத்தும் உண்மை என்று வாய் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

'காட் ஆஃப் ஸ்மால் திங்ஸ்' நாவலுக்கு புக்கர் பரிசு கிடைத்தவுடன், உலகமே ஒன்று சேர்ந்து இவரைக் கொண்டாடியது. இந்தியாவிலிருந்து ஓர் இலக்கியவாதி இதோ உருவாகி விட்டார் என்று பலர் ஆரவாரம் செய்தார்கள். ஆனால் அருந்ததி ராயோ, ஆஹா! இதுதான் தருணம் என்று அடுக்கடுக்காக புத்தகங்களை எழுதிக் குவிக்காமல் உலகத்தை பொறுமையாக முதன்முறையாகப் பார்ப்பது போல் பார்க்கத் தொடங்கினார்.


இப்பொழுது அவர் கண்களுக்கு இலக்கியம் தெரியவில்லை. ஆனால் நர்மதா ஆறு தெரிந்தது. அதில் தத்தளிக்கும் மனிதர்களின் நிறமற்ற முகங்கள் தெரிந்தன. அமெரிக்க டாலர் தெரியவில்லை. அதைக் கையில் போட்டு உருட்டிக் கொண்டிருந்த ஏகாதிபத்தியம் எனும் அரக்கனின் முழு உருவம் தெரிந்தது.

அருந்ததி ராயின் பேனா இதோ எழுந்துவிட்டேன் என்று நிமிர்ந்து நிற்கத் தொடங்கியது. இலக்கியம் அடுத்த நிலைக்குச் சென்றது. சாம்ஸ்கி, எட்வர்ட் செய்த், ப்ளம் போன்றோரின் எழுத்துகள் அருந்ததிராயைக் கவர்ந்தன. உலகத்தை நோக்கி அவர் திரும்பினார். அங்கும் மனிதர்களையே கண்டார். அமெரிக்கா, காபூல், ஈராக், இஸ்லாமாபாத், பாலஸ்தீனம் எல்லா இடங்களிலும் மனிதர்களே இருந்தார்கள். ஏழைகளாய், பரிதாபமாய், சக்தியற்றவர்களாய். அவரது பேனா பழைய மையை உதறித் தள்ளிவிட்டு, புதுமொழி எழுதத் தொடங்கியுள்ளது.



(அருந்ததிராயின் கட்டுரைகள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. சிறிய சிறிய புத்தகங்களாக சென்னையில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஹிக்கின்பாதம்ஸ் போன்ற இடங்களில் கிடைக்கிறது)

✍ மருதன்



கர்ப்பிணிகள் ஜாக்கிரதை!

21ஜி, 1, 21L போன்ற பேருந்துகளில் அப்பாவியாகப் பயணிக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் வயதானவர்களுக்கும் ஓர் எச்சரிக்கை. நீங்கள் பயணிக்கும் பேருந்து மந்தைவெளியைத் தாண்டி மயிலை வழியே செல்வதற்காக செயிண்ட் மாரிஸ் சாலையில் நுழையும் போது, தயவு செய்து உடனடியாக இறங்கி நடந்தே சென்று விடுவது க்ஷேமமானது. இல்லாவிட்டால் கர்ப்பிணிகளுக்கு அந்தச் சாலையிலேயே இலவச குறைப் பிரசவம் ஏற்படவும், தாத்தாவுக்கு பல்செட் கழன்றிடவும் வாய்ப்புகளுண்டு. இவர்களைத் தவிர ஒரு வேளை நீங்கள் கையில் வேர்க்கடலைப் பொட்டலம் வைத்திருந்தால் அத்தனையும் புஸ்வாணமாய் எகிறலாம். இப்படி இச்சாலையில் பயணிப்பவர்களை உண்டு இல்லை என்று செய்து விடுகிறது ரோட்டிலுள்ள குண்டும் குழிகளும். இச்சாலை ஒரு வழிப் பாதை என்பதால், மயிலாப்பூர் செல்ல வேண்டுமென்றால் டாட்டா பிர்லாவாக இருந்தாலும் இதன் அவஸ்தையிலிருந்து தப்பிக்க முடியாது. மயிலை - மந்தைவெளி வாசிகள் ஜனாதிபதி கலாமுக்கு கடிதம் எழுதி, ஒருமுறை கபாலீஸ்வரர் கோயிலுக்கு வரச் செய்யுங்கள். அப்பொழுதுதான் சென்னை கார்ப்பரேஷன் அவசர அவசரமாக ஓடிவந்து அக்கறையுடன் ரோடு போடும்.

📷 வித்யன் ✍ செந்தில்

ஐ.ஐ.டியில் திருவிழா!

சாஸ்த்ரா - இந்தியாவிலேயே கல்லூரிகளுக்கிடையே நடக்கும் மிகப் பெரிய தொழில் நுட்பக் கண்காட்சி, வரும் 7ம் தேதி முதல் 10ம் தேதி வரை சென்னை ஐஐடியில் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை நடக்கவுள்ளது. படிக்கும் காலத்திலேயே மாணவர்கள் தாங்கள் உருவாக்கிய கண்டுபிடிப்புகளை பொது மக்கள் பார்வைக்கு வைக்கும் உன்னதமான நிகழ்ச்சி இது. இந்தியா முழுவதுமிருந்து வரும் 4,000 மாணவர்களுக்கு மத்தியில் போட்டி நடத்தி வெல்லும் மாணவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் மற்றும் பஜாஜ் பல்சர் போன்ற உயர்ந்த பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் ஐஐடிக்கு ஒரு நடை வரலாமே!

மூளைக்குள் என்ன இருக்கு?

இதை இருபதே நிமிடங்களில் வெட்ட வெளிச்சமாக்குகிறோம் என்கிறார் கேஸன் அண்ட் ட்ரூஸ் எனும் நிர்வாக ஆலோசனை நிறுவனத்தின் தலைமை நிர்வாகி கிரேஸ் பிரபாகர். இவரது டெக்னிக்கின் பெயர் YABDI. இது உங்களுடைய மூளையின் பலம் பற்றி அக்குவேறு ஆணிவேறாக அலசிப் பார்த்து விடுமாம். அப் பரிசோதனையில் நீங்கள் வாங்கும் ஸ்கோரை வைத்து, நீங்கள் எந்தப் படிப்பிற்கு அல்லது எந்த வேலைக்குத் தகுதியானவர் என்பதை ஆராய்ந்து, ஆலோசனை வழங்குவது தான் இவர்களது பணி. சுருக்கமாகச் சொன்னால், உங்களையே உங்களுக்கு புதிதாகக் கண்டுபிடித்துத் தருவதுதான் இவர்களது நோக்கம்.



Ph: 52119993, 52179993

✍ கலை

வில்டெல் No.1

சென்னையில் இருக்கும் டாட்டா இண்டிகாம் ஃபிரான்சைஸ்களில் முதலிடம் யாருக்குத் தெரியுமா? வில்டெல் கம்யூனிகேஷனுக்குத்தான். 2002ல் வெறும் நூறு இணைப்புகளோடு ஆரம்பிச்ச இந்த நிறுவனம், இப்போ ஒரு மாசத்துக்கு எவ்வளவு இணைப்புகளைத் தருகிறது தெரியுமா? கிட்டத்தட்ட இரண்டாயிரத்துக்கும் மேல. மொத்தமா சென்னையில் நாலு ஷோ ரூம் (அசோக்நகர், நுங்கம்பாக்கம், கொட்டிவாக்கம், தாம்பரம்) வச்சி [illegible] இருக்காங்க. இவ்ளோ காம்பெட்டிஷன் இருக்கும்போது, இந்த வளர்ச்சி எப்படி சாத்தியமாச்சு என்று கேட்டால் 'கனெக்ஷன் தர்றதுக்கு முன்னால காட்டும் அக்கறையை' கனெக்ஷன் தந்ததுக்குப் பிறகும் அதே அளவில் காட்டுவது தான், என்கின்றனர் அதன் நிறுவனர்கள். Vittel Communications (P) Ltd, No. 8/2, 15th Avenue, Opp to K.K.Ngr Telephone Exchange, Ashok Nagar, Chennai - 83. Ph: 22341251/52

✍ முராரி



டிராஃபிக் தலைவலி!

'வேளச்சேரியிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்ட தந்தையும், 9 மணிக்குப் புறப்பட்ட மகனும் கிண்டியில் அடுத்தடுத்த பேருந்துகளில் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டால் எவ்வளவு காமெடியாக இருக்கும்! இப்படிப்பட்ட வேடிக்கைதான் வேளச்சேரி பிரதான சாலையில் சமீபகாலமாக நித்தம் அரங்கேறி வருகிறது. சரி பிரச்னைதான் என்ன? வேளச்சேரியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குச் செல்லும் D 70, M 70 உள்ளிட்ட புகப்பட்ட பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்படுவதால் குறிப்பாக 8 மணியிலிருந்து 10 மணி வரை கடுமையான நெருக்கடியை ஏற்படுத்துது. இதுதான் நமது சென்னையின் களசாராமாச்சே என விவேக் பாணியில் கேட்டால், உங்களை சம்பந்தப்பட்ட பகுதிக்கு நேரில்தான் அழைத்துப் போக வேண்டும். இருந்தாலும் அப்பிரச்னையை இன்னும் கொஞ்சம் தெளிவாக்குகிறோம்.

இங்கிருந்து செல்பவர்கள், பெரும்பாலும் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள கம்பெனிகளில் பணியாற்றக்கூடிய கலீ, மற்றும் சாதாரணத் தொழிலாளர்கள்தாம். இந்தப் போக்குவரத்துச் சிக்கல் எதனால் என்பது குறித்து, இப்பேருந்துகளில் தொடர்ந்து பயணிக்கும் தொழிலாளி கருணாகரன் விவரிக்கையில், "இதற்கு அடிப்படைக் காரணம் பழைய மகாபலிபுரம் சாலையில பர்மா காலனியிலிருந்து எம்.ஆர்.பி டேஷன் வரைக்கும் டிரெயினேஜ்கா பள்ளம் தோண்டியிருக்கிறதுதான். அதனால அந்த ரோட்ல போக முடியாத கார், வேன், லாரி, டூ வீலர், பஸ் எல்லாமே, பக்கத்துல இருக்குற எம்.ஜி.ஆர் நெடுஞ்சாலை வழியா வந்து தரமணி - வேளச்சேரி வழியா சீக்கிரமா கிண்டிய ரீச் பண்ணிடலாம்னு வர்றாங்க. மேலும் கேளம்பாக்கத்திலிருந்து கோயம்பேட்டுக்கு டைரக்ட் பஸ் இல்லாததால, அங்கிருந்து வேளச்சேரிக்கு வந்து கோயம்பேடு பேருந்தை நிலையத்துக்குப் போறாங்க. அது ஏற்கெனவே இங்க இருக்கிற டிராஃபிக் பிராப்ளத்தோட மேற்கு ஆகி, போக்குவரத்துச் சிக்கலை ரொம்பவும் அதிகமாக்கிடுச்சு" என்றவரை இடைமறித்து தொடர்கிறார் பேருந்து ஓட்டுனர் ஒருவர். "போக்குவரத்து நெரிசலை சரி பண்றேன் பேர்வழின்னு, செக்போஸ்ட் தாண்டி சில வண்டிகளை கிண்டி ரேஸ்கோர்ஸ் பக்கமா திருப்பி விட்டுடுறாங்க. இது ரொம்பத் தப்பு. காரணம் அந்த ரோடு ரொம்பக் குறுகலா இருக்கும். அதுல போயி பெரிய பெரிய பஸ்ஸைகளை திருப்பி விட்டா, சிக்கல் ஜாஸ்தியாத்தான் ஆகுது. அதனால வண்டிங்க இஞ்ச் பை இஞ்சாத்தான் நகருது. இதுக்கெல்லாம் தீர்வு என்னன்னா, பழைய மகாபலிபுரம் ரோட்டிலிருந்து வர்ற வண்டிகளை 'தரமணி - எம்.ஆர்.பி டேஷன்' வழியா போக வைக்கணும். அந்த வண்டிகள் மத்யகைலாஷ் வழியா ஈஸியா கிண்டிக்கு வந்துடலாம். இல்லாட்டி அதிக அளவுல போக்குவரத்துக் காவலர்களை ஆங்காங்கே நிறுத்தி, டிராஃபிக்கை ஒழுங்கு பண்ணி, ரேஸ் கோர்ஸ் வழியா டூ வீலர், கார், வேனை மட்டும் அனுமதிச்சா ஓரளவு சமாளிக்கலாம்." தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளுக்கு இந்த ஏரியாவுல இருக்குற டிராஃபிக்தான் காரணம் என்றும், காலை 8.20க்குப் புறப்பட்டா, பெரும்பாலும் 8.40க்கு கிண்டி வந்துடும் என்றும் ஆனால் இப்போதோ, நத்தை வேகத்தில் நகருது. 9.30க்குத் தான் பஸ் கிண்டிக்கு வருகிறது" என்றும் சோகத்தும் பாடுகிறார்.

"இதனால் கம்பெனிகளுக்குச் செல்ல தாமதமாகிப் போக, லேட் பர்மிஷன், பர்மிஷன் போன்ற எல்லாச் சலுகைகளையும் தேவையில்லாமல் பயன்படுத்த வேண்டியிருக்கு. அந்தச் சலுகை முடிஞ்சுடுச்சின்னா ஆப்சன்ட், லாஸ் ஆப் பேன்னு ஆயிடும். இதைத் தவிர்க்க கல்விகாபுரத்திலிருந்து நடந்தே ஓட வேண்டும். இதெல்லாம் எங்களை மாதிரி ஆளுங்களுக்குத் தாங்காதுங்க" என்று ஆறாத குறையாய் புலம்புகிறார், இது போன்ற தண்டனையை முழுமுறை அனுபவித்த தொழிலாளி ஒருவர். இவர்களுக்கு என்ன பதில் சொல்கிறார்கள் போக்குவரத்து காவலர்கள்?

"பீக் அவர்னா அப்படித்தான் இருக்கும். அது மட்டுமில்லாம, மழை அதிகமா இருக்கறதால பிரச்னை அதிகமாயிடுச்சி. இன்னும் மழை அதிகமாச்சுன்னா, பிராப்ளம் பெரிசாத்தான் ஆகும். அதிக அளவுல டிராஃபிக் இருக்கும்போது, சின்னது, பெரிசுன்னு தரம் பிரிச்சி ரேஸ் கோர்ஸ் சாலையில திருப்பறது கஷ்டம்ப்பா" என்று கூறிவிட்டு டியூட்டியை முடித்துக் கொண்டு புறப்பட்டார் சம்பந்தப்பட்ட காவலர். ஆனால் உண்மையில் அந்த ஏரியாவில் வண்டிகளைப் பிரித்து அனுப்ப வசதிகள் இருந்தும் ஏன் இதைச் செய்வதில்லை? அப்போதைக்கு டிராஃபிக்கை கிளியர் செய்து விட்டோம் என மார் தட்டிக் கொள்வதில் யாருக்கு என்ன பயன்? இவையெல்லாம்தான் சென்னை போக்குவரத்துக் காவலர்களை நோக்கிப் பாயும் கேள்விக் கணைகள்!

இரா. முத்துக்குமார்
முகில்

'வேளச்சேரியிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்ட தந்தையும், 9 மணிக்குப் புறப்பட்ட மகனும் கிண்டியில் அடுத்தடுத்த பேருந்துகளில் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டால் எவ்வளவு காமெடியாக இருக்கும்! இப்படிப்பட்ட வேடிக்கைத்தான் வேளச்சேரி பிரதான சாலையில் சர்வசாதாரணமாக நித்தம் அரங்கேறி வருகிறது. சரி பிரச்னைதான் என்ன? வேளச்சேரியிலிருந்து அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குச் செல்லும் D 70, M 70 உள்ளிட்ட ஏகப்பட்ட பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்படுவதால் குறிப்பாக 8 மணியிலிருந்து 10 மணி வரை கடுமையான நெருக்கடியை ஏற்படுத்துது. இதுதான் நமது சென்னையின் கலாசாரமாச்சே என விவேக் பாணியில் கேட்டால், உங்களை சம்பந்தப்பட்ட பகுதிக்கு நேரில்தான் அழைத்துப் போக வேண்டும். இருந்தாலும் அப்பிரச்னையை இன்னும் கொஞ்சம் தெளிவாக்குகிறோம்.

இங்கிருந்து செல்பவர்கள், பெரும்பாலும் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள கம்பெனிகளில் பணியாற்றக்கூடிய கூலி, மற்றும் சாதாரணத் தொழிலாளர்கள்தாம். இந்தப் போக்குவரத்துச் சிக்கல் எதனால் என்பது குறித்து, இப்பேருந்துகளில் தொடர்ந்து பயணிக்கும் தொழிலாளி கருணாகரன் விவரிக்கையில், "இதற்கு அடிப்படைக் காரணம் பழைய மகாபலிபுரம் சாலையில ராமா காலனியிலிருந்து எல்.ஆர்.பி டூல்ஸ் வரைக்கும் டிரெயினேஜ்காக பள்ளம் தோண்டியிருக்கிறதுதான். அதனால அந்த ரோட்ல போக முடியாத கார், வேன், லாரி, டூ வீலர், பஸ் எல்லாமே, பக்கத்துல இருக்கற எம்.ஜி.ஆர் நெடுஞ்சாலை வழியா வந்து தரமணி - வேளச்சேரி வழியா சீக்கிரமா கிண்டிய ரீச் பண்ணிடலாம்னு வர்றாங்க. மேலும் கோனம்பாக்



டிராஃபிக் தலைவலி!

கத்திலிருந்து கோயம்பேட்டுக்கு டைரக்ட் பஸ் இல்லாததால, அங்கிருந்து வேளச்சேரிக்கு வந்து கோயம்பேடு பேருந்தை பிடிக்கப் போறாங்க. அது ஏற்கெனவே இங்க இருக்கிற டிராஃபிக் பிராப்ளத்தோட மொத்தமா ஆகி, போக்குவரத்துச் சிக்கலை ரொம்பவும் அதிகமாக்கிடுச்சு" என்றவரை இடைமறித்து தொடர்கிறார் பேருந்து ஓட்டுனர் ஒருவர். "போக்குவரத்து நெரிசலை சரி பண்றேன் பேர்வழின்னு, செக்போஸ்ட் தாண்டி சில வண்டிகளை கிண்டி ரேஸ்கோர்ஸ் பக்கமா திருப்பி விட்டுடறாங்க. இது ரொம்பத் தப்பு. காரணம் அந்த ரோடு ரொம்பக் குறுகலா இருக்கும். அதுல போயி பெரிய பெரிய பஸ்களை திருப்பி விட்டா, சிக்கல் ஜாஸ்தியாத்தான் ஆகுது. அதனால வண்டிங்க இஞ்ச் பை இஞ்சாத்தான் நகருது. இதுக்கெல்லாம் தீர்வு என்னன்னா, பழைய மகாபலிபுரம் ரோட்டிலிருந்து வர்ற வண்டிகளை 'தரமணி - எல்.ஆர்.பி டூல்ஸ்' வழியா போக வைக்கணும். அந்த வண்டிகள் மத்யகைலாஷ் வழியா கிண்டிக்கு வந்துடலாம். இல்லாட்டி அதிக அளவுல போக்குவரத்துக் காவலர்களை ஆங்காங்கே நிறுத்தி, டிராஃபிக்கை ஒழுங்கு பண்ணி, ரேஸ் கோர்ஸ் வழியா டூ வீலர், கார், வேனை மட்டும் அனுமதிச்சா ஓரளவு சமாளிக்கலாம்." தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளுக்கு இந்த ஏரியாவுல இருக்கற டிராஃபிக்தான் காரணம் என்றும், காலை 8.20க்குப் புறப்பட்டா, பெரும்பாலும் 8.40க்கு கிண்டி வந்துடும் என்றும் ஆனால் இப்போதோ, நத்தை வேகத்தில் நகர்ந்து 9.30க்குத்தான் பஸ் கிண்டிக்கு வருகிறது" என்றும் கோபித்தும் பாடுகிறார்.

"இதனால் கம்பெனிகளுக்குச் செல்ல தாமதமாகிப் போக, லேட் பர்மிஷன், பர்மிஷன் போன்ற எல்லாச் சலுகைகளையும் தேவையில்லாம பயன்படுத்த வேண்டியிருக்கு. அந்தச் சலுகை முடிஞ்சுடிச்சின்னா ஆப்சென்ட், லாஸ் ஆஃப் பேன்னு ஆயிடும். இதைத் தவிர்க்க கன்னிகாபுரத்திலிருந்து நடந்தே ஓட வேண்டும். இதெல்லாம் எங்கள மாதிரி ஆளுங்களுக்குத் தாங்காதுங்க" என்று ஆறாத குறையாய் புலம்புறார், இது போன்ற தண்டனையை மும்முறை அனுபவித்த தொழிலாளி ஒருவர். இவர்களுக்கு என்ன பதில் சொல்கிறார்கள் போக்குவரத்து காவலர்கள்?

"பீக் அவர்னா அப்படித்தான் இருக்கும். அது மட்டுமில்லாம, மழை அதிகமா இருக்கறதால பிரச்னை அதிகமாயிடுச்சி. இன்னும் மழை அதிகமாச்சின்னா, பிராப்ளம் பெரிசாத்தான் ஆகும். அதிக அளவுல டிராஃபிக் இருக்கும்போது, சின்னது, பெரிசுன்னு தரம் பிரிச்சி ரேஸ் கோர்ஸ் சாலையில திருப்பறது கஷ்டம்பா" என்று கூறிவிட்டு டியூட்டியை முடித்துக் கொண்டு புறப்பட்டார் சம்பந்தப்பட்ட காவலர். ஆனால் உண்மையில் அந்த ஏரியாவில் வண்டிகளைப் பிரித்து அனுப்ப வழிகள் இருந்தும் ஏன் இதைச் செய்வதில்லை? அப்போதைக்கு டிராஃபிக்கை கிளியர் செய்து விட்டோம் என யார் தட்டிக் கொள்வதில் யாருக்கு என்ன பலன்? இவையெல்லாம்தான் பல நல்ல போக்குவரத்துக் காவலர் கூனர நோக்கிப் பாயும் கேள்விக் கணைகள்!

இரா. முத்துக்குமார்
படம்: முகில்

டேஸ்ட்.காம்

கும்பகோணம்
முராரி
ஸ்வீட்ஸ் & ரெஸ்டாரண்ட்



திருமலைப் பிள்ளை சாலையைக் கடக்கும்போது ஏதோ கும்பகோணத்தில் ஒரு சாலையைக் கடப்பது போல் 'சடாரென்று' ஒரு உணர்வு வருகிறது. காரணம், 1915லிருந்து அங்கே கொடி கட்டிப் பறக்கும் கும்பகோணம் முராரி ஸ்வீட்ஸ், தனது புதிய கிளையை இங்கே தொடங்கியிருப்பதுதான். ஸ்பெஷல் சோன் பப்டி, பேடா, டிரை ஜாமூன். இவையெல்லாம் இவர்களின் ஸ்பெஷல். பலரின் நாக்கை அடிமைப்படுத்தும் கலை இவற்றுக்கு உண்டாம். (நிஜம் தான்?!) பாதாம் ரோல், பிஸ்தா ஃப்ளேவர் பாட், ரசமலாய், முந்திரி பக்கோடா, முந்திரி மணிக்காரம், என இன்னும் பல வகைகளைகள் நம் நாக்கில் நடனமாடக் காத்திருக்கின்றன. குயிக் லஞ்ச், மினி லஞ்ச் என ரெஸ்டாரண்ட் வசதியுடனும் வரவேற்கிறது முராரி ஸ்வீட்ஸ். (கும்பகோணம் வெள்ளக்கொடி வெத்தலை வாங்கி வைக்கலாமே!)

ஷிவ்   எழில்

ஷோ-கேஸ்



ஆனி கடித்த ஆப்பிள்!

இதோ கல கலவென சிரித்தபடி பட்டாம்பூச்சிகளை துரத்தித் துரத்திப் பிடிக்கிறாள் ஆனி. அப்பப்பா! எவ்வளவு மகிழ்ச்சி, அவள் முகத்தில். அவளுக்குத் துணையாக எங்கிருந்தோ தவழ்ந்து வருகிறது இசை. ஆனி சுற்றிச் சுற்றி ஆடிக் கொண்டிருக்கிறாள். அவளது தலைமுடி அழகாய், அடங்காமல் திமிறிக் கொண்டிருக்கிறது. அவளைப் போலவே.

ஆனியின் உள்ளத்திலும்கூட பீட்டர் எனும் பட்டாம்பூச்சி, சிறிது காலமாக சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. பீட்டர்... பீட்டர்..

'டமார், ஐயோ.. இதென்ன காதுகள் பிய்ந்து விடுவது போல் குண்டுகள் வெடிக்கிறதே ஐயோ.. இங்கே யாரும் இல்லையா?' இதை யாரும் கேட்க மாட்டார்களா?

ஆனிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனியின் அப்பா ஓட்டோ ப்ராங்க் பெட்டியோடு தயாராகிறார். உடனே கிளம்ப வேண்டுமாம். அப்படி என்னதான் அவசரமோ? ஆனியின் கைகளைப் பிடித்துத் தர தரவென இழுக்கிறார் அவள் அம்மா. அவசரம்... எல்லோருக்கும் அவசரம். கடித்துக் கொண்டிருந்த ஆப்பிளை அப்படியே போட்டு விட்டு ஓடுகிறாள் ஆனி.

எல்லோரும் எங்கோ போகிறார்கள். ஆனிக்கு ஒரே பசி. குடிக்கத் தண்ணீரே இல்லை. இதில் ரொட்டி ஒரு கேடா? போர் நடக்கும்பொழுதுகூட பசியெடுக்கத்தான் செய்கிறது.

ஆனிக்கு அழுகைதான் வருகிறது. ரொட்டியைத் தேடிப் போன அப்பாவை யார் தேடுவது? சகோதரி மார்கோட் எங்கே மறைந்து விட்டாள்? பீட்டர் எங்கே? பட்டாம்பூச்சிகளைக் கூட காணோமே..

"நாங்கள் ஏன் யூதர்களாக இருக்கிறோம்?" ஆனியின் கேள்வி துடித்துக் கொண்டிருக்கிறது அவள் கடித்துப் போட்ட ஆப்பிளை போல..

எல்லாம் முடிந்த பின் 'இதெல்லாமே நாடகம்தான்' என்கிறார்கள் எம்.சி.சி மாணவர்கள். ஆனியாக நடித்தவரின் பெயர், மித்து ஜேம்ஸாம். நாடகத்திற்குக்கூட ஒரு பெயர் வைத்திருக்கிறார்களாம். 'மேன் - தி அவேகனிங்.'

எது நாடகம்? இதுவா? இல்லை. எல்லாமே நிஜம். ஆனி நிஜம். இரண்டாம் உலகப் போர் நிஜம். ஹிட்லரின் யூத எதிர்ப்பு நிஜம். இறந்து போன ஒன்றரை மில்லியன் குழந்தைகளும் நிஜம்!

இதோ இந்த அரங்கத்தின் கதவை திறந்தால் வெளியே போர் தான் நடந்து கொண்டிருக்கிறது. சந்தேகமேயில்லை!

மதி   கங்கா

ஆடுகளம்



ஜூனியர் லைலா அலி!

"நான் ஜெயிச்சா பெஸ்ட் பாக்ஸர் - தோத்தா பெஸ்ட் லூசர்" - இந்த தன்னம்பிக்கை பொதிந்த வாசகத்தை உதிர்ப்பவர் குத்துச்சண்டை வீராங்கனை சரஸ்வதி. பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்தாலும், தமது சொந்த ஆர்வம் காரணமாக முறையாகக் கராத்தே பயின்று, பின்னர் தனக்கானது பாக்ஸிங்கே என முடிவெடுத்து, கடுமையாக பயிற்சி செய்து, இன்று குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பதிவு செய்து வரும் சரஸ்வதி, துரைப்பாக்கம் அருகிலுள்ள கண்ணகி நகரில் (பத்தாயிரம் வீடுகள், இருபதாயிரம் பேர், போக்குவரத்து வசதியற்ற, தண்ணீர் வசதியற்ற பகுதி) உள்ள அவரது இல்லத்தில் தமது போராட்ட விளையாட்டு வாழ்க்கை பற்றி தெம்பாகப் பேசினார்.

"காலையில நாலு மணிக்கு எழுந்து தண்டையார்பேட்டை MPT குவார்ட்டர்ஸ்ல பிராக்டீஸ், ஈவினிங் 5-7 நேரு இன்டோர் ஸ்டேடியத்துல பிராக்டீஸ்னு, தொடர்ந்து விடாம முயற்சி செஞ்சி ஏகப்பட்ட காம்பெட்டிஷன்ல கலந்துகிட்டேன். முதல்ல ஃபிளை வெயிட் - இப்போ ஃபெதர் வெயிட் பிரிவுல விளையாடிட்டு இருக்கேன். என்னோட முதல் போட்டியில கலந்துகிட்டப்போ ரூல்ஸ் அவ்வளவா தெரியாது. அந்த சமயத்துல என்னோட பயிற்சியாளர்கள் ஸ்னேக் மனோ, குமார் ரெண்டு பேரும் தொடர்ந்து பயிற்சி கொடுத்து என்னைப் போட்டிக்கு தயார் செஞ்சாங்க. அதுக்கெல்லாம் ரொம்ப உதவியா இருக்கறவர் கருணாகரன் சார்தான். அதனால தான் 2000-ல் இன்டர்ஸ்டேட் லெவல்ல சில்வர், ஸ்டேட் மீட்ல கோல்டு, 2001-ல் நேஷனல் மீட்ல ப்ரான்ஸ், 2002-ல் ஸ்டேட் மீட்ல, சவுத்ஸோனுக்காக கோல்டு, 2003-ல் கோல்டு மற்றும் பெஸ்ட் பாக்ஸர்னு ஏகப்பட்ட மெடல்கள் வாங்கியாச்சு.

2002-ல் சாய் அமைப்பு என்னை தத்தெடுத்து கோவாவுக்காக ஆட வைச்சாங்க. அப்போ - கோல்டு வாங்கிக் கொடுத்தேன். அதெல்லாம் சந்தோஷமா இருந்தாலும், அடிமனசுல ஒரு வருத்தம் இருக்கத்தான் செய்யுது. கோவாவுக்கு பதக்கம் வாங்கித் தந்த நம்மால, தமிழ்நாட்டுக்கு வாங்கித் தர முடியலையேங்கறது தான் அது. இவ்வளவு மெடல் வாங்கி என்னை நிரூபிச்ச பிறகும் எங்க விஷயத்துல தமிழ்நாடு அரசாங்கம் பாராமுகமாகவே இருக்கு" என வருத்தத்துடன் சாய்ந்தவரை குஷிப்படுத்த "உங்களை ஈவ்டீசிங் பண்றவனோட கதியைப் பற்றிச் சொல்லுங்கள்" எனக் கேட்டதற்கு "அவங்கள அடிச்சுடுவேன், உதைச்சுடுவேன்லாம் சொல்ல மாட்டேன். ஆனா என்னைக் காப்பாத்திக்க என்ன செய்யணுமோ, அதைச் செஞ்சுடுவேன்" என்றார் சிரித்துக் கொண்டே.

இவரது எதிர்பார்ப்புகள் என்ன? "கோவாவுல இருக்குற சாய் மாதிரியான அமைப்பை இங்கேயும் உருவாக்கணும். பேஸ் பாக்ஸிங்குக்கு ஒரு கோச்சை நியமிக்கணும். எங்களை மாதிரி வசதியற்ற விளையாட்டு வீராங்கனைகளை அரசாங்கம் தத்தெடுத்து அவங்களுக்குத் தேவையானதை செஞ்சிக் கொடுத்தா, அந்த சந்தோஷத்துலயே மேலும் ஏகப்பட்ட மெடல்களைக் குவிக்க முடியும். மற்றபடி எங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற எங்களுக்கு ஒரு வேலையை அரசாங்கம் தரணும்" என்றவரிடம் "உங்களுடைய கனவு என்ன?" என்றதற்கு,

"சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ள, இந்தியா சார்பாக தமிழகத்திலிருந்து தேர்வு செய்யப்பட வேண்டும். அது நானாக இருந்தாலும் சரி, மற்ற யாராக இருந்தாலும் சரி" என்று பளிச் பதிலளித்த இந்த சரஸ்வதிக்குப் பிடித்தமான குத்துச்சண்டை வீராங்கனை, முகம்மது அலியின் மகள் லைலாதானாம். ஆக, அரசாங்கம் இவர்மீது பார்வை செலுத்தினால் தமிழகத்திலிருந்து ஒரு ஜூனியர் லைலா அலி உருவாவது நிச்சயம்!

\+ முத்து

வரி விளம்பரம்

ஜோதிடம்

ஜாதகம் கணிக்க, முகூர்த்தம் பார்க்க, கல்யாணப் பொருத்தம் நிர்ணயிக்க, பிரச்னம் சொல்ல, பொதுப்பலன் அறிய, யோக காலம் தெரிந்து கொள்ள, வார நாட்களில் மட்டும் பகல் 10 முதல் 1 மணி வரை அணுகவும்.

கோமாண்டூர் ஸ்ரீநிவாசன், அஸ்ட்ரோ ஸ்கொயர், சாஸ்திரி நகர் முதல் மெயின் ரோடு, (வாட்டர் டேங்க் எதிரில், முதல் மாடி), அடையார், சென்னை - 20. தொலைபேசி : 24469160.

விற்பனை - நவராத்திரி

நவராத்திரிக்கு தேவையான தெய்வீக அன்பளிப்பு பொருட்கள் ரூ.2 முதல் ரூ.50க்குள். 100க்கும் மேற்பட்ட வகைகளில் கிடைக்கும். புரட்டாசி மாதத்தை முன்னிட்டு அனைத்து விதமான பாலாஜி படங்களும் (Including Diamond Balaji) தள்ளுபடி விலையில் கிடைக்கும். **Divine Collection,** 60, Rameswaram Street, T.Nagar, Ph : 55479174 and No.3, 33rd Street, Thillai Ganga Nagar, Ph : 22324856.

✉ கொண்டாட்டத்தில் இலக்கியம் பிரதானமாக இருந்தது. 'ஜூராஸிக் ஷாப்' நல்ல தகவல்.

- குரு, தேனாம்பேட்டை

✉ பாடகர் கார்த்திக் புகைப்படமும் தலைப்பும் ஏக பொருத்தம்.

- மணிவண்ணன், மயிலை


✉ ஜோக்குகள் இல்லாத குறையை, உங்கள் வாஸ்துவால் வெள்ளை செய்த வாழு திட்டத்தைப் படித்து வயிறு குலுங்க சிரித்தேன்.

- நாகராஜன், சென்னை-117

(உங்கள் கருத்துகளை Chennaiscan@kalkiweekly.com - ல் மெயிலலாம்)



"திராவிட மாயையை விலக்கணும்!"



காங்கிரஸின் பெருமைக்குரிய 'உட்கட்சி ஜனநாயகம்' அதாங்க கோஷ்டிப்பூசல்! மறுமலர்ச்சி அடைந்து வரும் பரபரப்பான சூழ்நிலையில், இளைஞர் காங்கிரஸின் தமிழக தலைவர் விஷ்ணுபிரசாத்தை அவரது இல்லத்தில் சந்தித்தோம். நாம் கேட்ட கேள்விகளுக்கு 'பளீர்' பதில்களை அதிரடியாகத் தந்தார்.

இளைஞர் காங்கிரஸுக்கும், மற்ற இளைஞரணிகளுக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்குன்னு நினைக்கறீங்க?

தனிப்பட்ட ஒருத்தருக்காகவோ, அல்லது ஒருத்தரை நம்பியோ இளைஞர் காங்கிரஸ் இல்லை. முழுக்க முழுக்க தொண்டர்களை நம்பி நடக்குற இயக்கம். இப்போ ஸ்டாலின் மட்டும் இல்லன்னா திமுகவில இளைஞரணியே இல்லைன்னு சொல்லலாம். அந்தமாதிரி நிலைமை இங்க இல்ல. இளைஞரணின்னு சொன்னா மக்கள் எங்களைத்தான் கை காட்டுவாங்களே தவிர, மத்தக் கட்சிகளின் இளைஞரணியைச் சொல்ல மாட்டாங்க. இந்த மாதிரி ஏகப்பட்ட தனித்தன்மைகள் எங்ககிட்டே இருக்கு.

ஒட்டுமொத்தமா இளைஞர் காங்கிரஸ் எந்த கோஷ்டியில இருக்கீங்க?

(யோசித்துவிட்டு, தொடர்கிறார்) காங்கிரஸ்ல எத்தனை கோஷ்டி இருக்குதோ, அத்தனை பேரும் ஒண்ணா (!) இளைஞர் காங்கிரஸ்ல இருக்காங்க. ஆனா நாங்க மொத்தமா சோனியா கோஷ்டி. சமாளிப்புக்காகச் சொல்லல. காங்கிரஸ்ல கோஷ்டியோ - கோஷ்டி மோதலோ வந்துச்சுன்னா, தொண்டர்கள் அடுத்த கட்டத்துக்குத் தயாரா ஆகிட்டாங்கன்னு அர்த்தம். கட்சி வளருதுன்னு (!) அர்த்தம்.

இப்படி சப்பைகட்டு கட்டியே பேசினா, எப்படி தமிழ் நாட்டுல ஆட்சிக்கு வருவீங்க?

இதே கேள்வியைத்தான் சோனியாஜி என்கிட்டே கேட்டாங்க. தமிழகத்துல திராவிட சினிமா மாயை அதிகமா இருக்கு. எம்.ஜி.ஆரோட நடிப்பு, கலைஞரோட வசனம், ஜெயலிதாவோட நடனம் ஆகியவை ஏற்படுத்திய பாதிப்பு, இங்க மட்டுமே இருக்கு. பக்கத்துல இருக்குற புதுவையில இல்ல. இதுக்கு என்ன அர்த்தம்? அந்த மாயையை உடைக்கிற அளவுக்கு இங்க காங்கிரஸ் உழைக்கல. அதுக்குத் தகுந்த மாதிரி கடுமையா போராடினாத்தான் திராவிட - சினிமா மாயையை விலக்கிட்டு காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டு வர முடியும்னு சொன்னேன். அதே பதிலைத்தான் இப்பவும் சொல்றேன்.

இப்பவும் அரசியலுக்கு வர பல நடிகர்கள் தயாராகி வருகிறார்களே..

வரட்டும். ஒருவர் சார்ந்திருக்கும் துறை, அவர் எந்தத் துறைக்கும் வர தடையாக இருக்கக் கூடாது. அதேசமயம் வர்றதுன்னு முடிவெடுத்துட்டா, உடனே வந்துடணும். வரலைன்னு முடிவெடுத்தா, குடும்பத்தைப் பார்க்கவோ, மலையடிவாரத்துக்கோ, பொழுதைப் பார்க்கவோ கிளம்பிடணும். அதை விட்டுட்டு... (பெருமூச்சு விடுகிறார்)

ஜெயலலிதாவின் டெல்லி பிரஸ்மீட், என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்னு நினைக்கறீங்க?

உண்மையிலேயே ரொம்ப சந்தோஷமா இருக்கு (!) என்னா எந்த டெல்லியில சோனியாவைப் பற்றி தவறாகப் பேசினாரோ, அதே டெல்லியில 'நான் அப்படி சொல்லவே இல்லை' என பதிலங்க பல்டி அடித்தாரே - அதுதான் எங்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. மற்றபடி அடுத்த கட்டமெல்லாம் மேலிடம்தான் முடிவு செய்யணும். (புன்னகையாய் புன்னகை செய்கிறார்)

தமிழ் செம்மொழி, சேது சமுத்திர திட்டம் - இவற்றுக்கெல்லாம் நீங்க என்ன புதுசா சொல்லப் போறீங்க?

(ஆழமாக யோசிக்கிறார்) இப்போ நீங்க பக்து பேங்கல லோன் அப்ளை பண்றீங்க. அதுல ஒரு பேங்க் மட்டும்தான் உங்களுக்கு லோன் தருது. அப்படின்னா, லோன் தந்த பேங்க்தான் நல்ல பேங்க். அதேபோல எத்தனையோ அரசாங்கத்துகிட்ட மனு கொடுத்தாங்க. ஆனா அதை செயல்படுத்தினது காங்கிரஸ் அரசாங்கம். இதுக்கு மேல இதுல சொல்றதுக்கு எதுவுமில்லை. தெளிவா (!) புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். (பெரிதாய்ச் சிரிக்கிறார்)

காங்கிரஸ் தலைவராக உங்களை எப்போ சந்திக்கலாம்?

ஏன், தங்கபாலு இங்கிருந்து தானே தலைவரானாரு! அதனால கட்சியில உச்சத்தை எட்டணும்னு எல்லோருக்கும் ஆசை இருக்கும். அது மாதிரி எனக்கும் இருக்கு. ஆனா அதுக்கு முன்னால கட்சியையும், நம்மையும் பலப்படுத்திக்கணும். மத்ததெல்லாம் பிறகுதான்.

✍ இரா. முத்துக்குமார்

📷 ராஜன்

'சென்னை கார்னர் ஸ்பெஷல்' இவருக்கு மட்டும் 33%(!) 'இட ஒதுக்கீடு' செய்திருக்கோம்... ஓகேவா!

அழகே... அழகே!



ஸ்வைங் காமெடி!

இன்னும் ரொம்ப வருஷத்துக்கு உங்க மனசிலிருந்து எந்த நேரமும் டச் பண்ண முடியாது. ஏன்னா, செப். 28 நாரதகான சபா மினி ஹால்ல எனக்கு ஸ்பெஷல் சிரிப்பு வைத்தியம் கிடைச்சது. 'ஃப்ளைட்-172' ஆங்.. ஞாபகம் வருதா! 1970ல் மௌலி மேடையேற்றிய அவரோட மகேந்திரன், எஸ்.வி.சேகர்னு, மேடையே 'காமெடி கட்டிச்சு! நாடகத்தில் இருந்த சில விஷயங்களைக் காண்பிச்சாங்க. ஒரு பாக்கெட் பாப்கார்னுக்கு, ஒரு பாப்கார்ன் பதம்னு சொல்லுவாங்களே! அதே மாதிரி, உங்களுக்காக ஒரு காமெடி விஷயம் பிளே பண்ணட்டா! மௌலி ஒரு நாதஸ்வரக் கலைஞர். ஒரு வேற்று மொழிக்காரரிடம் இங்கிலீஷில் பேசும் சீன் இது.

"வாட் டு யூ டு?"

"ஐ டு நாதஸ்வரம்!"

"நாதஸ் வரம்?"

"என் நாதஸ்வரம்! எ லாங் பைப். வித் ஹோலஸ். ஐ அப்ளை ஏர். ஒன்லி ஏர். நாட் வாட்டர். இட் புரொடியூஸ் சவுண்ட்!"

"சவுண்ட்... யூ மீன் லவுட் அம்ப்ளிஃபையர்?"

"நோ.. நோ.. வீ சவுண்ட் பார்ட்டி. நோ! ஐ கிவ் ஏர் இன் டாப். இட் கிவ் மியூசிக்."

"ஓ மியூசிக். (அருகிலிருப்பவரைக் காட்டி) ஹூ இஸ் ஹி?"

"ஹீ பிளே தவில்."

"டவல்?"

"நோ டவல்.. தவில்! இட் இஸ் போத்சைட் சவுண்ட். பட் லெஃப்ட் பீட் வித் ஸ்டிக். இஸ் டண்டணக்க டக்க டக்க.."



முதல் நாடகமாம். 1987லேர்ந்து [illegible] சேவைகளில் வெற்றி நடை போட்டுச்சு. இப்ப அந்த விமானம் 'விசிடி-டிவிடி' வடிவத்துல வந்திருக்கு. அதை வெளியிட்ட ஃபங்ஷன்தான் இது. நாகேஷ், கமல், மனோரமா, பார்த்திபன், ஒய்.ஜி. கோனாருன்னு சொல்வாங்களோ!

இப்படிப் போகுது இந்த நான்ஸ்டாப் காமெடி ஃப்ளைட்!

கமல் பேசினார். ஆனா அதிகம் இங்கிலீஷ் வார்த்தைகளோட! அதை அவரே கிண்டல் பண்ணி, "இனிமே எல்லாவற்றையும் தமிழ்ப்படுத்தணும்னா முடியாது. பஸ், பென்சிலெல்லாம் இனி தமிழ்தான்னு" முத்தாய்ப்பாச் சொன்னார்.

தொண்டை சரியில்லாத அந்த கஷ்டத்திலேயும், நாகேஷ் எல்லோரையும் சிரிக்க வைச்சாரு. "நான் பேசினா ஏழு ஸ்ருதியும் சேர்ந்து வருது. கோரஸாப் பாடுவாங்க. ஆனா கோரஸாப் பேசுறவன் நான் தான்"னு கிச்சு கிச்சினார்.

ஓ.கே. மௌலியின் இந்த ஃப்ளைட்-172, இனி அடுத்த ஜெனரேஷனோட காமெடி வானத்திலேயும் சந்தோஷமா பறக்கும்... ஸ்வைங்.!

ஏர்ஹோஸ்டஸ் லஜ்ஜாவதி

'...நேயங்கள் தெரிவிக்கிறேன்' என்ற இறுதி வார்த்தைகளை வாசகமாகப் பயன்படுத்தி ஆளுங்கட்சி நாளிதழ் 'சூரி' செய்திகளைத் தந்து வருவதை எதிர்க்கட்சியின் அதிகாரப் பூர்வ நாளேடு காட்டமாக விமர்சித்ததல்லவா! அதற்கு மறுநாளே சூரிய டீவியில் அதே பாணியில் செய்திகள் வாசிக்கப்பட்டன. விமர்சித்த தரப்புக்குக் கடுமையான சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

சினிமாக்காரர்கள் தங்களுக்கு அம்மா மீதுள்ள பற்றை 'அப்பாயின்ட்மென்டுக்கு நன்றி. அதிசியக்கு நன்றி' என பச்சை விளம்பரம் மூலம் வெளிப்படுத்தி காரியத்தைக் கச்சிதமாக முடித்துக் கொண்டது லாட்டரி அதிபர்களை உசுப்பேற்றியுள்ளதாம். இனி டெய்லிகள் காட்டுல மழைதான்!

'கிஜா' வெற்றி பெற்றவுடன் ஒட்டுவதற்காக, அரசியல் தொடர்புடன் போஸ்டர்கள் தயார் நிலையில் இருந்ததாம். ஆனால் பாவம்! ரிசல்ட் தெளிவாகக் கிடைக்கவே அவ்வளவும் குப்பையில் போட்டுள்ளார்களாம். இதைத்தான் ஆர்வக் கோளாறுன்னு சொல்வாங்களோ!

தொண்டர்களின் சில்லறை வம்புப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக தினமும் கட்சி அலுவலகத்துக்கு வரும் சமீபத்திய அணுகுமுறையில் வேண்டும் மிகவும் அசந்து போயிருக்கிறாராம். அதனால் விரைவில் அவருக்கு 'வெயிட்டான' பதவியைத் தருமாறு ரத்தங்களே சிபாரிசு செய்கிறார்களாம்.

உள்ளாட்சி இடைத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளின் 'பங்களிப்பு' திருப்திகரமாக இல்லையாம். இதனை ஆராய, வரும் வாரங்களில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற இருக்கிறதாம். அப்போது காரம் கூடுதலாகவே இருக்குமோ!

பொலிட் பீரோ



கலை



இதோ உங்கள் சிநேகிதி!

நிலாவைக் காட்டி குழந்தைக்கு சாதம் ஊட்டுவதைப் போல, குட்டிக் குட்டிக் கதைகளையும், டிப்ஸ்களையும் இளைஞர்களுக்கு தமது எழுத்துகள் மூலம் ஊட்டி முன்னேற்றப் பாதையில் கூட்டிச் செல்கிறார் க. அபிராமி. பார்ப்பதற்கு ஒரு மாணவி போல் தோன்றினாலும், இவரது கட்டுரைத் தொகுப்பு கல்லூரிகளில் பாட நூலாக பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. இவரது 'செய்தியே சுவாசமாய்' எனும் நூல் தமிழ்நாடு செய்தியாளர்கள் சங்கத்தின் இலக்கிய ஜாம்பவான் விருதைப் பெற்றுள்ளது. இவர் அகிலனின் எழுத்துலக வாரிசு என்பது குறிப்பிடத்தக்கது. நமது சி.ஜ.பி. பகுதிக்காக அவரிடம் பேசினோம்.

கம்ப்யூட்டர் ஃபேஷன், டைம் மேனேஜ்மெண்ட் இப்படி பல வித்தியாசமான விஷயங்கள் பற்றி எப்படி உங்களால எழுத முடியுது?

எனக்கு படிக்கிறதுல ரொம்ப ஆர்வம் இருக்கு. பல துறைகளில் ஈடுபாடு இருக்கு. ஜர்னலிஸம், பெயிண்டிங், கம்ப்யூட்டர்ஸ் பிடிக்கும். இலக்கியம் படிச்சிருக்கேன். இந்த இண்ட்ரெஸ்ட் தான் என்னை எழுதத் தூண்டுதுன்னு நினைக்கிறேன். ரொம்ப விரிவாப் போகாம, ஒரு விஷயத்தை அறிமுகப்படுத்தற மாதிரிதான் என்னோட எழுத்துகள் அமைஞ்சிருக்கு.

நீங்க யாருக்காக எழுதறீங்க?

என்னோட மெயின் டார்கெட் யூத் தான். விண்டோஸ் பத்தி எழுதினாலும் சரி, முன்னேற்றக் கட்டுரைகள் எழுதினாலும் சரி, நான் முக்கியமா அவங்களுக்காகத்தான் எழுதறேன். என்னுடைய புத்தகங்கள் அவர்களுடைய கல்வி, வேலை வாய்ப்பு, வாழ்க்கை முறை இவற்றைத்தான் முக்கியமா ஃபோகஸ் செய்துகிட்டிருக்கு.

இப்ப இருக்கற யூத் ரொம்ப நல்லா சிந்திக்கிறாங்க. அவங்களுக்கு அட்வைஸ் எல்லாம் கொடுத்து போர் அடிக்க நான் விரும்பலை. அவங்களோட வளர்ச்சிக்கு ஒரு சின்ன தூண்டுகோலா இருந்தா அதுவே போதும்.

சுய முன்னேற்றம் சுயமாத் தானே வரணும்? அதை மத்தவங்க எப்படிச் சொல்லிக் கொடுக்க முடியும்?

எனக்குத் தெரிஞ்ச சின்னச் சின்ன விஷயங்களை, நான் ப்ராக்டிஸ் செய்து பார்த்துட்டு, 'அட இது நல்லா இருக்கே, இப்படிப் பண்ணலாமே' என்று தோன்றியதை மட்டும் தான் எழுதறேன். இப்படித்தான் வாழணும் என்று அட்வைஸ் பண்ணறதில்லை. உங்களுக்குப் பிடிச்ச விஷயங்களை உங்க நண்பர்கள்கிட்ட நீங்க எப்படி ஷேர் பண்ணிப்பீங்களோ, அப்படித்தான் நானும் செய்யறேன். இது ஒரு சிநேகமான முயற்சி, அவ்வளவே!

அது சரி, நீங்க குடுக்கிற டிப்ஸை நீங்களே ஃபாலோ பண்ணுவீங்களா?

கட்டாயமா.

உங்களுக்குப் பிடிச்ச எழுத்தாளர் யார்?

ஜெஃப்ரி ஆர்ச்சர். இவர் ஒரு நாவல் ஆசிரியரா இருந்தாலும், சுய முன்னேற்றம் தொடர்பான பல நல்ல சங்கதிகள் இவரோட புக்ஸ்ல நிறைய இருக்கு. தமிழ்ல எனக்குப் பிடிச்ச எழுத்தாளர்கள் எங்க தாத்தா, நா. பார்த்தசாரதி, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் போன்றவர்கள்.

சரி, இலக்கியத்தை எப்ப அணுகப் போறீங்க?

கதை, கவிதை எழுத நிறைய அனுபவம் தேவை. இப்போதைக்கு நிறைய வாசிக்கிறேன்.

நீங்க எப்பவும் பேனாவும் கையுமா தீவிரமா யோசிச்சிகிட்டே இருப்பீங்களா?

அய்யய்யோ! அப்படியெல்லாம் கிடையாதுங்க. நான் ரொம்ப நார்மலான பொண்ணு. (சிரிக்கிறார்.)

அடுத்தது...?

ம்... டிசைனிங்ல கான்சென்ட்ரேட் பண்ணணும். நிறையப் படிக்கணும். நிறைய எழுதணும். எழுதிகிட்டே இருக்கணும்.

(ஆல் தி பெஸ்ட் ! - உங்க பேனாவுக்கு)

முகில் மருதன்







Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05" Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 "
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 10.10.2004

